## (ஓ) பன்னாட்டு வர்த்தகம்

**வர்த்தக நிலுவை**

தற்கால சுங்கப்பதிவுகளின்படியான மொத்த ஏற்றுமதிகள் (மீள ஏற்றுமதிகளையும் உள்ளடக்கும்) 1972இன் ரூ. 20,090 இலட்சங்களிலிருந்து, 1973 இல் ரூ. 6,080 இலட்சங்கள் அல்லது 30.3 சதவீத அதிகரிப்புக்கொண்டு ரூ. 26,170 இலட்சங்களாக அதிகரித்தன. இவ்வாண்டில் இறக்குமதிகளின் பெறுமதியும், 1972இல் காணப்பட்ட ரூ. 20,640 இலட்சங்களிலிருந்து ரூ. 27,150 இலட்சங்களாக உயர்வடைந்தது. இவ்வதிகரிப்பு ரூ. 6,510 இலட்சங்கள் அல்லது 31.5 சதவீதம் ஆகும். இதன்விளைவாக 1973இன் வர்த்தக நிலுவையானது முன்னைய ஆண்டின் ரூ. 550 இலட்சம்கொண்ட பணக்குறையுடனும், 1965ஆம் ஆண்டிலிருந்து பதிவுசெய்யப்பட்ட பணக்குறைகளுடனும் ஒப்பிடும்போது ரூ. 980 இலட்சங்கொண்ட பணக்குறையைக் காட்டுகின்றது. மொத்த ஏற்றுமதி வருவாய்களின் சதவீதத்திலான இப்பணக்குறை, 1972இன் 2.7 சதவீதத்திலிருந்து 1973[1]இல் 3.7 சதவீதமாக அதிகரித்தது. பின்வரும் அட்டவணை கடந்த பல வருடங்களின் நிலையினைச் சுருக்கித்தருகிறது.

**அட்டவணை II (ஓ) 1**
**வெளிநாட்டு வர்த்தகம் 1960 — 1973**

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | குறிகாட்டியின் எண்கள் (1967=100) | | | | வர்த்தக மாற்று வீதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலை | | |
| | *ஏற்றுமதிகள் (க.வ.பெ.) | இறக்குமதிகள் (கொ.க.கா) | வர்த்தக நிலுவை | முழு ஏற்றுமதிகளும் | முழு இறக்குமதிகளும் | முழு ஏற்றுமதிகளும் | முழு இறக்குமதிகளும் | |
| 1960 | 1832 | 1960 | — 128 | 87 | 133 | 122 | 83 | 148 |
| 1961 | 1733 | 1703 | + 30 | 90 | 107 | 112 | 82 | 136 |
| 1962 | 1808 | 1660 | + 148 | 97 | 108 | 109 | 77 | 142 |
| 1963 | 1731 | 1490 | + 241 | 93 | 93 | 109 | 85 | 129 |
| 1964 | 1876 | 1975 | — 99 | 102 | 114 | 111 | 105 | 105 |
| 1965 | 1949 | 1474 | + 475 | 105 | 86 | 113 | 100 | 112 |
| 1966 | 1700 | 2028 | — 328 | 96 | 118 | 107 | 98 | 109 |
| 1967 | 1690 | 1738 | — 48 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1968 | 2035 | 2173 | — 138 | 103 | 101 | 117 | 126 | 93 |
| 1969 | 1916 | 2543 | — 627 | 98 | 108 | 117 | 134 | 88 |
| 1970 | 2033 | 2313 | — 280 | 102 | 102 | 118 | 140 | 84 |
| 1971 | 1947 | 1986 | — 39 | 99 | 90 | 117 | 150 | 78 |
| 1972** | 2009 | 2064 | — 55 | 97 | 88 | 118 | 157 | 75 |
| 1973 | 2617 | 2715 | — 98 | 98 | 79 | 137 | 209 | 65 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

* மீள ஏற்றுமதி செய்யப்பட்டவையும் அடங்கும்.

** திருத்தியமைக்கப்பட்ட தரவு — அடிக்குறிப்பு 1ஐப் பார்க்கவும்.

1. 1972இற்கான ஆண்டறிக்கையில் 1972இன் மொத்த ஏற்றுமதிப் பெறுமதிகள் ரூ. 19,420 இலட்சமாகவும், இறக்குமதிப் பெறுமதிகள் ரூ. 20,450 இலட்சமாகவும் தரப்பட்டுள்ளன. அதன்பின்னர் இத்தரவுகள் முறையே ரூ. 20,090 இலட்சமாகவும் (மீள ஏற்றுமதியான ரூ. 1,490 இலட்சத்தையும் உள்ளடக்கிய) ரூ. 20,640 இலட்சமாகவும் திருத்தப்பட்டன. இது கப்பல் எரிபொருள் மூலமான வருவாய்கள், 1972இல் ரூ. 21 இலட்சமாகப் பதியப்பட்டு பின்னர் ரூ. 698 இலட்சமாகத் திருத்தப்பட்டதனால் ஏற்பட்டது.

தேயிலை, றப்பரிலிருந்து பெற்ற அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களால் தெங்கு உற்பத்தி வருவாய்களின் பெருமளவு வீழ்ச்சி மிகவும் எதிரீடுசெய்யப் பட்டது. இதன்விளைவாக மூன்று முக்கிய ஏற்றுமதிப் பொருட்களிலிருந்து பெற்ற பெறுகைகள் 1973இல் ரூ. 3,050 இலட்சங்களால் அதிகரித்தன. அருங்கல் வாயிலாகவும் "ஏனைய ஏற்றுமதிகள் வாயிலாகவும்" பெற்ற வரு வாய்கள் முறையே ரூ. 1,290 இலட்சம், ரூ. 1,280 இலட்சம்கொண்ட அதி கரிப்புகளைப் பதிவுசெய்தன. இறக்குமதிகளைப் பொறுத்தமட்டில் நுகர்வுப் பொருட்களின் பெறுமதி 1972இன் ரூ. 11,130 இலட்சத்திலிருந்து 1973இல் ரூ. 14,850 இலட்சத்துக்கு அதிகரித்தது. இவற்றில் அரிசி, கோதுமை மா, சீனி இவற்றிலான ரூ. 10,440 இலட்சம்கொண்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியானது 1972இன் தொடர்பான அதிகரிப்புடன் பார்க்கையில் ரூ. 4,420 இலட்சம்கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. இடைநிலைப் பொருட் களின் இறக்குமதிகளும் ரூ. 2,960 இலட்சத்தால் அதிகரித்து ரூ. 7,540 இலட்சமாக விளங்கின. அத்துடன் ஏனைய நுகர்வு, முதலீட்டுப்பொருட்களி லும் மிதமான அதிகரிப்புகள் காணப்பட்டன.

ஆயினும் இத்தகைய ஏற்றுமதி, இறக்குமதிப் பெறுமதிகளிலேற்பட்ட அதிகரிப்புகள் வர்த்தக அளவின் அதிகரிப்பினுல் முற்றிலும் ஏற்பட்டனவல்ல. ஒருபுறத்தில் 1973இல், குறிப்பாக இறுதி அரையாண்டில் உலகின் முதன் மைப் பண்டவிலைகளில் ஒரு பொதுவான அபிவிருத்தி காணப்பட்டது. இலங் கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகிய தேயிலை தவிர்த்து மற்றைய ஏற் றுமதிப் பண்டப்பொருட்கள் அனைத்தும் இவ்வித உயர்வினுல் நன்மையடைந் தன. மறுபுறத்தில் உலகம் முழுவதும் காணப்பட்ட பணவீக்க அமுக்கல்கள் இறக்குமதிப்பொருட்களின் விலையை உயரச்செய்தன. அத்துடன் உலக நாணய மீளிணைப்புகளும் 1973இல் ரூபாயில் மிகச்சிறிய மதிப்பிறக்கத்துக்கு வழிவகுத்து வர்த்தகப் பெறுமதிகளில் பணவீக்கப் போக்கிற்கும் காரணமாயமைந்தன. இத்தகைய காரணிகள், வர்த்தக நடவடிக்கையின் (1967-100) பெருமளவு வீழ்ச்சிக்கு அதாவது 1972இல் காணப்பட்ட 75இலிருந்து 1973இல் 65 ஆகக் குறைவதற்கு வழிவகுத்தன.

முன்னைய ஆண்டறிக்கைகளில்[1] பலமுறை குறிப்பிட்டுள்ளவாறு, சுங்கத் தரவுகளின்படியான எண்தொகைகள், குறிப்பாக இறக்குமதி எண்தொகைகள் கவனத்துடன் எடுத்தாளப்படவேண்டிய தேவையுடையன. சுங்கப்பகுதியால் உண்மையாக எக்காலப்பகுதியிலாவது தீர்த்துவைக்கப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதியிலிருந்து, சுங்கப்பகுதியால்[2] பதிவுசெய்யப்பட்டதாகவுள்ள பெறு மதி குறிப்பிடத்தக்களவு வேறுபடுகின்றது. இத்தரவுகள், உணவு ஆணையாள ரின் உண்மையான இறக்குமதிகள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதிகள் மற்றும் கிடைக்கூடிய ஏனைய இறக்குமதி விடயங்கள் பற்றிய நம்பிக்கையான தரவுகள் என்பனவற்றினுதவியுடன் திருத்தப்படவேண்டியுள் ளன. எடுத்துக்காட்டாக, 1973 திசெம்பர் மாதத்துக்கான மொத்த இறக்கு

1. 1972ஆம் ஆண்டறிக்கையில் 151ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.
2. இது ஏற்றுமதிகளின் பெறுமதிகளுக்கும் ஏற்புடையதாகும்.

மதிகள், முன்னைய பதினொரு மாதங்களின் ரூ. 2,090 இலட்சம்கொண்ட மாதச்சராசரியிலிருந்து ரூ. 4,177 இலட்சம்கொண்ட என்றுமில்லாத தொகைக்கு அதிகரித்துள்ளது எனக் காட்டுகின்றன. சுங்கப்பதிவேடுகளின் இறக்குமதிப் புள்ளிவிபரங்களைப் பார்க்கையில் இத்திடீர் மாற்றம் பெற்றோலிய உற்பத்திப் பெறுமதியில் காணப்படலாம் என்று தெரிகின்றது. 1973ஆம் ஆண்டின் முதற் பதினொரு மாதங்களுக்கான ரூ. 290 இலட்சம்கொண்ட பெற்றோலிய உற்பத்தி இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதிக்கு எதிராக, திசெம்பர் மாதப்பெறுமதி ரூ. 2,660 இலட்சத்திற்குப் பெருமளவாக அதிகரித்தது. இம்முதல் பதினொரு மாதங்களில் உண்மையான இறக்குமதிகள் சில பதிவுசெய்யப்படாதிருந்து, அவை திசெம்பர் மாத எண்தொகையுடன் சேர்க்கப்பட்டிருந்ததே இதற்குக் காரணம்போலும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்படி 1973இன் பெற்றோலிய இறக்குமதிகள், ரூ. 2,740 இலட்சமாகவிருக்கையில் சுங்கத்திணைக்களத்தின்படி, இவை ரூ. 2,950 இலட்சமாக விளங்கின.

மேலே காட்டப்பட்ட குறைபாடுகள்காரணமாக அட்டவணை 11 (ஓ) 1 இலுள்ள சுங்கத்தரவுகள், அட்டவணை (ஓ) 2இல் சீராக்கப்பட்டுள்ளன. சுங்கத்தரவுகளின்படி 1973இன் அரிசி, மா, சீனி இறக்குமதிகள் முறையே ரூ. 2,700 இலட்சம், ரூ. 4,530 இலட்சம், ரூ. 3,210 இலட்சமாக விளங்கின. ஆனால் உணவு ஆணையாளரினால் இம்மூன்று பொருட்களிலும் செய்யப்பட்ட உண்மையான இறக்குமதிகள், முறையே ரூ. 3,220 இலட்சம், ரூ. 4,580, இலட்சம், ரூ. 3,340 இலட்சமாகும். வேறுவகையில் கூறின் இம்மூன்று பண்டப்பொருட்களைமட்டும் பொறுத்தவரை ரூ. 694 இலட்சத்தைச் சுங்கப்பகுதி குறைத்துப் பதிவுசெய்துள்ளது. மறுபுறம், சுங்கப்பகுதி பெற்றோலிய இறக்குமதிப் பெறுமதியை ரூ. 214 இலட்சத்தால் மேலதிகப்படுத்திக் காட்டியுள்ளது. எரிபொருள், கப்பல் எரிபொருள் ஆகிய ஏற்றுமதிகளின் பெறுமதியில் மற்றுமோர் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. ரூ. 1,337 இலட்சம்கொண்ட சுங்கப் பகுதிப் புள்ளிவிபரங்களில், உள்நாட்டுக்கப்பல் எரிபொருள் (ரூ. 1,107 இலட்சம்) இறக்குமதிசெய்யப்பட்ட கப்பல் எரிபொருள் (ரூ. 1 இலட்சம்) ஏனைய பெற்றோலிய உற்பத்தி (ரூ. 229 இலட்சம்) ஆக இருக்கையில், கப்பல் எரிபொருள், எரிபொருள் ஏற்றுமதிகளுக்காக கூட்டுத்தாபனத்தால் தரப்பட்ட புள்ளிவிபரங்கள் ரூ. 1,344 இலட்சமாகக் காணப்படுகின்றன. சுங்கத்தரவுகளின்படி இரத்தினக்கல் பெறுமதி ரூ. 1,408 இலட்சமாகும். ஆனால் அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் ரூ 1,528 இலட்சம்கொண்ட பெறுமதியைக் காட்டியுள்ளது. எனவே ஏற்றுமதிகளின் பெறுமதியில் இவ்வேறுபாடு சேர்க்கப்பட்டுள்ளது.

இச்சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டபின் மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 26,300 இலட்சத்துக்கும், இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 27,590 இலட்சத்துக்கும் வகைகூறியது. 1973இன் சீராக்கப்பட்ட வர்த்தக நிலுவை ரூ. 1,290 இலட்சம்கொண்ட உயர்ந்த பணக்குறையைப் பிரதிபலிக்கின்றது. இச்சீராக்கப்பட்ட வர்த்தக புள்ளிவிபரங்கள், ஏற்றுமதி, இறக்குமதிப் பெறுமதிகள் 1973இல் ஒரு அதிகரிக்கும் போக்கினைக் காட்டியதுமட்டுமன்றி ஏற்றுமதிகளிலும்பார்க்க இறக்குமதிகளின் பெறுமதி கூடுதலாக அதிகரித்தது என்பதையும் காட்டுகின்றது.

### அட்டவணை II (ஓ) 2

### வர்த்தகத் தரவுக்கான சீராக்கங்கள்

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| | 1972 | | 1973 | |
|---|---|---|---|---|
| | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் |
| 1. அரிசி, கோதுமை மா, சீனி என்பனவற்றின் பெறுகைகள் தொடர்பான உணவு ஆணையாளரின் தரவுகளுக்கும் சுங்கத் தரவுகளுக்குமிடையிலுள்ள வேறுபாடு ... | + 5.0 | | + 69.4 | |
| 2. மசகு எண்ணெயினதும், பெற்றோலிய பொருட்களினதும் இறக்குமதிகள் தொடர்பான பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரவுகளுக்கும், சுங்கத் தரவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு ... | + 149.0 | | — 21.4 | |
| 3. மோட்டார் வாகனங்களினது இறக்குமதிகளுக்கான கழிவு ... | — 12.0* | | — 4.3 | |
| 4. கப்பல் எரி பொருட்கள் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் தொடர்பான பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரவுகளுக்கும் சுங்கத் தரவுகளுக்கும் இடையிலான வேறுபாடு ... | | + 70.3 | | + 0.7 |
| 5. இரத்தினக் கல் ஏற்றுமதிகள் தொடர்பான இரத்தினக்கல் கூட்டுத் தாபனத்தின் தரவுகளுக்கும் சுங்கத் தரவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு ... | | + 3.4 | | + 12.0 |
| 6. மொத்தம் மேலேயுள்ள 1—5 வரை ... | + 142.0 | + 73.7 | + 43.7 | + 12.7 |
| 7. அட்டவணை II (ஓ) 1 இலிருந்தும், மேலேயுள்ள 6 இலிருந்தும் பெறப்பட்டபடி, சீராக்கப்பட்ட வர்த்தகத் தரவுகள்... ... ... | — 68.3 | | — 31.0 | |

—+ சொந்தப் பொதி, மீள இறக்குமதிகளுக்கான வழிகளையும் உள்ளடக்கும்.

மூலம்: இலங்கைசுங்கப்பகுதி, உணவு ஆணையாளர் திணைக்களம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்; அரச இரத்தினக் கல் கூட்டுத்தாபனம்; இறக்குமதி, செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களங்கள்

### ஏற்றுமதிகள்

சீராக்கப்படாத சுங்கத்தரவுகளினடிப்படையில் கடந்த ஐந்தாண்டுகளுக்கான முக்கிய ஏற்றுமதிப்பொருட்களிலிருந்து பெற்ற வருவாய்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. ஒப்பீட்டு நோக்கிற்கான இத்தரவுகள் சிறப்பு எடுப்பனவு உரிமை நியதிகளின்படி தரப்பட்டுள்ளன.

1973இல் தேயிலை, றப்பர் வாயிலாகப்பெற்ற ஏற்றுமதி வருவாய்கள் முறையே ரூ. 12,610 இலட்சங்களாகவும் (ரூ. 990 இலட்சம் அல்லது 70.6

சதவீதம்கொண்ட அதிகரிப்பு) ரூ. 5,920 இலட்சங்களாகவும் (ரூ. 3,270 இலட்சங்கள் அல்லது 125.7 சதவீதம்கொண்ட அதிகரிப்பு) அதிகரித்தன. தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு, ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாகும். எனினும் மொத்த ஏற்றுமதி வருவாயில் தேயிலையிலிருந்து பெறும் ஏற்றுமதி வருவாய்களின் பங்கு 1972இல் விளங்கிய 58 சதவீதத்திலிருந்து, 1973இல் 48 சதவீதமாகப் பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்தது. றப்பர் மூலமான ஏற்றுமதி வருவாய்களின் பெருமளவு அதிகரிப்பானது, க. ஏ. பெ. விலை இறாத்தலொன்றிற்கு 74 சதமாக கணிசமானளவு அதிகரித்ததும், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 1972இல் காணப்பட்ட 2,860 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1973இல் 3,540 இலட்சம் இருத்தல்களாக அதிகரித்தல் காரணத்தாலும் ஏற்பட்டது. மொத்த ஏற்றுமதிகளைச் சதவீதத்தில் பார்க்கையில் றப்பர் வாயிலாகப் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் 1972இல் விளங்கிய 13 சதவீதத்திலிருந்து 1973இல் 23 சதவீதமாக அதிகரித்தன. மறுபுறத்தில் முக்கிய தெங்குப்பொருட்கள், தேங்காய்கள் வாயிலாகப்பெற்ற வருவாய்கள் என்றுமில்லாதளவு குறைந்த விலையிலிருந்தன. எனவே மொத்த ஏற்றுமதிகளில் அவற்றின் பங்கு ஆகக் குறைந்தளவு 6 சதவீதம்கொண்ட வீழ்ச்சியையே காட்டியது. இது உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியைத் தொடர்ந்து கொப்பறா, தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகளில் தடை ஏற்படுத்தியதன்காரணத்தால் ஏற்பட்டது.

1973இன் ஏற்றுமதிகளின் அமைப்பில் முக்கியமாக விளங்குவது யாதெனில் மொத்த ஏற்றுமதி வருமானத்தில், மூன்று முக்கிய ஏற்றுமதிகளின் பங்கு 77 சதவீதமாகக் குறைந்ததும், முக்கியமான ஏற்றுமதி விடயமாக இரத்தினக் கற்கள் இடம்பெற்றமையும் ஆகும். தேங்காய் எண்ணெய், கொப்பரா, தேங்காய்த் துருவல், தேங்காய் என்பன 5.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தபோது இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் பங்கு 5.4 சதவீதமாக அதிகரித்தது. அதே சமயத்தில் ''ஏனைய ஏற்றிமதிகளின்'' பங்கு 10.5 சதவீதமாக அதிகரித்தது. ''ஏனைய ஏற்றுமதிகள்'' என்று வகைப்படுத்தப்பட்டவற்றில் முக்கிய விடயமாக கைத்தொழில் ஏற்றுமதிகள் விளங்கின. தெரிவுசெய்யப்பட்ட முக்கிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் (உணவு, குடிபானம், புகையிலை, ஆடைகள், அணியும் ஆடைகள், இரசாயனப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், தோல், றப்பர், மா, காகித உற்பத்திகள், உலோகமற்ற கனிப்பொருள் உற்பத்திகள்) மொத்தப்பெறுமதி 1972இல் காணப்பட்ட ரூ. 510 இலட்சங்களிலிருந்து 1973இல் ரூ 730 இலட்சங்களாக, 43 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஏனைய விவசாய, கைத்தொழிலல்லாத பண்டங்களின் ஏற்றுமதி வருவாய்கள் 1972இன் ரூ. 1,420 இலட்சங்களிலிருந்து 1973இல் ரூ. 310 இலட்சங்களாக அல்லது 12.7 சதவீதமாக பெருமளவில் அதிகரித்தது.

பொதுப்படையாக நோக்கும்போது, 1973இல் தேங்காய் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி பொதுவான ஏற்றுமதித் தன்மையைப் பாதித்திருப்பினும், இலங்கை ஏற்றுமதி அமைப்பு ஏனைய பல்வேறு ஏற்றுமதிகளை உள்ளடக்கும் முறையில் மாறுபட்டதற்கான சில அறிகுறிகள் தென்பட்டன.

## அட்டவணை II (ஓ) 3

### ஏற்றுமதிகளின் அமைப்பு 1969-73

| பண்டம் | பெறுமதி ப. இலட்சம் ரூபாய்களில் | | | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 |
| 1. தேயிலை ... | 1062 | 1120 | 1144 | 1162 | 1261 | 178.42 | 188.16 | 192.19 | 171.39 | 165.27 |
| 2. றப்பர் ... | 431 | 440 | 307 | 265 | 592 | 72.41 | 73.92 | 51.58 | 39.08 | 77.59 |
| 3. தெங்கு உற்பத்திகள் .. | 225 | 240 | 280 | 266 | 145 | 37.80 | 40.32 | 47.04 | 39.23 | 19.00 |
| 3.1 கொப்பரா .. | 26 | 23 | 24 | 52 | 4 | 4.37 | 3.86 | 4.03 | 7.69 | 0.52 |
| 3.2 தேங்காயெண்ணெய் | 108 | 116 | 149 | 132 | 27 | 18.14 | 19.49 | 25.03 | 19.47 | 3.54 |
| 3.3 தேங்காய்த் துருவல் | 87 | 98 | 103 | 78 | 111 | 14.62 | 16.46 | 17.30 | 11.50 | 14.55 |
| 3.4 தேங்காய்கள் | 4 | 3 | 4 | 4 | 3 | 0.67 | 0.50 | 0.67 | 0.59 | 0.39 |
| 4. இரத்தினக் கற்களும் அவை சார்பான கற்களும்... | 1 | 4 | 3 | 12 | 141 | 0.17 | 0.67 | 0.50 | 1.77 | 18.48 |
| 5. ஏனைய உள்ளூர் ஏற்றுமதிகள் ... | 156 | 191 | 196 | 218 | 346 | 26.21 | 32.09 | 32.93 | 32.15 | 45.35 |
| மொத்தஉள்ளூர்ஏற்றுமதிகள் | 1875 | 1995 | 1930 | 1993** | 2596** | 315.00 | 335.16 | 324.24 | 293.95 | 340.24 |
| மீளஏற்றுமதி செய்யப்பட்டவை | 41 | 38 | 17 | 16** | 21** | 6.89 | 6.38 | 2.86 | 2.21 | 2.88 |
| மொத்தம் ... | 1916 | 2033 | 1947 | 2009 | 2617 | 321.89 | 341.54 | 327.10 | 296.31 | 342.9 |

* பாவிக்கப்பட்ட மாற்று வீதங்கள் பின்வருமாறு:–

மூலம்: இலங்கைச் சுங்கம்

1969, 1970, 1971 – ஒரு சி. எ. உ. = ரூ. 5.95; 1972 – ஒரு சி. எ. உ. ரூ. = 6.78; 1973 – ஒரு சி. எ. உ. = 7.63.

** கப்பல் எரி பொருட்களையும் உள்ளடக்கும்.

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நியதிகளின்படி (பன்னாட்டு நாணய நிதியின் சிறப்பு எடுப்பனவு உரிமைகள்) கடந்த ஐந்தாண்டுகளாகச் செய்யப்பட்ட மொத்த ஏற்றுமதியின் சாதனையும் அட்டவணை 11 (ஓ) 3இல் தரப்பட்டுள்ளது. பன்னாட்டு நாணயப் பெறுமதிகள் அதிகரித்த நிலையில் தளம்புவதினால் சிறப்பு எடுப்பனவு உரிமைகள், அடிப்படையில் ஏற்றுமதிப் பெறுமதிகளை அளவிடுவது ஏற்புடையதாகத் தோன்றுகின்றது. காரணம், ரூபா நியதிகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை பெறுமதியில் பெருமளவு நிலையாக இருப்பதால், இதுவே ஏற்றுமதிப் பெறுமதிகளை அளவிடுவதற்கு ஏற்ற அளவுகோலாக விளங்குகிறது. இந்த அடிப்படையில் பார்க்கையில் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நியதிகளின்படி பெறப்பட்ட தேயிலை ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியுற்றிருப்பது தெரிகின்றது. தெங்கு ஏற்றுமதிகளில் பெற்ற வருவாய்கள் பெருமளவு வீழ்ச்சியுற, றப்பர், இரத்தினக்கற்கள் மற்றும் இன்னோரன்ன ஏற்றுமதிகளிலிருந்து பெற்ற வருவாய்கள், ரூபா நியதிகளிலும்பார்க்க சிறப்பு எடுப்பனவுகள் நியதிகளின்படி வீழ்ச்சியுற்றே தெரிகிறது.

தேயிலை.

உற்பத்தி.

1973இன் தேயிலை உற்பத்தி 4,660 இலட்சம் இருத்தலாகும். இது முன்னைய வருடத்திலும் மேலாக 50 இலட்சம் இருத்தல்கள் அல்லது 1 சதவீதம்கொண்ட வீழ்ச்சியொன்றாகும். 1965ஆம் ஆண்டில் உற்பத்தி 5,030 இலட்சமாக விளங்கிய உச்சமட்டத்தின் பின்னர், 1968இல் ஏற்பட்ட 90 இலட்சம் இருத்தல் கொண்ட அதிகரிப்பினைத் தவிர்த்து, தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடையும் ஓர் போக்கினைக் காட்டிவருகிறது. 1961இலிருந்து பதியப்பட்டவற்றுடன் ஒப்பிடுகையில் 1973இன் உற்பத்தி மிகக் குறைந்ததாகும்.

உயர அடிப்படையிலான உற்பத்தியின் பாகுபாடு உயர்பிரதேச தேயிலையின் அளவு 1971இன் 1,860 இலட்சம் இருத்தல்களிலிருந்து, 1972இல் 1,790 இலட்சம் இருத்தல்களுக்குக் குறைந்து,மீண்டும் 1973இல் 1,770 இலட்சம் இருத்தல்களுக்கு வீழ்ச்சியடைந்ததைக் காட்டுகின்றது. நடுத்தரப் பிரதேசத் தேயிலை 1971, 1972, 1973ஆம் ஆண்டுகளில் முறையே 1,860 இலட்சம் இருத்தல். 1,650 இலட்சம் இருத்தல், 1,550 இலட்சம் இருத்தல்களாக வீழ்ச்சியடைந்தது. தாழ்ந்த பிரதேசத் தேயிலை உற்பத்தி மட்டுமே இப் போக்கினின்றும் மாறுபட்டு விளங்கியது. இத்தேயிலை உற்பத்தி 1972இன் 1.260 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1973இல் 1,330 இலட்சம் இருத்தல்களாக அதிகரித்தது.

அட்டவணை II (ஒ) 4

தேயிலை உற்பத்தி — உயர அடிப்படையில்

| | 1972 | | 1973 | | 1972ஐ விட 1973இல் முழுமையான மாற்றங்கள் |
|---|---|---|---|---|---|
| | அளவு (ப.இ.இரு.) | % | அளவு (ப.இ. இரு.) | % | |
| உயர்ந்த பிரதேசம் ... | 179.4 | 38.1 | 177.6 | 38.1 | — 1.8 |
| நடுத்தரப் பிரதேசம் ... | 165.2 | 35.1 | 155.3 | 33.3 | — 9.9 |
| தாழ்ந்த பிரதேசம் ... | 126.0 | 26.8 | 132.9 | 28.6 | + 6.9 |
| மொத்தம் | 470.6 | 100.0 | 465.8 | 100.0 | — 4.8 |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

பாதகமான காலநிலையும், தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டில் ஏற்பட்ட வரட்சியும், 1973இன் உற்பத்தியின் வீழ்ச்சிக்குரிய பிரதான காரணிகளாயமைந்தன. உள்நாட்டுச்சந்தை விலைகள், அதிகரித்த உற்பத்திக்கான ஒரு ஊக்கத்தை அளிக்கவில்லை. உயர்பிரதேசத் தேயிலைக்கான கொழும்பு ஏலத்தின் சராசரித் தேறியவிலை, 1972இல் இருத்தலுக்கு ரூ. 1.99 ஆக விளங்கிய நிலையினின்றும் இருத்தலொன்றுக்கு ரூ. 2.09 ஆக 1973இல் அதி

கரித்தபோதிலும், எல்லாத் தேயிலைகளுக்கான பொதுவான சராசரி விலை 1972இல் இருத்தலொன்றுக்கு ரூ. 1.89 ஆக விளங்கிய அதே விலை மட்டத்திலேயே தொடர்ந்திருந்தது. இது, நடுத்தரப்பிரதேச தேயிலை விலை, இருத்தலொன்றிற்கு ரூ. 1.80இலிருந்து ரூ. 1.76 ஆகவும், தாழ்ந்த பிரதேசத் தேயிலை இருத்தலொன்றுக்கு ரூ. 1.89 இலிருந்து ரூ. 1 80ஆக வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஏற்பட்டதாகும். அதேசமயம் உற்பத்திச் செலவுகளும் அதிகரிக்கும்போக்கைக்காட்ட. அதனுல் உற்பத்தியாளரின் இலாபம் மிகக் கவலை தரும் நிலையில் கீழ்நோக்கிச் சென்றது அரசாங்கத்தின் நிலச்சீர்திருத்தம், நிலத்தைக் கையேற்றல் என்பன காரணமாக தேயிலைக் கைத்தொழிலில் நிலையற்ற தன்மை காணப்பட்டது. தேயிலைப் பயிர்த்தொழிலில் உரப் பயன்பாட்டின் குறைவு இவ்வீழ்ச்சியை மேலும் அதிகரித்தது. இது 1971இல் இருந்த 118.8 ஆயிரம் தொன்களிலிருந்து, 1972இல் 99.3 ஆயிரம் தொன்களாகவும் 1973இல் மேலும் 63.7 ஆயிரம் தொன்களாகவும் வீழ்ச்சியடைந்தது. தேயிலை உற்பத்தியாளர் தமது தொழிலிலிருந்து பெற்ற வருவாய் போதியதாக அமையவில்லை என முறையிட்டனர். இக்காரணிகள் யாவும் ஒன்று திரண்டு தேயிலை உற்பத்தியை வீழ்ச்சியடையச்செய்தன.

**ஏற்றுமதிகள்.**

அட்டவணை 11 (ஓ) 5, கொழும்பு ஏலம், லண்டன் ஏலம், "தனியார் விற்பனவுகள்'' வாயிலாகச் செய்யப்பட்ட தேயிலை விற்பனவு, ஏற்றுமதி அளவு உற்பத்திக்கான தரவுகளைக் கொண்டுள்ளது. உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பினும், தேயிலை ஏற்றுமதிகள், 1972இன் 4,190 இலட்ச இருத்தல்களிலிருந்து 1973இல் 4,540 இலட்ச இருத்தல்களாக, 350 இலட்சம் இருத்

**அட்டவணை II (ஓ) 5**

**உற்பத்தியும், ஏற்றுமதிகளும், கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட அளவுகளும் இலண்டன் ஏலங்களுக்குக் கப்பலிடப்பட்ட அளவும்**

பத்து இலட்சம் இருத்தல்களில்

| ஆண்டு | உற்பத்தி | ஏற்றுமதிகள் | கொழும்பு ஏலங்களில் விற்பனையான அளவு | இலண்டன் ஏலங்களுக்குநேரடியாகக் கப்பலிலிடப்பட்ட அளவு | தனிப்பட்ட விற்பனைகள்[1] |
|---|---|---|---|---|---|
| 1968 | 496 | 460 | 369 | 111 | 5 |
| 1969 | 484 | 445* | 387 | 88 | 5 |
| 1970 | 468 | 460* | 373 | 91 | 4 |
| 1971 | 480 | 443* | 393 | 73 | 5 |
| 1972 | 471 | 419* | 391 | 54 | 4 |
| 1973 | 466 | 454* | 410 | 46 | 4 |

1. சுங்கப் பதிவுகளிலிருந்து பெறப்பட்ட எண்தொகைகள் அடிப்படையில்

* உடனடித் தேயிலையையும் உள்ளடக்கியுள்ளது.

மூலங்கள்: தேயிலைக்கட்டுப்பாட்டாளரின் நிருவாக அறிக்கைகள், இலங்கைச் சுங்கம், கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்.

தல் அல்லது 8.4 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வேறுபாட்டிற்கு கையிருப்புக்களில் காணப்பட்ட மாற்றங்களே காரணமாகும். தேயிலேயின் உள்நாட்டு நுகர்வு 432 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1973இல் மெதுவாக 444 இலட்ச இருத்தல்களாக அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1973 இன் முதலாம், இரண்டாம், நான்காம் காலாண்டுகளில் ஏற்றுமதிசெய்யப்பட்ட ஏற்றுமதி அளவுகள், முன்னேய ஆண்டின் தொடர்பான காலாண்டுகளில் ஏற்றுமதிசெய்யப்பட்டவற்றிலும் பார்க்கக் கணிசமானளவு அதிகரித்துள்ளன. ஏற்றும்திசெய்யப்பட்ட அளவின் விரிவிற்கு கொழும்பு ஏலத்தின் மூலம் விற்கப்பட்ட தேயிலேயின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பும் (லண்டன் ஏலத்திற்கு கப்பலேற்றப்பட்ட தேயிலேயில் 80 இலட்சம் இருத்தல்கள்கொண்ட வீழ்ச்சியை மேலதிகமாக எதிரீடுசெய்தது) இருப்புச்சொத்துக்களின் வீழ்ச்சியும் காரணமாயமைந்தன. தனிப்பட்ட விற்பனவுமுறை மூலம் விற்கப்பட்ட தேயிலேயின் அளவு 40 இலட்சம் இருத்தல்களாக குறைந்த நிலேயிலிருந்தது.

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்.**

இலங்கையிலிருந்து ஐக்கிய இராச்சியம் செய்யும் இறக்குமதிகள் 1972 இல் காணப்பட்ட 74.3 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1973 இல் 72.3 இலட்சம் இருத்தல்களாக வீழ்ச்சியடைந்திருந்தாலும், அந்நாடு இலங்கைத் தேயிலேயின் முதன்மை வாங்குநர் என்ற தனது நிலேயைப் பேணிவந்தது. ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கைத் தேயிலேயின் ஏற்றுமதிகளின் சதவீதமானது 1972இல் காணப்பட்ட 17.8 சதவீதத்திற்கும், 1971 இன் 23.3 சதவீதத்துக்கும் எதிராக 1973 இல் 15.9 சதவீதமாகவே உள்ளது. 1973 இல் ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கான ஏற்றுமதிகளின் பெறுமதி, எல்லேயளவால் அதிகரித்தது. 1973 இல் இலங்கையின் ஏற்றுமதிகளில் முன்னேய ஆண்டின் 21.3 சதவீதத்துக்கு மாருக 22 சதவீதத்திற்கு ''ஒன்பது'' நாடுகள் வகை கூறின.

பங்களாதேசத்தின் தோற்றத்துடன் பாகிஸ்தான் அங்கிருந்து தேயிலே பெறும் வாய்ப்பினே இழந்து தனது உள்நாட்டுத் தேவையை நிறைவுசெய்வதற்கு இலங்கையில் தங்கியிருக்கவேண்டிய நிலே ஏற்பட்டது. இதன் விளேவாக 1971இல் இலங்கையின் ஏற்றுமதிகளில் 6.4 சதவீதத்தையே கொள்வனவுசெய்த பாகிஸ்தான், தனது பங்கினே 11.9 சதவீதத்துக்கு உயர்த்தி 1972 இல் இரண்டாவது பெரிய இறக்குமதி நாடாக விளங்கியது, 1973 இன் பாகிஸ்தானின் இறக்குமதிகள் ஐக்கிய இராச்சியத்துக்கு ஏறக்குறைய அடுத்த நிலேயில் விளங்கி சதவீதப்பங்கு 14.7 சதவீதத்துக்கு உயர்ந்தது. ஐ. அமெரிக்காவை நான்காம் இடத்திற்கு ஒதுக்கி அடுத்த முக்கிய வாக்குநராக ஈராக் விளங்கியது. ஐ. அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் 17 இலட்சம் இருத்தல்களாக அல்லது 3 சதவீதத்தால் அதிகரித்தபோது ஈராக்கிற்கான ஏற்றுமதிகள் 127 இலட்சம் இருத்தல்களால் அல்லது 36 சதவீதத்தால் அதிகரித்தன. முக்கியத்துவ வரிசையில் நிற்கும் ஏனேய நாடுகள் அவுஸ்ரேலியா, ஐக்கிய தென்ஞபிரிக்கா, ஐக்கிய அரபுக்குடியரசு, லிபியா ஆகும்.

**அட்டவணை (ஓ) 6**

**நாடுகளின் பகுப்பு அடிப்படையில் தேயிலையின் ஏற்றுமதிகளும் அவற்றின் சதவீதப் பங்குகளும்**

| | தேயிலை ஏற்றுமதியின் அளவு (ப. இ. ரு.) | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1972 | 1973 |
| 1. ஐரோப்பிய பொருளாதார சமூகம் (அ) ... | 89.5 | 100.0 | 21.3 | 22.0 |
| 1. 1 ஐக்கிய இராச்சியம் ... | 74.3 | 72.3 | 17.7 | 15.9 |
| 1. 2 அயர்லாந்துக் குடியரசு .. | 3.1 | 2.5 | 0.7 | 0.6 |
| 1. 3 டென்மார்க்கு ... | 1.0 | 1.0 | 0.2 | 0.2 |
| 1. 4 ஏனையவை ... | 11.1 | 24.2 | 2.7 | 5.3 |
| 2. ஐக்கிய அமெரிக்க இராச்சியம்... | 37.3 | 39.0 | 8.9 | 8.6 |
| 3. ஈராக் ... | 31.7 | 44.4 | 7.6 | 9.8 |
| 4. அவுத்திரேலியா ... | 22.3 | 24.4 | 5.3 | 5.4 |
| 5. பாக்கித்தான் ... | 49.9 | 66.8 | 11.9 | 14.7 |
| 6. தென்னுபிரிக்க ஒன்றியம் ... | 22.3 | 23.6 | 5.3 | 5.2 |
| 7. ஐக்கிய அரபுக் குடியரசு ... | 22.8 | 20.6 | 5.4 | 4.5 |
| 8. லிபியா ... | 27.2 | 19.5 | 6.5 | 4.3 |
| 9. ஐக்கிய சோவியத்து சோசலிசக் குடியரசு ... | ... | 2.2 | ... | 0.5 |
| 10. ஏனைய நாடுகள் ... | 116.2 | 113.1 | 27.7 | 25.0 |
| மொத்தம் ... | **419.3** | **453.6** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கைச் சுங்கப் பகுதி.

1. 1972ல் ஐரோப்பிய பொருளாதார அமைப்பு நெதர்லாந்து, பெல்ஜியம், லக்சம்பேக், பிரான்சு, மேற்கு சேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளைக் கொண்டிருந்தது. 1973ல் ஐக்கிய இராச்சியம் டென்மார்க், அயர்லாந்துக் குடியரசு ஆகிய நாடுகளையும் உள்ளடக்கிறது.

**கொழும்பு ஏலங்கள்.**

கொழும்பு ஏலங்களின் மூலமாக விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவில் ஒரு கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டு 1972 இல் காணப்பட்ட 3910 இலட்சம் இருத்தல்களுக்கு மாருக 1973இல் 4100 இலட்சம் இருத்தல்களை அடைந்தது. கொழும்பு ஏலங்கள் இலண்டன் ஏலங்கள் காரணமாக மேலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஏலங்கள் மூலம்பெறப்பட்ட தேயிலையின் மொத்த விற்பனவு 1973 இல் ரூ. 8078 இலட்சமாக விளங்கி 1972இல் இருந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 298 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டுகிறது. பெறுமான விகித விற்பனவு வரி குறைக்கப்பட்டபோது தேறிய விற்பனவு ரூ. 7750 இலட்சமாக விளங்கக்கூடும்.

1973இல் ஐம்பது விற்பனைகள் நடைபெற்றன. அவற்றுள் முதலாவது, மூன்ருவது, காலாண்டுகள் ஒவ்வொன்றும் 13 விற்பனைகளையும் இரண்டாவது நான்காவது காலாண்டுகள் ஒவ்வொன்றும் 12 விற்பனைகளையும் கொண்டதாய் விளங்கின. சராசரியாக ஒவ்வொரு விற்பனையிலும் கிட்டத்தட்ட 85 இலட்சம் இருத்தல்கள் கொண்ட தேயிலை எடுத்தாளப்பட்டது.

## அட்டவணை II (ஓ) 7

## தேயிலை உற்பத்திகளும், ஏற்றுமதிகளும், விலைகளும் — 1969-1973

| ஆண்டு | உற்பத்தி ப.இ.இரு. | ஏற்றுமதிகள் அளவு ப.இ.இரு. | ஏற்றுமதிகள் க.வ.பெ. விலை இரு.ரூ. | கொழும்பு ஏலவிற்பனையின் தேறியசராசரி (இருத்தலொன்றுக்கு ரூபாய்) உயர்ந்த பிரதேசம் | நடுத்தர பிரதேசம் | தாழ்ந்த பிரதேசம் | எல்லாத் தேயிலைகளும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1969 ... | 484 | 445 | 2.39 | 1.80 | 1.40 | 1.38 | 1.53 |
| 1970 ... | 468 | 460 | 2.44 | 1.92 | 1.58 | 1.38 | 1.63 |
| 1971 ... | 480 | 443 | 2.56 | 1.94 | 1.72 | 1.76 | 1.81 |
| 1972 ... | 471 | 419 | 2.77 | 1.99 | 1.80 | 1.89 | 1.89 |
| 1973 ... | 466 | 454 | 2.77 | 2.09 | 1.76 | 1.80 | 1.89 |
| 1972 1-ம் காலாண்டு ... | 94 | 104 | 2.75 | 2.07 | 1.83 | 1.90 | 1.93 |
| 2-ம் காலாண்டு ... | 145 | 91 | 2.85 | 1.95 | 1.85 | 1.99 | 1.93 |
| 3 ம் காலாண்டு ... | 104 | 119 | 2.71 | 2.00 | 1.78 | 1.88 | 1.89 |
| 4-ம் காலாண்டு ... | 128 | 105 | 2.77 | 1.94 | 1.70 | 1.78 | 1.81 |
| 1973 1-ம் காலாண்டு ... | 104 | 122 | 2.79 | 2.19 | 1.74 | 1.79 | 1.91 |
| 2-ம் காலாண்டு ... | 147 | 106 | 2.77 | 1.89 | 1.71 | 1.79 | 1.80 |
| 3-ம் காலாண்டு ... | 93 | 115 | 2.76 | 2.23 | 1.83 | 1.78 | 1.94 |
| 4-ம் காலாண்டு ... | 121 | 111 | 2.79 | 2.08 | 1.81 | 1.86 | 1.93 |

மூலங்கள்: தேயிலைக் கட்டுப்பாட்டாளரின் நிருவாக அறிக்கைகள்,
இலங்கைச் சங்கம்,
கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்.

முன்னர் குறிப்பிட்டவாறு, 1973இல் ஏற்பட்ட உலகரீதியான பண்டச் செழிப்பினல் பாதிக்கப்படாதிருந்த முதன்மை உற்பத்திகள் சிலவற்றில் ஒன்ருகத் தேயிலை காணப்பட்டது. இவ்வாருக எல்லாத் தேயிலைகளுக்கான சராசரி கொழும்பு தேறிய ஏல விலைகள் 1973இல் மாற்றமடையாது இருத்த லொன்று ரூ. 1.89 ஆகவே தொடர்ந்திருந்தன. உயர் பிரதேசத் தேயிலைக்கான சராசரி விலை 1972இல் காணப்பட்ட 1.99 இலிருந்து 1973இல் 2.09 இற்கு அதிகரித்தது. ஆனல் இந்த அதிகரிப்பு நடுத்தர, தாழ்ந்த பிரதேச தேயிலை களில் ஏற்பட்ட வீழ்ச்சியால் குறைக்கப்பட்டது. முன்னையது இருத்தலொன் றிற்கு 4 சதத்தாலும் பின்னையது இருத்தலொன்றிற்கு 9 சதத்தாலும் வீழ்ச்சி யடைந்திருந்தன. இவ்வாறு 1973இல் கொழும்பு ஏலங்களின் மொத்த விற்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக விற்கப்பட்ட அளவின் அதிகரிப் பினல் ஏற்பட்டது.

**இலண்டன் ஏலங்கள்.**

இலண்டன் ஏலங்களுக்கு நேரடியாகக்கப்பலேற்றப்பட்ட அளவில் மேலு மொரு வீழ்ச்சி காணப்பட்டுத் தேயிலையின் உலகச்சந்தையாக விளங்குமளவிற்குக் கொழும்பின் முக்கியத்துவத்தை உயர்த்தியது. 1970இல் இலங்கை, கொழும்பில் விற்பனையாக்கப்பட்ட 3730 இலட்சம் இருத்தல்களுக்கு எதிராக, 910 இலட்சம் இருத்தல்கள் கொண்ட தேயிலையை நேரடியாக இலண்டன் ஏலங்களுக்குக் கப்பலேற்றியது. 1973இல் இந்த அளவு ஏறக்குறைய அரைவாசியாக 460 இலட்சம் இருத்தல்வரை வீழ்ச்சியுற்ற அதே வேளையில் உள்நாட்டில் விற்பனை

யாக்கப்பட்ட தேயிலையின் அளவு 4100 இலட்சம் இருத்தல்களாக அதிகரித்தது. இலண்டன் ஏலங்களுக்கூடாகச் சென்ற தேயிலையில் அரைவாசிக்கு மேற்பட்ட அளவு உயர்ந்த பிரதேசத் தேயிலையாகவே காணப்பட்டது.

### அட்டவணை II (ஓ) 8

### தேயிலை உற்பத்தி நாடுகளினால் இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலைகளின் அளவுகளும், அவைகளின் சராசரி விலைகளும்

| நாடுகள் | இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட அளவுகள் (ப. இ. கி. கிராம்கள்) | | | | சராசரி விலைகள் (கிலோ கிராமுக்கு புதிய பென்ஸ்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1971 | 1972 | 1973 | 1970 | 1971 | 1972 | 1973 |
| 1. வடஇந்தியா ... | 30.4 | 54.5 | 40.6 | 35.0 | 46.77 | 42.14 | 42.87 | 45.65 |
| 2. தென்இந்தியா ... | 2.5 | 2.0 | 1.4 | 1.1 | 40.42 | 39.90 | 37.88 | 37.79 |
| 3. இலங்கை | 36.5 | 32.2 | 22.0 | 19.6 | 46.98 | 45.33 | 45.47 | 45.42 |
| 4. ஆபிரிக்கா முழுவதும் | 37.4 | 35.2 | 46.1 | 44.7 | 44.00 | 43.01 | 40.49 | 41.19 |
| அவற்றுள் | | | | | | | | |
| கென்யா ... | 14.2 | 12.4 | 20.6 | 20.6 | 48.66 | 47.25 | 43.56 | 44.32 |
| உகண்டா ... | 3.2 | 3.8 | 5.2 | 2.3 | 46.64 | 43.64 | 40.97 | 41.92 |
| தன்சானியா ... | 5.0 | 5.0 | 5.8 | 6.5 | 48.49 | 45.39 | 41.71 | 42.55 |
| 5. மொத்தம் ... | 108.7 | 125.0 | 112.7 | 103.9 | 45.67 | 43.25 | 42.24 | 43.29 |

மூலம் : இலண்டன் தேயிலைத் தரகர் சங்கம்

இலண்டன் ஏலங்களில் விற்பனவு செய்யப்பட்ட தேயிலையின் மொத்த அளவு 1972இன் 1127 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1039 இலட்சம் இருத்தல்களாக 1973இல் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி இந்தியா இலங்கை, ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இலண்டனுக்குக் கிடைத்த தேயிலையின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்து தோன்றியதாகும். ஆயினும், 1973இல் ஆபிரிக்க தேயிலைகளின் பங்கு 43.9 சதவீதத்துக்கு அதிகரித்தது அதே வேளையில் வட, தென் இந்தியா முறையே 33.7 சதவீதத்துச்கும் 1.1 சதவீதத்துக்கும் வகைகூற 19.7 சதவீதம்கொண்ட இலங்கையின் பங்கை 1972 உடன் தொடர்புபடுத்திப்பார்க்கையில் ஒரு சிறு வீழ்ச்சியைக்காட்டியது.

வழமைபோல,கிலோவுக்கு 45.42 பென்ஸ் ஆகிய இலங்கைத்தேயிலைக்கான சராசரி விலையானது, எல்லாத் தேயிலைகளின் சராசரி விலையினின்றும் மிக உயர்ந்ததாகவும், ஆயின் வட இந்திய தேயிலைக்களிக்கப்பட்ட விலையிலும் எல்லையளவால் சற்றுக் குறைந்தும், கென்யாவினல் கொடுக்கப்படும் விலையிலும் பார்க்கச் சற்று உயர்ந்ததாயும் உள்ளது. எவ்வாருயினும் இலங்கைத் தேயிலைக்கான 1973இன் விலை முன்னையாண்டின் சராசரி விலையான கிலோவுக்கு 45.47 பென்சிலிருந்து வீழ்ச்சியடைந்ததைக் காட்டியது. இது, தென்னிந்தியா நீங்கலாக, ஏனைய முக்கிய உற்பத்தியாளரிடமிருந்துவரும் எல்லாத்தேயிலைக்கான பதிவுசெய்யப்பட்ட விலை அதிகரிப்புகளிலிருந்து மிகப்பெருமளவாக மாறுபட்டு விளங்குகிறது. 1973இல் காணப்பட்ட கவலைதரும் பண்பு பண்டவிலைகளின் பொதுவான செழிப்பிற்குள் அடங்காத சில முதன்மைப் பொருட்களுள் தேயிலையும் ஒன்ருக விளங்குவதாகும்.

**பொட்டணங்களிலான தேயிலே.**

அட்டவணை 11 (ஒ) 9 1966 இலிருந்து இத்திகதிவரை அடைக்கப்பட்ட தேயிலேயின் அளவு, பெறுமதி, க. ஏ. பெ. விலே என்பவற்றைத் தருகின்றது. 2 இலிருந்து 3 சதவீதம் கொண்ட[1] ஒரு பகுதியை மாற்றக்கூடிய ரூபாக் கணக்கில் வரவு வைக்கலாமென்று வழங்கப்பட்டிருப்பினும், 1972இல் பெரு மளவு அதிகரிப்பான ரூ. 1024 இலட்சமாக விளங்கிய, அடைக்கப்பட்ட தேயிலே யின் மூலம் பெறப்பட்ட ஏற்றுமதி வ்ருவாய்கள், 1973இல் ரூ. 924 இலட்சம் கொண்டதாக வீழ்ச்சியடைந்தன. இதற்கு ஏற்றுமதி அளவும், பெறப்பட்ட க. ஏ. பெ. விலேயும் வீழ்ச்சியுற்றமையே காரணமாகும்.

**அட்டவணை II (ஒ) 9**

**பொதியிட்ட தேயிலே ஏற்றுமதிகள்**

| ஆண்டு | (அளவு ப. இல. இரு.) | பெறுமதி (ப. இ. ரூ.) | க. ஏ. பெ. விலே இரு. ஒன்றிற்கு |
|---|---|---|---|
| 1966 | 3.7 | 10.3 | 2.79 |
| 1967 | 4.7 | 12.0 | 2.53 |
| 1968 | 9.4 | 29.4 | 3.13 |
| 1969 | 15.2 | 37.3 | 2.46 |
| 1970 | 17.0 | 41.6 | 2.44 |
| 1971 | 22.7 | 60.6 | 2.67 |
| 1972 | 32.4 | 102.4 | 3.16 |
| 1973* | 30.4 | 92.4 | 30.4 |

* தற்காலிகமானவை. மூலம்: இலங்கைச் சுங்கம்.

**உடனடித் தேயிலே.**

1972இல் 36.2 சதவீதத்தால் 2,54,492 இருத்தல்களுக்கு வீழ்ச்சியடைந் திருந்த உடனடித்தேயிலே உற்பத்தி, 1973இல் 4,74,573 இருத்தல்களாக விளங்குமளவிற்குப் பெருமளவாக அதிகரித்து 86.5 சதவீதத்தாலான அதி கரிப்பைக் காட்டுகிறது. ஏற்றுமதிகளின் அளவு 1972இன் 2,35,804 இருத் தல்களிலிருந்து 4,44,990 இருத்தல்களாக அதிகரித்தது. உடனடித்தேயிலேக் கான முக்கிய சந்தைகள் ஐக்கிய இராச்சியம் (63.7 சதவீதம்) சேர்மன் சமஷ்டிக் குடியரசு (14.0 சதவீதம்), அவுத்திரேலியா (8.0 சதவீதம்), யப்பான் (6.9 சதவீதம்) என்பனவாகும்.

**தேயிலே ஏற்றுமதித்தீர்வைக் கழிவுத்திட்டம்.**

ஒன்றுதிரட்டிய நிவாரண நடவடிக்கையின் ஒரு பகுதியாக தேயிலேக் கைத்தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கும் நிமித்தம் ஒற்ரேபரில் அறிவிக்கப் பட்டபடி தேயிலேயின்மீதான ஏற்றுமதித் தீர்வைக் கழிவுகளின் வழுக்கியளவு,

1 அடைக்கப்பட்ட தேயிலே மூலமாகப் பெற்ற வெளிநாட்டு வருவாய்களில் 2 சதவீதத்தை மாற்றக்கூடிய ரூபாய்க்கணக்கில் வரவு வைக்கக்கூடியதாயிருந்தது. 1973 நவெம்பர் 2 இல் இது, 3 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

1973 நவம்பர் 5இன் விற்பனையிலிருந்து உயர்த்தப்பட்டது. ரூ. 1.40இலிருந்து ரூ. 1.93 வரை* விலையை அடைந்த தேயிலைகளின்மீதான ஆகக்கூடிய நிவாரணம் நடுத்தர பிரதேச, தாழ்ந்த பிரதேச தேயிலைகளைப் பொறுத்தமட்டில் இருத்தலொன்றிற்கு 15 சதத்திலிருந்து 20 சதத்துக்கும் உயர்பிரதேசத் தேயிலையைப் பொறுத்தமட்டில் 10 சதத்திலிருந்து 15 சதத்துக்கும் உயர்த்தப்பட்டது.

கீழுள்ள அட்டவணை 11 (ஒ) 10 ஏற்றுமதித் தீர்வைக் கழிவு செலுத்தப்பட்ட தேயிலையின் அளவு விவரங்களை, ஒவ்வொரு பகுப்புத் தேயிலைக்கும் கொடுக்கப்பட்ட கழிவுப்பெறுமதியுடன் தருகின்றது. 1973இல் கொழும்பு ஏலங்களில் விற்பனைக்கெடுக்கப்பட்ட 4,100 இலட்ச இருத்தல்கள்கொண்ட தேயிலையில், 2,480 இலட்ச இருத்தல்கள் அல்லது 60.5 சதவீதம் ஏற்றுமதி வரிக்குட்படுத்தப்பட்டது. 1973இல் கழிவுக்குத் தகைமைபெறும்முறையில் தேயிலைகளின் அளவு, குறிப்பாக தாழ்ந்த பிரதேசத்தேயிலை பெருமளவில் அதிகரித்தது. சென்றாண்டில் ரூ. 100 இலட்சம் கழிவாகக் கொடுக்கப்பட்டதற்குமாறாக 1973இல் ரூ. 216 இலட்சம் கொடுக்கப்பட்டது.

அட்டவணை II (ஓ) 10

தேயிலைத் தீர்வைத் தள்ளுபடித் திட்டத்திற்குட்பட்ட தேயிலையின் அளவும், தள்ளுபடியின் பெறுமதியும் – 1973

| | தள்ளுபடிக்குட்பட்ட அளவு (இருத்தல்கள்) | | செலுத்தப்பட்ட தள்ளுபடியின் பெறுமதி (ரூபாய்கள்) | |
|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1972 | 1973 |
| உயர்பிரதேசம் | 42,124,464 | 68,435,218 | 2,186,484 | 5,434,259 |
| நடுத்தரப் பிரதேசம் | 64,101,230 | 92,459,311 | 4,692,223 | 8,514,925 |
| தாழ் பிரதேசம் | 41,448,069 | 87,682,667 | 3,064,142 | 7,637,101 |
| மொத்தம் | 147,673,763 | 247,977,196 | 9,942,849 | 21,586,285 |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,

**பன்னாட்டுத் தேயிலைக் கூட்டாலோசனைகள்**

உணவு, விவசாய அமைப்பின்கீழ் தேயிலைக்கான பன்னாட்டு அரசாங்கக் குழு 1973 யூலை 2-4 வரை உரோமில் நடைபெற்ற ஆறாவது அமர்வில், துருக்கியையும், பப்புவா (புதிய கினியா)வையும் உள்ளடக்கிய நிலையில் 1973/74இல் ஆண்டின் உலக அனுமதிப்பங்கு அளவுகள் 657 ஆயிரம் மெற்றிக் தொன்

* 1972 நவெம்பர் 11இல் ஏற்கெனவே நடைமுறைக்குவந்த முந்திய சீராக்கம் ஆகக்கூடிய கழிவைத் தாழ்ந்த பிரதேச, மத்திய பிரதேசத் தேயிலைகளைப் பொறுத்தமட்டில் 10 சதத்திலிருந்து 15 சதத்துக்கும், உயர் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் 5 சதத்திலிருந்து 10 சதமாகவும் அதிகரித்தது.

களாகும் என்றும், 1974/75இற்கானவை 681 ஆயிரம் மெற்றிக் தொன்களா கும் என்றும் ஏற்றுக்கொண்டது. இம்மதிப்பீடுகள் எதிர்பார்க்கப்பட்ட குறை வீழ்ச்சிக்கான 7 சதவீதக் குறைப்பினையும் உள்ளடக்குகின்றன.

1973/74இற்கான 6,57,000 மெற்றிக் தொன்களில், இந்தியாவினதும் இலங்கையினதும் அனுமதிப்பங்குகள் முறையே 217,800 மெற்றிக் தொன்க ளாயும், 214,200 மெற்றிக் தொன்களாயும் விளங்கின. (உலகம் முழுவதற்கு மான 1974/75 இன் அனுமதிப்பங்குகள் 681,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தபோது இவ்விரு நாடுகளின் அனுமதிப்பங்குகளும் முறையே 224,300 மெற்றிக் தொன்களுக்கும் 220,300 மெற்றிக் தொன்களுக்குமாக அதிகரிக் கப்பட்டன.) 1973/74இற்கான அனுமதிப்பங்குகள் வழங்கப்பட்ட ஏனைய முக்கிய தேயிலை ஏற்றுமதி நாடுகளாக கென்யா (56.000 மெற்றிக் தொன்) இந்தோனேசியா (43,200 மெற்றிக் தொன்), ஆர்ஜென்ரைனு (28,800 மெற் றிக் தொன்), பங்களாதேசம் (26,000 மெற்றிக் தொன்) உகண்டா (23,700 மெற்றிக் தொன்), மாலாவி (23,200 மெற்றிக் தொன்), துருக்கி (20,000 மெற்றிக் தொன்), மொசாம்பிக் (18,800 மெற்றிக் தொன்), சாயிரா குடி யரசு (14,100 மெற்றிக் தொன்), தன்சானியா (10,200 மெற்றிக் தொன்) ஆக விளங்கின. உணவு விவசாய அமைப்பின் செயலகம், உலக அனுமதிப் பங்குகளுட் சேர்க்கப்படாத நாடுகளின் ஏற்றுமதிகளைப் பொறுத்தமட்டில், சீனக்குடியரசின் ஏற்றுமதிகள் 1973/74இல் 20,000 மெற்றிக் தொன்களாகும் என்று மதிப்பிட்டிருந்தது.

ஆருவது அமர்வில் 1973/74இற்கானவும், 1974/75 இற்கானவும் தற்போ தையஉடன்படிக்கை முடிவடைந்தபின்னர் ஐந்து வருடங்களுக்கான பன்னுட்டு ஒழுங்கொன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்ற பொதுவான கருத்து நிலவி யது. உலக தேயிலைக் கைத்தொழிலிற்கான பயன்தரு விலைமட்டத்தை அடை வதற்கும் பாதுகாப்பதற்குமாக அனைத்தையும் உள்ளடக்கும் வலுவுடைய பல் துறை நோக்கு தேவைப்படுகின்றது என்பதிலும் உடன்பாடு நிலவியது. இத் தகைய வலுவுடைய பல்துறை நோக்கு சந்தைப்படுத்தல், ஊக்குவித்தல், ஏற்றுமதி ஒழுங்குவிதிகள் போன்ற இன்னேரன்ன துறைகளில் நடவடிக்கை களை அல்லது வழிமுறைகளை உள்ளடக்கும் என்று எதிர்பாரக்கப்பட்டது.

## தேயிலைக் கைத்தொழிலுக்கான ஒன்றுதிரட்டிய நிவாரண நடவடிக்கை.

உற்பத்திச் செலவு அதிகரித்தமையாலும், விலைகள் உயராது அதேயளவில் நிலைத்துநின்றமையாலும் சிறிதளவு இலாபத்துடன் கூட தேயிலைக் கைத் தொழில் இயங்குவது கடினமாயிருந்தது. மேலும் 1972இலும் 1973இலும் தொடர்ச்சியாக ஏற்பட்ட கடுமையான வரட்சி, தேயிலை உற்பத்தியைப் பாதித் ததுடன் தேயிலைத்தோட்டங்களின் பணப் பிரச்சனைகளையும் அதிகரித்தது. தேயிலைக் கைத்தொழிலுக்கு உதவுமுகமாக அரசாங்கம் 1974ஆம் ஆண்டிற் கான வரவுசெலவுத் திட்டத்தில் இக்கைத்தொழிலின் ஐந்தாண்டு அபிவிருத்திக் காகவும், மறுசீரமைப்புத் திட்டத்திற்காகவும் ரூ. 6250 இலட்சம் கொண்ட தொகையை ஒதுக்கியது. வருடாந்த திட்டமான ரூ. 1250 இலட்சம் ரூபாய்கள்,

உர உதவுதொகை (ரூ. 450 இலட்சம்) தேயிலைப் பெட்டிச் சட்ட உதவு தொகை (ரூ. 350 இலட்சம்) அதிகரித்த ஏற்றுமதித்தீர்வைக் கழிவு (ரூ. 140 இலட்சம்) அதிகரித்த மறுநடுகை உதவுதொகை (ரூ. 70 இலட்சம்) தோட்ட வீடமைப்புக் கான கூட்டுநிலைய வரிகளின் மேலான கழிவு (ரூ. 10 இலட்சம்) தொழிலாளருக்கு வேதன அதிகரிப்பு (ரூ. 170 இலட்சம்) விலைதளும்பல் நிவாரணம் காரணமாக ரூ. 60 இலட்சம் கொண்ட மிகுதித் தொகை என்பவற்றை அடக்கியிருக்கும்.

இத்துடன் கடன் மேலும் கட்டத்தவறியவர்களில் 75 சதவீத மானேர் வரை மத்திய வங்கி உத்தரவாதமும் (அபிவிருத்தி நோக்கத்திற்காக ரூ. 250 இலட்சம் கொண்ட சுழல் நிதியுடன் கூடிய கொடுகடன் உத்தரவாதத்திட்டம் ஒன்றும்) உருவாக்குவதற்கு எண்ணமிடப்பட்டது. இக்கடன்கள் மீள நடுகை, தொழிற்சாலையை நவீனமயமாக்குதல், சிறப்புக் காரணங்களில் தொழிற்படும் மூலதனத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் கடன்கள் வழங்கப் படும்.

ஒன்றுதிரட்டிய நிவாரண நடவடிக்கை, ஏறக்குறைய 172,000 ஏக்கர்களை சொந்தமாகக் கொண்டுள்ளதென மதிப்பிடப்பட்ட வெளிநாட்டுக் கூட்டு நிலையங்களை உள்நாட்டுடைமையாக்குவதையும், தோட்டபாதுகாப்பு, அபி விருத்தி தொடர்பான சில ஆகக்குறைந்த வழிமுறைகளையும் உள்ளடக்கிய தாயுள்ளது. நன்மைபெறுபவர்கள் ஐந்தாண்டு அபிவிருத்தி (1974-1978) திட்டம் ஒன்று சமர்ப்பிக்கவேண்டியுள்ளது. அது ஏற்கப்பட்ட நிலையில் இவர்கள் குறித்த இலக்கை அடைவது இவர்களின் பொறுப்பாகும். வேண்டுமென்றே தம்து கடப்பாடுகளைப் புறக்கணிப்போருக்கு வழங்கப்படும் உதவிகள் திருப்பி எடுக்கப்படுவதுடன் 1957இன் தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் எண் 51இன் சில எடுத்துரைக்கப்பட்ட சில திருத்தங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒன்றுதிரட்டிய நிவாரண நடவடிக்கையின் கீழ் பல்வேறு வழிமுறைகளும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும். பின்வரும் பந்திகளில் மிக முக்கியம் பெற்ற வழிமுறைகளின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

(அ) தேயிலை ஏற்றுமதித்தீர்வைக் கழிவுத் திட்டம்.

முன்னர் குறிப்பிட்டவாறு தேயிலை ஏற்றுமதித்தீர்வைக் கழிவுகளின் வழுக்கியளவு 1973 நவெம்பர் 5ஆம் திகதிய விற்பனையிலிருந்து திருத்தியமைக் கப்பட்டது. ஆகக்கூடிய நிவாரணம் தாழ்ந்த பிரதேச, மத்திய பிரதேச தேயிலைகளைப் பொறுத்தமட்டில் இறாத்தலொன்று 15 சதத்திலிருந்து 20 சதத்திற் கும், உயர்பிரதேச தேயிலைகளைப் பொறுத்தமட்டில் 10 சதத்திலிருந்து 15 சதத் துக்கும் உயர்த்தப்பட்டது. அதே நேரத்தில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் போது நிலவிய ஆகக்குறைந்த விலை, குறைந்த தரத் தேயிலை தயாரிக்கும் முயற்சி யில் ஈடுபடாதிருக்குமாறு உயர்த்தப்பட்டது. முன்பு கழிவுகள் இறாத்தலொன் றுக்கு ரூ. 1.35 இற்கும் ரூ. 1.95 இற்கும் இடைப்பட்ட விலை மட்டங்களின் மீதே செலுத்தப்பட்டன. தற்போது இறாத்தலொன்றுக்கு ரூ. 1.40 இற்கும் ரூ. 2.00 இற்கும் இடைப்பட்ட விலைமட்டங்கள்மீது செலுத்தப்படுகின்றன.

(ஆ) தேயிலை மீள்நடுகை உதவுதொகை

இத்திட்டம் 1973 நவம்பர் 3இலிருந்து நடைமுறைக்கு வந்தது. தேயிலை மீள்நடுகைக்காக அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட உதவுதொகை ஏக்கருக்கான ரூ. 3,750 இலிருந்து ஏக்கருக்கு ரூ. 4,750 ஆக அதிகரிக்கப்பட்டது. மீள்நடுகைக்கான அனுமதிப்பத்திரங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஆனல் 1973 நவம்பரின் பின் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளுக்கான தவணைக் கடன் சம்பந்தப்பட்டவற்றிற்கும் இத்திட்டம் பொருத்தமுடையதாக ஆக்கப்பட்டது.

(இ) உர உதவுதொகைத் திட்டம்.

இத்திட்டம் திசெம்பர் 4இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்திகதிக்கு முன்னர் 100 ஏக்கருக்கு பரப்பளவில் குறைந்த சிறிய தேயிலைத் தோட்டங்களுக்கே சந்தைவிலையின் அரைவாசி விலைக்கு அரசாங்கம் உரம் வழங்கியது. தற்போது பரப்பளவு கவனிக்கப்படாது எல்லா தோட்டங்களுக்கும் இவ்வுதவுதொகை விரிவாக்கப்பட்டுள்ளது.

(ஈ) தேயிலைப்பெட்டிச்சட்டக உதவுதொகை

இத்திட்டமும் 1973 திசெம்பர் 4இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்முன்னர் முழுத்தேயிலைப் பெட்டிச்சட்டகம், அரைத்தேயிலைப்பெட்டிச் சட்டகங்களின் தொகுதிகளுக்கான விற்பனவு விலைகள் முறையே ரூ. 9.88 ஆகவும், ரூ. 8.00 ஆகவும் விளங்கின. அரசாங்க ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் சட்டகத்தொகுதியை ரூ. 3.00 இற்கு வழங்குவதற்கு உதவுமுறையில் அரசாங்கம் உதவுதொகை வழங்கும். இவ்வுதவு தொகை வருமானவரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளது.

(உ) தோட்ட விடமைப்பு உதவுதொகை

அரசாங்கம், தொழிலாளர் தாம் வதிதற்குரிய இல்லங்களைக் கட்டுவதற்கும் திருத்தியமைப்பதற்கும் ஆக்கக்கூடிய 10 சதவீதம் வரையிலான கூட்டுநிலைய வரியின்மீது ஒரு தள்ளுபடியை வழங்க எண்ணியுள்ளது.

(ஊ) தோட்டத்துறைக்கு கூலி அதிகரிப்பு

அரசாங்கம், தோட்டத்தொழிலாளரின் கூலிகளை 10 சதவீதத்தால் அதிகரிக்கவேண்டுமெனத் தீர்மானித்துள்ளது. இதற்காக ரூ. 170 இலட்சம் செலவாகலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. தோட்டக் கைத்தொழில் அமைச்சு மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகள்வாயிலாக இத்தொகையைத் தோட்டத்துறைக்குப் பயன்படுத்துவதென்றும் முடிவுஎடுக்கப்பட்டுள்ளது. தேயிலைக் கைத்தொழிலுக்குச் சேரவேண்டிய சில நன்மைகளைப் பின்னெழுந்த சில நிகழ்சிகள் தடைசெய்துள்ளன. பன்னாட்டு எண்ணெய் நெருக்கடியைத் தொடர்ந்து உரங்கள், வேளாண்மை இரசாயனங்கள், கப்பற்கட்டண, உள்நாட்டுப் போக்குவரவு போன்ற இறக்குமதிச்செலவுகள் கைத்தொழிலின்மேல் மேலும் சுமைகளை

ஏற்படுத்தியுள்ளன. ஒரு இறாத்தல் தேயிலேக்கான சராசரி உற்பத்திச்செலவு முன்னேயாண்டிலும் பார்க்க ஏறக்குறைய 15 சதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டது. அண்மைக்கால நிகழ்ச்சிகள் காரணமாக இம்முழுத்திட்டம் பற்றிய ஆய்வு அவசியமானது.

**றப்பர்**

**உற்பத்தி**

1973இல் றப்பர் உற்பத்தி 1972இலும் பார்க்க 10 சதவீதமாக அதிகரித்து ரூ. 3,400 இலட்சம் இறாத்தல்களாக விளங்கியதென மதிப்பீடப்பட்டுள்ளது. உலகமுழுதும் ஏற்பட்ட பண்டச்செழிப்புடன் 1973இல் விலேகளும் உயர்மட்டத்தை அடைந்தன. எனினும், பாதகமான பருவகாலநிலே காரணமாக இச்சூழ்நிலேக்கேற்ப உற்பத்தி உயர்ந்திருக்கவேண்டிய அளவிற்கு உயரவில்லே. இவ்வுற்பத்தி அதிகரிப்பிற்கு மீளநடப்பட்ட பகுதிகளில் பால்எடுக்கப்பட்டதும், சென்ற ஆண்டுகளில் றப்பர் விலேயில் ஏற்பட்ட மந்தம் காரணமாகப் புறக்கணிக்கப்பட்டதும், செய்கைக்குட்படுத்தப்படாததுமான றப்பர் நிலங்களே மீண்டும் நடுகைக்குப் பயன்படுத்தியமையும் இவ்வுற்பத்தி அதிகரிப்பிற்குக் காரணமாகும்.

**ஏற்றுமதிகளும் விலேகளும்**

1973ஆம் ஆண்டில் றப்பரின் ஏற்றுமதிகள் 3,540 இலட்சம் இறாத்தல்களாக இருந்தன. இவை முன்னேய ஆண்டிலும் பார்க்க 480 இலட்சம் இறாத்

**அட்டவணே II (ஒ) 11**

**றப்பரின் உற்பத்திகளும், ஏற்றுமதிகளும், விலேகளும்**

| ஆண்டு | உற்பத்தி (ப. இ. இறா.) | | | ஏற்றுமதிகள் (ப. இ. இறா) | | | க. ஏ. பெ. விலே (இறா. ரூ. ச.) | | | கொழும்புச் சந்தை விலே இறாத்தலுக்கு (ரூ. ச.) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | ஆர்.எஸ். எஸ். இல. 1 | லெற்ரெக்ஸ் இல. 9 |
| 1969 | 194.6 | 136.3 | 332.5 | 179.7 | 135.1 | 314.8 | 1.34 | 1.41 | 1.37 | 1.04 | 1.16 |
| 1970 | 211.0 | 138.3 | 350.9 | 221.7 | 132.5 | 354.2 | 1.23 | 1.26 | 1.24 | 0.91 | 1.12 |
| 1971 | 175.8 | 134.7 | 311.8 | 156.0 | 129.1 | 285.2 | 0.98 | 1.19 | 1.08 | 0.79 | 1.13 |
| 1972 | 184.0 | 122.5 | 309.4 | 164.6 | 119.3 | 285.7 | 0.90 | 0.97 | 0.93 | 0.81 | 0.89 |
| 1973 | வி.கி. | வி. கி. | 340.0* | 224.4 | 128.2 | 354.4 | 1.51 | 1.95 | 1.67 | 1.18 | 1.81 |
| 1973 இன் | | | | | | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 52.2 | 26.0 | 78.8 | 79.4 | 39.3 | 119.2 | 1.05 | 1.33 | 1.14 | 1.00 | 1.23 |
| 2ஆம் காலாண்டு | 42.1 | 24.1 | 66.7 | 34.8 | 29.3 | 64.6 | 1.42 | 1.66 | 1.53 | 1.12 | 1.46 |
| 3ஆம் காலாண்டு | 49.0 | 27.6 | 77.3 | 58.7 | 26.0 | 85.0 | 1.56 | 2.12 | 1.73 | 1.23 | 2.31 |
| 4ஆம் காலாண்டு | வி.கி. | வி. கி. | வி. கி. | 51.4 | 33.6 | 85.7 | 2.24 | 2.78 | 2.45 | 1.35 | 2.22 |

மூலம்: றப்பர்க் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கைச் சுங்கம்,
இலங்கை றப்பர் தரகர் சங்கம்.

தல்கள்கொண்ட அதிகரிப்பைக் காட்டின. 1972இல் றப்பரின் பெறுமதி ரூ2,650 இலட்சத்திலிருந்து 1973இல் ரூ. 5,920 இலட்சம்கொண்ட பெருமளவு தொகை யாக அதிகரித்தமைக்கு, முக்கியமாக உலகச்சந்தையில் விலை அதிகரித்தமையும், ஏற்றுமதிசெய்யப்பட்ட றப்பர் ஏற்றுமதிகளின் அளவு ஓரளவு அதிகரித்தமை யுமே காரணமாகும். 1972ஆம் ஆண்டின் நிலையிலும் பார்க்க ஏற்றுமதி விலை கள் ஏறக்குறைய 80 சதவீதத்தாலும், ஏற்றுமதிகளின் அளவு 24 சதவீதத் தாலும் உயர்வுற்றன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தரப் பட்டுள்ளன

றப்பரின் விலைப்போக்குகள் முக்கியமாக உலகச்சந்தை நிலைகளின் பிரதி பலிப்பொன்றாகும். 1973 சனவரி—செத்தெம்பர் காலப்பகுதியில் இயற்கை றப்பரின் உலக உற்பத்தியும், நுகர்வும் சென்றாண்டின் தொடர்பான காலப் பகுதியிலும்பார்க்க தமது மட்டங்களிலிருந்து உயர்ந்துள்ளன. செயற்கை றப் பர் கைத்தொழிலுக்கு தேவையான பெற்றோலியத்தை அடிப்படையாகக் கொண்ட உள்ளீட்டுப்பொருட்களின் தட்டுப்பாட்டினதும், விலை அதிகரிப்பின தும் விளைவாக இயற்கை றப்பரின் விலை மிக உயர்ந்தது. பன்னாட்டு நாணயத் தளம்பல் காரணமாக இலாபத்தை எதிர்நோக்கி கொள்வனவு செய்யும்நிலை மிகப் பரந்தளவில் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக ஆர். எஸ். எஸ். 1 றப்ப ரின் வருடாந்த சராசரி விலை லண்டன் சந்தையில் 1972இல் கிலோவுக்கு 14.9 பென்சாகவிருந்த விலையிலிருந்து கிலோவுக்கு 31.8 பென்சாக 1973இல் அதிகரித்துக் காணப்பட்டது. அதேசமயம் சிங்கப்பூரில் ஆர். எஸ். எஸ் 1 றப்ப ரின் விலை 1972இல் காணப்பட்ட கிலோவுக்கு 92.52 சதமாயிருந்த விலையி லிருந்து கிலோவுக்கு 166.18 சதமாக 1973இல் அதிகரிப்படைந்தது.

### அட்டவணை II (ஓ) 12**

### இயற்கை, செயற்கை றப்பர்களின் உலக உற்பத்தி, நுகர்ச்சி, கையிருப்புக்கள்

மெற்றிக் தொன்கள்*

| | இயற்கை றப்பர் | | செயற்கை றப்பர் | |
|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1972 | 1973 |
| உற்பத்தி (சன—செத்) ... | 2,287,500 | 2,525,000 | 4,815,000 | 5,440,000 |
| நுகர்வு (சன—செத்) ... | 2,335,000 | 2,502,500 | 4,780,000 | 5,172,500 |
| மொத்தக்கையிருப்பு*/* (செத்தெம்பர் முடிவில் உள்ளபடி) .. | 14,322,500* | 14,393,000* | 12,842,500*/* | 13,605,000 |

மூலம்: றப்பர் புள்ளிவிபரச் செய்தித்திரட்டு.

** இறுதியாகக் கிடைத்த எண்தொகைகள்.

* நுகர்வையும், உற்பத்தியையும் செய்யும் எல்லைப் பரப்புகளினது இருப்புக்களையும், கப்பலிடப்பட்ட மதிப்பிடப்பட்ட இருப்புக்களையும் உள்ளடக்கும்.

*/* தகவல் தந்த இருப்புக்களையும், மதிப்பிடப்பட்ட இருப்புக்களையும் உள்ளடக்கும்.

உலகப் போக்குகளுக்கேற்ப உள்நாட்டு விலைகளும் அமைந்திருந்தன. ஆர். எஸ். எஸ். 1 றப்பரின் மாதாந்த சராசரி விலை 1973 சனவரியில் இருத்தலொன்றுக்கு ரூ. 1.00 இலிருந்து ரூ. 1.45ஆக திசெம்பரில் உயர்வடைந்தது. கிறேப் றப்பரின் விலை 1973, சனவரியில் இருத்தலொன்றிற்கு ரூ. 1.19இலிருந்து ரூ. 2.71 ஆக திசெம்பரில் அதிகரித்தது. 1973இல் ஆண்டுச் சராசரி கொழும்புச்சந்தை விலைகள் 1972ஆம் ஆண்டின் மட்டத்திற்குமேலாக ஆர். எஸ். எஸ். றப்பரின் விலை 46 சதத்தாலும், கிறேப் றப்பர் விலை 103 சதத்தாலும் அதிகரித்தன.

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்**

றப்பரின் சேரிடங்களின்படியான ஏற்றுமதிகளின் விபரங்களை கீழுள்ள அட்டவணை 11 (ஓ) 13 தருகின்றது. மிகப்பிரதான இறக்குமதியாளரின் பங்குகள் சிறிதளவால்தான் மாற்றமுற்றுள்ளன. எவ்வாறுயினும் விரிவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் பங்கு 1972இல் 20.8 சதவீதத்திலிருந்து 1973இல் 16.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி சீனு, ஐ.சோ.சோ. குடியரசு, போலாந்து போன்ற நாடுகளின் பங்குகளில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பினுல் எதிரீடுசெய்யப்பட்டது.

**அட்டவணை II (ஓ) 13**

**றப்பர் ஏற்றுமதிகள் பற்றிய நாடுகளின்படியான பகுப்புகள்**

| நாடு | அளவு (ப. இ. இரு.) | | மொத்தத்தின் சதவீதப் பங்குகள் | |
|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1972 | 1973 |
| மக்கள் சீனக் குடியரசு ... | 118.3 | 152.8 | 41.4 | 43.1 |
| ஐ. சோ. ச. கு. .. | 11.4 | 22.6 | 4.0 | 6.4 |
| ஐ. அ. நா. .. | 15.7 | 14.7 | 5.5 | 4.1 |
| போலந்து ... | 11.3 | 19.2 | 3.9 | 5.4 |
| உருமேனியா ... | 14.8 | 16.6 | 5.2 | 4.7 |
| யப்பான் ... | 3.7 | 6.1 | 1.3 | 1.7 |
| ஐக்கிய இராச்சியம் ... | 10.3 | —* | 3.6 | — |
| ஐ. பொ. ச. ... | 49.1 | 59.7 | 17.2 | 16.8 |
| ஏனைய நாடுகள் ... | 51.1 | 62.7 | 17.9 | 17.7 |
| மொத்தம் ... | **285.7** | **354.4** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கைச் சுங்கம்

* ஐ. பொ. ச. இல் உள்ளடக்கப்பட்டது.

**தெங்கு.**

**உற்பத்தியும் ஏற்றுமதிகளும்.**

1973இல் தெங்கு உற்பத்தியானது, முன்னையாண்டின்போது தொடர்ந்து நீடித்த வரட்சியின் காரணமாக பெருமளவு பாதிக்கப்பட்டது. பொதுவாக வரட்சி காரணமாகப் பயன்படுத்திய அளவும் வீழ்ச்சியுற்று 1973இல் நிலைமை

மேலும் சீர்குலைந்தது. அத்துடன் நிலச்சீர்திருத்தங்களால் ஏற்பட்ட தெளிவற்ற சூழ்நிலை காரணமாக அதிகமான பெருந்தோட்டங்கள் பயிரிடப்படாது புறக்கணிக்கப்பட்டன. சில குறிப்பிட்ட பகுதிகளைத் தென்னம்பூச்சிகள் தாக்கியதனாலும் உற்பத்தி வீழ்ச்சியுற்றது. மத்திய வங்கி மதிப்பீடுகளின்படி உற்பத்தி 1972இன் உயர்ந்த எண்தொகையான 29,630 இலட்சம் காய்களிலிருந்து 19,350 காய்களாக 1973இல் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியின்மீது ஏற்பட்ட தாக்கம், கொப்பரு உற்பத்தி திகைப்பூட்டும்முறையில் 1972இல் 249,336 தொன்களிலிருந்து 93,152 தொன்களுக்கு 1973இல் வீழ்ச்சியடைந்ததென் பதைக்காட்டும் தெங்குப்பொருள் சந்தைப்படுத்தும் சபையின் மதிப்பீடுகளில் இருந்து தெரியவருகிறது. கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட கொப்பருவின் அளவு 1972இன் 707,117 கண்டிகளிலிருந்து மிகக்குறைவான 120,970 கண்டிகளுக்கு 1973இல் வீழ்ச்சியடைந்தது.

உற்பத்தியில் ஏற்பட்ட இப்பெரு வீழ்ச்சியை அடுத்து, அரசாங்கம் 1973[1] பெப்புருவரி 15இல் கொப்பரு ஏற்றுமதிமீது ஒரு தடையை ஏற்படுத்தியது. இது, கொப்பரு ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிலையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்தடையின் விளைவாக தெங்கு சந்தைப்படுத்தல் சபையினால் கொப்பரு ஏற்றுமதிக்கு வழங்கப்படும் அனுமதிகள் 1973இல் 334 தொன்களுக்கே வகைகூறின. ஒப்புநோக்குகையில் 1971, 1972ஆம் ஆண்டுகளில் இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகைகள் முறையே 18,465 தொன்களாகவும், 47,949 தொன்களாகவும் விளங்கின. சுங்கத்தரவின்படி கொப்பரு ஏற்றுமதி முன்னையஆண்டில் 43,581 தொன்களாக விளங்க 1973இல் 2,700 தொன்களாக மட்டுமே விளங்கின. மேலதிகத்தொகைகள், 1972இல் அனுமதி வழங்கப்பட்ட கொப்பரு ஏற்றுமதிகள் காலம்தாழ்த்தி ஏற்றுமதிசெய்யப்பட்டதையே சுங்கப்பதிவேடுகளின் மேலதிகத்தொகைகள் பிரதிபலிக்கின்றன.

தேங்காய் எண்ணெய் உற்பத்தி 1972இன் 124,779 தொன்களிலிருந்து 1973இல் 54,940 தொன்களுக்கு, 50 சதவீதத்திற்கு மேலாக வீழ்ச்சியடைந்தது. அரசாங்கம் ஏப்பிறல் 9இல் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியையும் தடைசெய்தது.[2] இதன்விளைவாக தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி அனுமதிகளும் 1972இல் 80,509 தொன்களிலிருந்து 54,940 தொன்களுக்கு 1973இல் பெருமளவில் வீழ்ச்சியடைந்தன.[3] அத்துடன் உண்மையான தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி முன்னைய ஆண்டின் 43,581 தொன்களிலிருந்து 17,700 தொன்களுக்கு (1972இன் அனுமதிகளைத் தொடர்ந்து 1973இல் கப்பலேற்றுதல்களையும் உள்ளடக்கி) 1973இல் வீழ்ச்சியடைந்தது.

1973, திசெம்பரில் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியின்மீதான தடை ஓரளவு நீக்கப்பட்டது. எனினும் புறநடையாக 1973 திசெம்பர் 1ஆந் திகதி

1. 1973இன் அவசரகாலச்சட்டம் (தெங்குப்பொருட்கள் உற்பத்தி) எண் 1.
2. 1973இன் அவசரகாலச்சட்டம் (தெங்குப் பொருட்கள் உற்பத்தி) எண் 3.
3. 1973இன் அவசரகாலச்சட்டம் (தெங்குப்பொருட்கள் உற்பத்தி) எண் 1.

யில் இருந்து தெங்குசந்தைப்படுத்தும் சபையால் 4,500 தொன்களுக்கு மேற்படாத தொகைக்கு வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அனுமதிப்பத்திரங்களின்பேரில் ஏற்றுமதி செய்யப்படலாமென அனுமதியளிக்கப்பட்டது.

தெங்குப்பொருட்கள் சந்தைப்படுத்தல் சபையின்படி மதிப்பீடு செய்யப்பட்ட தேங்காய்த் துருவலின் உற்பத்தி 1973இல் 37,384 தொன்களாகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது உற்பத்தியில் 23 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. 1963இல் 50,757 தொன்களிலிருந்து 1968இல் 69,944 தொன்களுக்கு அதிகரிப்படைந்த தேங்காய்த்துருவல் ஏற்றுமதிகள் அதன்பின் பெருமளவில் வீழ்ச்சியடைய ஆரம்பித்தன. சென்றாண்டில் அதன் தொகை 48,276 தொன்களாகமட்டும் விளங்கியது. தேங்காய்த்துருவலின் உண்மையான ஏற்றுமதிகள் பெறுமதியளவில் 1972இன் ரூ. 780 இலட்சங்களிலிருந்து ரூ. 1,1 0 இலட்சங்களுக்கு இவ்வாண்டில் அதிகரித்திருக்கும்போது, தேங்காய்த்துருவலிற்கான ஏற்றுமதி அங்கீகாரமும் 1972இன் 47,279 தொன்களிலிருந்து 38,407 தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

பிண்ணாக்கு உற்பத்தியும் 1972இன் 70,085 தொன்களிலிருந்து 27,470 தொன்களுக்கு 1973இல் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**விலைப்போக்குகள்**

1973இல் கொழும்புச்சந்தையில் கொப்பறாவின் விலைகள் என்றுமில்லா மட்டத்தை அடைந்தன. தோட்டம் எண் 1 கொப்பறாவின் சராசரி விலை 1972இல் காணப்பட்ட கண்டியொன்று ரூ. 197இலிருந்து 1973இல் கண்டியொன்று ரூ. 323 இற்கு அதிகரித்தது. கண்டியொன்றிற்கு ரூ. 396 ஆன 1973இன் சராசரி, எக்காலத்திலுமில்லாத உயர்விலையாகும்.

1973இல் தேங்காய் எண்ணெயின் சராசரி விலை தொன் ஒன்றிற்கு ரூ. 2,032 ஆக விளங்கி, முன்னையாண்டில் நிலவிய விலைக்கு மேலாக ரூ. 897ஆல் அதிகரித்ததைக் காட்டியது. இது உலகச்சந்தையில் தேங்காய் எண்ணெயில் ஏற்பட்ட பொதுவான விலை அதிகரிப்பில் பிரதிபலித்த 79 சதவீதம் கொண்டவோர் அதிகரிப்பாகும்.

1973இல் தேங்காய்த்துருவலின் உள்நாட்டுச் சராசரி விலையும் கூட இறாத்தலொன்றிற்கு 1972இல் காணப்பட்ட 60.9 சதமான விலையிலிருந்து இறாத்தலொன்றிற்கு 89.9 சதமாக அதிகரித்தது. 1973இல் இறாத்தலொன்றுக்கு ரூ. 1.34 ஆகிய ஏற்றுமதி (க. ஏ. பெ.) விலை 1972 உடன் ஒப்பிடுகையில் 62 சதம் கொண்ட அதிகரிப்பினைக்காட்டியது. உலகச்சந்தை விலையின் பொதுவான அதிகரிப்பினை இது மீண்டும் பிரதிபலித்தது.

பிண்ணாக்கு விலைகளும்கூட செழிப்பில் தமது பங்கினை வகித்தன. உள்நாட்டு விலைகள் 1972 சனவரியிலிருந்த தொன் ஒன்றிற்காக ரூ. 216 இலிருந்து திசெம்பரில் ரூ.440இற்கும் பின்னர் 1973 திசெம்பரில் ரூ. 865 இற்கும் அதிகரித்தன. உள்நாட்டுத் தேங்காய் விலைகள் 1973இல் என்றுமில்லாத மட்டத்தை அடைந்தன.

1973இல் சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு, குருநாகல், கம்பகா, களுத்துறை ஆகிய இடங்களில் மாதத்துக்கான சராசரி விலைகள், 100 காய்களுக்கு ரூ. 247.37 ஆக அதிகரித்தன.

கடந்த ஐந்தாண்டுகளில் முக்கிய தெங்குப்பொருள் ஏற்றுமதிகளின் விலைகளும், அளவுகளும் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II (ஓ) 14**

**முக்கிய தெங்கு உற்பத்திகள் — ஏற்றுமதிகளும். அளவு, விலைகளும் 1969 — 1973**

| ஆண்டு | அளவு | | | | | க. ஏ. பெ. விலைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தேங்காய் எண்ணெய் ஆயிரம் அந்தர் (1) | கொப்பரா ஆயிரம் அந்தர் (2) | தேங்காய்த் துருவல் ஆயிரம் அந்தர் (3) | தேங்காய்கள் ஆயிரம் காய்கள் (4) | மொத்தம் தேங்காய்க்கு சமமான பெறுமானங் களின்படி) ப. இ. காய்கள் 1,2,3&4 | தேங்காயெண்ணெய் தொன்னொன்றுக்கு ரூபா | கொப்பரா — கண்டிக்கு ரூபா | தேங்காய்த் துருவல் இறாத்தல் ரூ. ச. | தேங்காய்கள் தே. சதம் |
| 1969 | 1,103 | 381 | 1,018 | 10,332 | 905 | 1,953.00 | 341.29 | 0.77 | 0.41 |
| 1970 | 1,142 | 305 | 967 | 6,321 | 880 | 2,037.60 | 371.90 | 0.91 | 0.46 |
| 1971 | 1,388 | 344 | 1,043 | 8,567 | 1,019 | 2,142.40 | 349.72 | 0.88 | 0.45 |
| 1972 | 1,709 | 872 | 993 | 10,478 | 1,258 | 1,548.69 | 296.39 | 0.72 | 0 41 |
| 1973 | 361 | 55 | 742 | 5,118 | 422 | 1,488.80 | 324.25 | 1.34 | 0.68 |

மூலம்: இலங்கைச் சுங்கம்,

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்**

**தேங்காய் எண்ணெய்**

பங்களாதேசம் அளவின்படியும், பெறுமதியின்படியும் பார்க்கையில் ஆகக் கூடியளவு தேங்காய் எண்ணெயைக் கொள்வனவு செய்யும் நாடாக விளங்கியது. இந்நாடு 1972இல் 61,500 அந்தர் கொண்ட தேங்காய் எண்ணெய் கொள்வனவுடன் ஒப்பிடுகையில் 1973இல் 93,000 அந்தர்களைக் கொள்வனவு செய்துள்ளது. இரண்டாவது முக்கிய வாங்குநரான கனடா 1973இல் 66,100 அந்தர்களுக்கு வகைகூறி 1972 உடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் இது செய்த இறக்குமதிகள் 222,300 அந்தர்கள் கொண்ட வீழ்ச்சியைக் காட்டுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக முக்கிய வாங்குநராயுள்ள சீனுவிற்கான தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகள் 1972இன் 557,600 அந்தர்களிலிருந்து 1973இல் 30,000 அந்தர்களுக்கு வீழ்ச்சியடைந்தன. 1973இன் அடுத்த முக்கியவாங்குநர், 36,300 அந்தர்களைக் கொள்வனவு செய்த பாகிஸ்தானுகும்.

**கொப்பரு**

1973 இல் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியை அடுத்து கொப்பரு ஏற்றுமதிக்கு விதித்த தடையால் கொப்பரு ஏற்றுமதிகளில் மிகப் பெருமளவு சுருக்கம் ஏற்பட்டது. 1973 இல் 3,000 தொன்கள் கொண்ட கொப்பருவை வாங்கிய பாக்கிஸ்தானே முக்கிய வாங்குநராகக் காணப்பட்டது. மொத்த கொப்பரு ஏற்றுமதி 1972 இன் 43,600 தொன்களிலிருந்து 1973 இன் 3,000 தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

**தேங்காய்த்துருவல்**

1972 உடன் ஒப்பிடுகையில் தேங்காய்த்துருவல் ஏற்றுமதிகளில்பெற்ற வருவாய்கள், பெருமளவு விரிவைப் பதிவுசெய்தன. அளவுரீதியாக தேங்காய்த்துருவல் ஏற்றுமதி 1972 இன் 972,871 அந்தர்களிலிருந்து 1973 இல் 742,224 அந்தர்களாக வீழ்ச்சியடைந்தது. 1972 இன் 323,600 அந்தர்களுடன் ஒப்பிடுகையில் ஐக்கிய இராச்சியம் 1973 இல் 237,300 அந்தர்களை வாங்கியுள்ளது. ஏனைய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் 1972 இன் 40,000 அந்தர்களுடன் ஒப்பிடுகையில் 1973 இல் 496,200 அந்தர்களுக்கு அதிகரித்தன.

**ஏனைய வேளாண்மை, கைத்தொழிலல்லா உற்பத்திகள்**

**உள்நாட்டுச் சந்தை**

அட்டவணை II (ஓ) 15 இல் காட்டப்பட்டுள்ளவாறு சிறிய ஏற்றுமதிப் பண்டங்களின் சராசரி கொழும்புச்சந்தை விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்களவால் அதிகரித்துள்ளன. முதன்மை வேளாண்மைப் பண்டங்களுக்கு உலகச்சந்தையில் ஏற்பட்ட செழிப்பு நிலைகளை அடுத்து இவ்விலைகள் அதிகரிப்படைந்தன. தோட்ட எண் 1 கொக்கோ விலை 1972 இன் அந்தரொன்றுக்கு ரூ. 214.69 இலிருந்து 1973 இல் அந்தரொன்றுக்கு ரூ. 466.71 ஆக அதிகரித்தது. இது, 1969—71 காலப்பிரிவில் மிகக்குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்த கொக்கோ விலைகளுக்கு மாறாக விளங்கியது. 1969 இல் இருத்தலொன்று ரூ. 5.51 இலிருந்து 1972 இல் இருத்தலொன்று ரூ. 3.24 ஆக வீழ்ச்சியுற்ற கறுவாச் சுருளைப் பொறுத்தவரையில் இதே நிலை நிலவியது. ஆனால் 1973 இல் சராசரி விலை இருத்தலொன்றிற்கு 4.58 ஆக உயர்ந்து 1972 உடன் ஒப்பிடுகையில் 41.4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

பிறவுண் பப்பெயினின் சராசரி விலை 1969 இன் இருத்தலொன்றிற்கு ரூ. 8.58 இலிருந்து 1973 இல் ரூ. 31.37 ஆக துரிதமான அதிகரிப்பை அடைந்தது 1972 உடன் ஒப்பிடுகையில் விலையில் ஏற்பட்ட மாற்றம் 59.6 சதவீதமாகும். வெள்ளை பப்பெயினும் இதே போக்கினை, 1970 ஆம் ஆண்டினைத்தவிர்த்து 1972 இல் இருத்தலொன்றிற்கு ரூ. 22 22 ஆன விலையிலிருந்து 1973 இல் இருத்தலொன்றிற்கு 38.73 ஆக அதிகரித்தபோது காட்டியது.

கராம்பு, சிற்றினல்லா எண்ணெயின் விலைகளும் முறையே 85.2 சதவீதத்தாலும் 80.8 சதவீதத்தாலும் அதிகரித்தன. தும்புநார், சிலிர்ப்பு என்பன மிகக்குறைந்த விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளன. இவற்றின் அதிகரிப்பு

## அட்டவணை II (ஓ) 15

### தேர்ந்தெடுத்த சிறு ஏற்றுமதிப் பொருட்களின் சராசரிக் கொழும்புச் சந்தை விலைகள்

| | தொகை அலகு | வருட சராசரி | | | | | காலாண்டு சராசரி 1973 | | | | வீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1வது | 2வது | 3வது | 4வது | 1969 மேல் 1970 | 1970 மேல் 1971 | 1971 மேல் 1972 | 1972 மேல் 1973 |
| கொக்கோ[1] ... | அந்தர் | 367.24 | 239.19 | 228.30 | 214.69 | 466.71 | 343.00 | 407.84 | 566.96 | 549.95 | - 34.9 | - 4.6 | - 5.9 | +106.0 |
| கறுவாப்பட்டை[2] ... | ரூத்தல் | 5.51 | 4.58 | 3.87 | 3.24 | 4.58 | 3.96 | 4.18 | 4.73 | 5.44 | - 16.9 | - 15.5 | - 16.3 | + 41.4 |
| கறுவாத்துண்டு[3] ... | கண்டிகள் | 433.11 | 267.52 | 286.50 | 283.87 | 450.61 | 350.00 | 414.52 | 495.92 | 542.00 | - 38.2 | + 7.1 | - 0.9 | + 58.7 |
| ஏலக்காய்[4] ... | ரூத்தல் | 28.51 | 29.03 | 15.07 | 15.94 | 29.52 | 31.34 | 30.00 | 29.96 | 26.79 | + 1.8 | - 48.1 | + 5.8 | + 85.2 |
| சிற்றனெல்லா எண்ணெய்[5] ... | ரூத்தல் | 6.31 | 6.03 | 6.96 | 8.35 | 15.10 | 12.71 | 12.23 | 16.25 | 19.21 | - 4.4 | +15.4 | +20.0 | + 80.8 |
| பப்பெயின் வெள்ளை ... | ரூத்தல் | 15.56 | 14.53 | 15.47 | 22.22 | 38.73 | 35.00 | 35.75 | 41.27 | 42.90 | - 6.6 | + 6.5 | +43.6 | + 74.3 |
| பப்பெயின் பிரவுன் ... | ரூத்தல் | 8.58 | 9.40 | 13.05 | 19.66 | 31.37 | 28.75 | 29.88 | 33.27 | 33.57 | + 9.6 | +38,8 | +50.6 | + 59.6 |
| தும்பு மெத்தை[6] ... | அந்தர் | 18.34 | 16.88 | 198.5 | 17.86 | 22.77 | 18.55 | 20.52 | 24.12 | 27.88 | - 8.0 | +17.6 | - 10.0 | + 27.5 |
| தும்புக் கயிறு[7] ... | அந்தர் | 44.33 | 38.03 | 40.63 | 42.32 | 53.00 | 41 64 | 40.08 | 62.79 | 67.50 | - 14.2 | + 6.8 | + 4.1 | + 25.2 |
| தேங்காய்ச் சிரட்டைக் கரி[8] ... | தொன் | 135.85 | 320.21 | 443.07 | 238.76 | 450.54 | 319.79 | 402.79 | 436.46 | 643.13 | +135.7 | +38.4 | - 46.1 | + 88.7 |

மூலங்கள்: வாராந்த பல்வகை உற்பத்தி சந்தை அறிக்கைகள்,
இலங்கை வர்த்தக நிறுவனம் வாராந்த விலைப்பட்டியல்.

1 பெருந்தோட்டம் எண். 1
2. திறம் 10000
3. வாங்கும் கடைகளில் சில்லறையாக மண்ணும் தூசியும் நீக்கப்பட்டு.
4. கிறீன் ஸ்ரேற் எண் 1.
5. வெளி விற்பனையாளர் எண். 1.
6. தரம் எண். 1.
7. 3 ரை.
8. வாங்குவோர் பைகளில்.

25 சதவீதமாகும். சிரட்டைக் கரியின் உள்நாட்டுச் சந்தை விலை 1972 இன் தொன் ஒன்றிற்கான ரூ. 238.76 இலிருந்து 1973 இல் ரூ. 450.54 இற்கு அதிகரித்தது.

அட்டவணை 11 (ஓ) 15, 1969 - 1973 இற்கான காலப்பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய ஏற்றுமதிகளின் விலைப்போக்குகளைச் சுருக்கமாகத்தருகின்றது.

**ஏற்றுமதிகள்**

தெங்கு உற்பத்தியானது குறிப்பிடத்தக்களவிற்கு பெருமளவால் வீழ்ச்சியுற்றபோதிலும், எல்லாத்தெங்கு உப-பொருட்களும் அளவாலும், ஏற்றுமதிப்பெறுமதியாலும் உயர்வடைந்தன. தெங்கு உப-பொருட்களுக்கான உள்நாட்டு, பன்னாட்டு சந்தை விலைகள் மிகச் சார்பாக அமைந்தன எல்லாவகைச் சிலிர்ப்புத்தும்புகளும் உள்நாட்டுச்சந்தையில் ஆண்டுமுழுவதும் விலை அதிகரிப்புகளைக் காட்டியுள்ளன. தும்புநார், சிலிர்ப்பு, மெத்தைத்தும்பின் ஏற்றுமதிகள் 1972 ஆம் ஆண்டில் முறையே 531,000, 1,289,000 அந்தர்களாயிருந்து, முறையே 578,000 அந்தராகவும், 1,441,000 அந்தராகவும் அதிகரிப்புற்றன. சிலிர்ப்புத்தும்பு, மெத்தைத்தும்பின் ஏற்றுமதியளவு வீழ்ச்சியுற்றுக்காணப்பட்டமைக்கு மாருக இவ்வாண்டில் இவற்றின் ஏற்றுமதி அதிகரித்தது. மொத்தத்தில், தெங்கு உப-பொருட்களின் ஏற்றுமதி வருவாயானது ரூ. 804 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டிலும்பார்க்க ரூ. 169 இலட்சத்தால் உயர்ந்து காணப்பட்டது.

வாசனைத்திரவியத் தொகுதியில் கறுவாச்சுருள், கறுவாப்பட்டை, மிளகு கராம்பு 1973 இல் பெருமளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்துள்ளன. 1973 இல் என்றுமில்லாத அளவான 87,300 அந்தர்கொண்ட கறுவாச் சுருள்கள் அந்தரொன்றுக்கு ரூ.356.24 என்ற க. ஏ. பெ. விலைப்படி ஏற்றுமதிசெய்யப்பட்டது. இவ்வாண்டின் விலைஅதிகரிப்பு அந்தரொன்றிற்கு ரூ. 6.61 ஆக விளங்கியது. எனவே ஏற்றுமதிவருவாய்களும் 1972 இல் ரூ. 270 இலட்சத்திலிருந்து 1973 இல் ரூ.3310 இலட்சத்திற்கு அதிகரித்தன. கறுவாப்பட்டைகளும் சிறிய அதிகரித்த விலையில் பெருமளவு ஏற்றுமதியைப் பதிவுசெய்தன. மறுபுறம், க. ஏ. பெ. விலையில் பெருமளவு அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், ஏலம் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. 1973 இல் கராம்பு ஏற்றுமதிகளும் அவற்றின் க. ஏ. பெ. விலையும் பெருமளவு அதிகரிப்புகளைப் பதிவுசெய்தன. இது 1972 இன் ரூ. 8 இலட்சம்கொண்ட ஏற்றுமதிப் பெறுமதியின் அதிகரிப்பினை, 1973 இல் ரூ. 101 இலட்சத்திற்குக் கொண்டு வந்தது.

கனிப்பொருள் உற்பத்தித் தொகுதியில், இயற்கைக்காரீய க. ஏ. பெ. விலை பல ஆண்டுகளாக அடைந்த விலைகளில் மிக உயர்ந்த விலையான அந்தரொன்று ரூ. 94.93 ஆக விளங்கும்போது, 1973 இல் ஏற்றுமதிசெய்யப்பட்ட அளவில் ஒரு சிறிய அதிகரிப்பு காணப்பட்டது. இல்மனைட் ஏற்றுமதிகள் 1973 இல் வீழ்ச்சியடைந்தபோதிலும் க. ஏ. பெ. விலையில் ஏற்பட்ட சிறிய அதிகரிப்பொன்றினால், இல்மனைட் வாயிலான வருவாய்கள் எல்லையளவால் உயர்ந்தன.

ஏற்றிமதி அளவுகள், பெறுமதிகள், தெரிவுசெய்யப்பட்ட சிறிய ஏற்றுமதிகளின் விலைகள் அட்டவணை 11 (ஓ) 16 இற் தரப்பட்டுள்ளன.

## ஏனைய வேளாண்மைப் பொருட்களினதும் கைத்தொழில்

| | தொகை கூறு | அளவு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1965 | 1966 |
| **தெங்கு உப உற்பத்தியின் தொகுதி** | | | | | | | | | | | | |
| தும்பு நார்–சிலிர்ப்பு ... | ஆயி. அந். | 440.7 | 401·2 | 538.0 | 563·9 | 506·7 | 474·0 | 534.1 | 531·3 | 573·3 | 23.2 | 17.4 |
| தும்பு நார்–மெத்தை ... | ,, | 1280.6 | 1114.2 | 1065.0 | 1260.0 | 1180·3 | 1172.6 | 1307.2 | 1289.5 | 1441·1 | 26.5 | 20.3 |
| சிரட்டைக் கரி ... | ,, | 298.7 | 264.6 | 273.0 | 319.1 | 385.2 | 583.4 | 629.9 | 539.2 | 566.2 | 2.9 | 3.2 |
| **வாசனைச் சரக்குகளின் தொகுதி** | | | | | | | | | | | | |
| கறுவாப்பட்டை ... | ,, | 47.4 | 47.1 | 52.8 | 61.8 | 65.9 | 70.0 | 72.6 | 77.0 | 87.3 | 27.6 | 29.2 |
| கறுவாத் துண்டுகள் ... | ,, | 7.4 | 7.2 | 7.9 | 16.6 | 21.6 | 12.7 | 15.3 | 21.5 | 40.8 | 1.0 | 1.2 |
| ஏலக்காய் ... | ,, | 2.8 | 2.5 | 2.4 | 2.5 | 3.2 | 4.0 | 3.7 | 4.2 | 3.7 | 4.1 | 4.9 |
| மிளகு ... | ,, | 13.7 | 6.0 | 2.0 | 16.2 | 17.9 | 16.9 | 0.9 | 2.1 | 40.4 | 2.7 | 1.2 |
| கராம்பு ... | ,, | 0.7 | 1.0 | 0.8 | 1.0 | 4.6 | 5.5 | 0.2 | 2.1 | 12.1 | 0.1 | 0.1 |
| **ஏனைய வேளாண்மைப் பொருட்கள்** | | | | | | | | | | | | |
| கொக்கோ விதைகள் ... | ,, | 28.3 | 42.5 | 23.2 | 34.8 | 25.4 | 29.9 | 30.1 | 30.7 | 22.6 | 4.4 | 5.9 |
| தயாரிக்கப்படாத புகையிலை | ப.இ.இரு. | — | — | 0.9 | 1.3 | 0.7 | 0.5 | 1.5 | 1.5 | 1.5 | — | — |
| **கனிவளங்களின் தொகுதி** | | | | | | | | | | | | |
| இயற்கையான காரீயம் ... | ஆயி. அந். | 174.8 | 197.3 | 204.1 | 212.6 | 224.8 | 192.6 | 152.6 | 118.1 | 122.2 | 5.4 | 6.2 |
| இல்மனைட்டு ... | ,, | 1191.8 | 811.0 | 1764.4 | 1455.0 | 1667.2 | 1556.2 | 1731.1 | 1792.3 | 1791.4 | 1.8 | 1.1 |
| **தயாரிக்கப்பட்ட உற்பத்திகளின் தொகுதி** | | | | | | | | | | | | |
| இரத்தினக்கற்களும் அதுசார்பான கற்களும் ... | ஆயி. கரெட். | 71·3 | 61.1 | 24.9 | 196.0 | 136·6 | 184.9 | வி.சி. | 288·2 | 649.7 | 4.1 | 3.9 |
| நகைகளும், நகைப் பொருட்களும் ... | ,, | — | — | — | — | — | — | — | — | — | 1.8 | 1.7 |
| மேலேயுள்ள விடயங்களின் மொத்தப் பெறுமானம் ... | | | | | | | | | | | 105.6 | 96.3 |

## சார்பற்ற பண்டங்களினதும் ஏற்றுமதி

| பெறுமதி (ப. இ. ரூ.) | | | | | | | ஒரு கூறுக்கான க. ஏ. பெ. விலை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 |
| 22.0 | 25.6 | 24.6 | 22.3 | 27.2 | 28.6 | 35.7 | 52.74 | 43.49 | 40.94 | 43.35 | 48.63 | 47.13 | 51.01 | 53.78 | 61.73 |
| 19.4 | 25.5 | 25.4 | 24.8 | 27.2 | 28.4 | 36.2 | 20.69 | 18.21 | 18.24 | 20.23 | 21.67 | 21.16 | 20.83 | 21.99 | 25.12 |
| 4.9 | 5.2 | 3.4 | 6.7 | 10.7 | 6.5 | 8.5 | 9.76 | 12.20 | 18.02 | 16.34 | 8.90 | 11.53 | 17.06 | 12.07 | 15.01 |
| 29.8 | 32.9 | 33.8 | 28.4 | 25.1 | 26.9 | 31.1 | 582.57 | 620.11 | 564.71 | 531.79 | 513.33 | 405.79 | 353.16 | 349.63 | 356.24 |
| 1.2 | 2.3 | 4.1 | 1.7 | 2.2 | 3.4 | 6.7 | 180.32 | 161.79 | 153.27 | 141.30 | 191.11 | 134.02 | 146.23 | 160.28 | 164.22 |
| 3.3 | 4.1 | 7.3 | 11.3 | 5.8 | 5.7 | 8.4 | 1453.38 | 1978.56 | 1341.65 | 1639.22 | 2297.00 | 2838.61 | 1581.78 | 1356.17 | 2270.72 |
| 0.4 | 2.4 | 3.1 | 4.7 | 0.7 | 0.9 | 12.9 | 197.93 | 199.76 | 215.21 | 146.53 | 173.12 | 279.42 | 749.21 | 391.82 | 319.31 |
| 0.1 | 0.1 | 2.8 | 4.1 | 0.1 | 0.8 | 10.1 | 164.65 | 138.29 | 104.24 | 130.22 | 617.35 | 756.41 | 354.28 | 395.97 | 834.74 |
| 4.1 | 7.3 | 7.0 | 7.2 | 6.2 | 5.1 | 6.1 | 157.15 | 139.26 | 178.36 | 211.16 | 273.43 | 240.82 | 205.57 | 165.92 | 269.91 |
| 2.8 | 5.1 | 2.9 | 2.2 | 6.9 | 6.9 | 6.7 | — | — | 3.00 | 3.81 | 4.04 | 4.21 | 4.47 | 4.57 | 4.41 |
| 6.7 | 7.8 | 8.3 | 8.9 | 9.0 | 8.8 | 11.6 | 31.05 | 31.30 | 32.83 | 36.91 | 36.78 | 46.39 | 59.10 | 74.72 | 94.93 |
| 1.5 | 2.6 | 4.1 | 4.2 | 4.7 | 7.1 | 7.3 | 1.48 | 1.36 | 0.86 | 1.78 | 2.45 | 2.68 | 2.69 | 3.96 | 4.07 |
| 3.4 | 2.0 | 0.5 | 4.3 | 3.4 | 12.3 | 140.8 | 57.26 | 63.56 | — | — | — | — | — | — | 216.71 |
| 2.3 | 1.2 | 1.0 | 1.0 | 0.3 | 0.2 | 0.1 | — | — | — | — | — | — | — | — | — |
| 101.9 | 124.1 | 128.3 | 131.8 | 129.5 | 141.6 | 322.1 | | | | | | | | | |

மூலம்: இலங்கைச் சுங்கப் பகுதி.

**இரத்தினக்கற்கள்**

1973இல் முக்கிய பண்டங்களின் ஏற்றுமதி வருவாய்களின் பெறுமதியில் காட்டப்பட்ட மிக உயர்ந்த வீத அதிகரிப்பு இரத்தினக்கற் கைத்தொழிலில் காணப்பட்டது. 1973இல் சுங்கத்தரவுகளின்படியான ரூ. 1,408 இலட்சம் கொண்ட அருங்கற்கள், அவைசார்ந்த கற்கள்வாயிலாகப் பெறப்பட்ட ஏற்று மதி வருவாய்கள் 1972உடன் ஒப்பிடுகையில் ரூ. 1,283 இலட்சம்கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. அரசாங்க இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின்படி, 1973ஆம் ஆண்டிற்கான இரத்தினக்கல் ஏற்றுமதி களின் பெறுமதி ரூ. 1,528 இலட்சமாகும். அவற்றுள் தனியார்துறை மூல மான விற்பனைகளின் பங்கு 8.3 சதவீதத்திற்கு வகைகூறியது.

**அட்டவணை II (ஒ) 17**

**இரத்தினக் கற்களின் ஏற்றுமதி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | சுங்கம் | | அரசாங்க இரத்தினக் கற்கள் | | |
|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | இரத்தினக் கற் கூட்டுத் தாபனம் | தனியார் துறை | மொத்தம் |
| சனவரி ... | 0.2 | 3.9 | 2.2 | 3.1 | 5.4 |
| பெப்புருவரி ... | 0.1 | 2.7 | 1.1 | 3.8 | 4.9 |
| மாச்சு ... | 0.1 | 6.2 | 1.2 | 7.7 | 8.9 |
| எப்பிறல் ... | 0.1 | 16.7 | 1.9 | 15.1 | 17.1 |
| மே ... | 0.6 | 14.5 | 6.4 | 10.2 | 16.7 |
| யூன் ... | 1.6 | 18.1 | 1.9 | 15.4 | 17.3 |
| யூலை ... | 0.3 | 14.3 | 3.5 | 13.8 | 17.3 |
| ஓகத்து ... | 1.6 | 16.6 | 0.6 | 16.5 | 17.1 |
| செத்தெம்பர் ... | 2.0 | 13.6 | 2.1 | 15.6 | 17.7 |
| ஒற்றோபர் ... | 1.3 | 17.8 | 2.2 | 14.0 | 16.2 |
| நவெம்பர் ... | 1.8 | 12.9 | 2.5 | 8.3 | 10.8 |
| திசெம்பர் ... | 2.8 | 3.5 | 0.2 | 3.2 | 3.5 |
| | 12.3 | 140.8 | 26.1 | 126.7 | 152.8 |

மூலம்: இலங்கை சுங்கம்,
அரசாங்க இரத்தினக் கற் கூட்டுத்தாபனம்.

மிக அண்மைக்காலங்கள்வரை அரசாங்க வாயிலாக இரத்தினக்கல்மூலம் பெற்ற ஏற்றுமதி வருவாய்கள் மிகக்குறைந்த மட்டத்திலேயே விளங்கின. 1968, மேயில் செய்யப்பட்ட வெ.செ.உ.சா. திட்டத்தின்கீழான ஓர் முற் கொடுப்பனவு ஏற்பாடுகூட ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பினை விரும்பத் தக்க அளவிற்கு உயர்த்த உதவவில்லை. எனவே 1973இன் ஏற்றுமதி வருவாய் களின் விரிவாக்கத்திற்கு, 1972 யூலை தொடங்கி 1973 வரை கொடுக்கப்பட்ட மேலதிக ஊக்கங்களால் இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்கள் தமது தேறிய க. ஏ. பெ. ஏற்றுமதி வருவாய்களில் 25 சதவீதத்தினை மாற்றக்கூடிய ரூபாக்

கணக்கில் வரவுவைக்க அனுமதிக்கப்பட்டதோடு அவர்களுக்கு 1973 ஓகத்து 1 தொடக்கம் 1973 ஒற்றோபர் 1 வரை வரவேற்கத்தக்க வரிமன்னிப்பு அளிக்கப் பட்டதும் காரணமாக விளங்கக்கூடும்.

1973இல் இக்கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட இரத்தினக்கல் மொத்தக் கொள்வனவுகளின் பெறுமதி ரூ. 1,077 இலட்சமாகும். இரத்தினக்கல் அகழ்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 1972இல் காணப்பட்ட 1,657இற்குமாறாக 1973இல் 2,547 ஆக விளங்கியது. எனினும், இரத்தினக்கல் வர்த்தகம், மாணிக்கம் செதுக்குதல்என்பவற்றுக்காக வழங்கப் பட்ட உத்தரவுச் சீட்டுக்கள் முறையே 2,457இலிருந்து 2,335இற்கும் 1,055 இலிருந்து, 475இற்குமாக வீழ்ச்சியடைந்தன. இக்கூட்டுத்தாபனம் 1973இல் நில ஏல விற்பனவுகளின் வாயிலாக ரூ. 18 இலட்சத்தைப் பெற்றது. இத் தொகையை முன்னையாண்டுடன் ஒப்பிடும்போது ரூ. 11 இலட்சம்கொண்ட அதிகரிப்பைக் காட்டியது.

**தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகள்**

அட்டவணை 11 (ஓ) 18இற் காட்டப்பட்டவாறு 1973இல் தெரிவுசெய்யப் பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து பெற்ற வருவாய்கள் 1972இன் ரூ. 510 இலட்சம்கொண்ட தொகையிலிருந்து 1973இல் ரூ. 905 இலட்சங்களுக்கு அதிகரித்தன. இது 1972இன் மட்டத்திலும் மேலான 77 சதவீதம் கொண்ட ஓர் அதிகரிப்பாகும். இது 1972இன் 3.5 சதவீதம் கொண்ட எல்லை யளவு அதிகரிப்புக்கு மாறுபட்டதாகும். இந்த ஏற்றுமதிகள் அளவிலும், தொகையிலும் கடந்த சில ஆண்டுகளிலும் பார்க்க அதிகரித்துள்ளன. அத்துடன் பெற்றோலிய ஏற்றுமதிகளும் உள்ளடக்கப்படின், இவை மொத்த ஏற்றுமதியில் கணிசமான ஒரு பங்கிற்கு வகைகூறும். கீழ்வரும் அட்டவணையில் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

பெற்றோலிய உற்பத்தியில் பெற்ற வருவாய்கள் தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில் உற்பத்தியில் பெற்ற வருவாய்களில் பெருமளவு பங்கை வகிக் கின்றன. பெற்றோலிய ஏற்றுமதிகள் மூலம் பெறப்பட்ட வருவாய்கள் 52 சத வீதத்தால் 1972இல் காணப்பட்ட ரூ. 887 இலட்சத்திலிருந்து 1973இல் ரூ. 1,344 இலட்சங்களுக்கு அதிகரித்தன. இவற்றுள், கப்பல் எரிபொருள், விமான எரிபொருள், நப்தா போன்ற பெரிய விடயங்கள் 1973இல் 56 சத வீதத்திற்கும் 59 சதவீதத்திற்கும் இடைப்பட்டதான அதிகரிப்புகளைக் காட்டின.

ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடு கையில் 1973இல் சேட்டுக்கள், ஏனைய உடைகள், பதனிடப்பட்ட தோல், கொழுப்புத் திராவகங்கள், பருத்தி, பற்றிக் ஆடைகள், கிளிசறின், பழங்கள், (தகரத்திலடைத்த அல்லது போத்தலிலிடப்பட்ட) றப்பர் காலணிகள், றப்பர் டயர்கள் என்பவற்றில் உயர்ந்த வருவாய்கள் பதிவுசெய்யப்பட்டன. பின்வரும் விடயங்களின் ஏற்றுமதிகள் 100 சதவீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்புக்களை வருவாய்களில் காட்டின சேட்டுகளும் ஏனைய உடைகளும் (108.8 சதவீதத் தால்) பருத்தி, பற்றிக் ஆடைகள் (1380.4 சதவீதத்தால்) தகரத்திலடைத்த அல்லது போத்தலிலிடப்பட்ட பழங்கள் (185.3 சதவீதத்தால்) றப்பர் காலணி கள் (203.5 சதவீதத்தால்) றப்பர் ரயர்கள் (622.2 சதவீதத்தால்.)

பெற்றோலியக் கூத்டுத்தாபனத்தின் தரவிற்கேற்ப சீராக்கம் செய்யப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதிகள் 1972இல் ரூ. 1,233 இலட்சமாகவும், 1973இல் ரூ. 1,850 இலட்மாகவும் விளங்கின.

## அட்டவணை II (ஓ) 18

## தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழிலில் ஏற்றுமதிகள்

| | தொகை கூறு | 1972 அளவு | 1972 பெறுமதி (ஆயிரம் ரூபாய்களில்) | 1973 அளவு | 1973 பெறுமதி (ஆயிரம் ரூபாய்களில்) | 1973/72 பெறுமதியின் சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| **1. உணவு, குடிவகைகளும், புகையிலையும்** | | | | | | | |
| (அ) அப்பமனை உற்பத்திகள் ... | அந்தர் | 5,189 | 686.4 | 6,953 | 885.7 | + | 29.0 |
| (ஆ) தகரத்தில் அடைக்கப்பட்ட | | | | | | | |
| அல்லது போத்தலிலிடப்பட்ட | | | 876.2 | 17,690 | 2,500.1 | + | 185.3 |
| பழவகை ... | ,, | 7,213 | 4,601.5 | 234,727 | 3,214.5 | — | 20.8 |
| (இ) மிருக உணவு ... | ,, | 429,552 | 8,908.3 | 122 | 17,684.0 | — | 93.9 |
| (ஈ) உறைந்த மீன் ... | ,, | — | | | | | |
| **2. புடவைகள், அணியும் ஆடை வகைகள்** | | | | | | | |
| (அ) பருத்தி பற்றிக் துணிவகை ... | | — | 269.8 | — | 3,994.2 | + | 1,380.4 |
| (ஆ) சேட்டுக்களும், ஏனைய ஆடைகளும் | எண்ணிக்கை | 110,763 | 7,272.8 | 148,102 | 15,187.3 | + | 108.8 |
| **3. இரசாயன உற்பத்திகள்** | | | | | | | |
| (அ) கிளிசரீன் .. | அந்தர் | 30,216 | 2,265.0 | 30,197 | 2,741.8 | + | 21.0 |
| (ஆ) கொழுப்புத் திராவகங்கள் ... | ,, | — | 3,880.9 | 63,148 | 6,917.0 | + | 78.2 |
| (இ) சவர்க்காரம் .. | ,, | 2,785 | 325.7 | 4,183 | 468.8 | + | 43.9 |
| **4. பெற்ரோலியம் உற்பத்திகள்*** | | | | | | | |
| (அ) நப்தா ... | கலன்கள் | 44,136,354 | 9,762.9 | 37,028,125 | 17,842.7 | + | 82.8 |
| (ஆ) மோட்டார் ஸ்பிரிட்டுகள் ... | ,, | 13,185 | 42.7 | 5,710 | 33.0 | — | 22.7 |
| (இ) மண்ணெண்ணெய் .. | ,, | 23,000 | 27.6 | 26,000 | 41.4 | + | 50.0 |
| (ஈ) டீசல் எண்ணெய் ... | ,, | 6,141,514 | 1,320.9 | 148,025 | 237.8 | — | 82.0 |
| (உ) உராய்வு எண்ணெய் ... | அந்தர் | 104,000 | 59.6 | — | — | | — |
| (ஊ) எஞ்சிய எரிபொருள் எண்ணெய் | ,, | 34,825,319 | 5,189.6 | 12,878,229 | 4,686.6 | — | 9.7 |
| **5. தோல், றப்பர், மரம், தாள் உற்பத்திகள்** | | | | | | | |
| (அ) பதனிடப்பட்ட தோல் ... | அந்தர் | 12,298 | 4,001.5 | 52,681 | 7,157.8 | + | 78.9 |
| (ஆ) தோற் காலணிகள் .. | டசின் | 8,550 | 527.7 | 14,910 | 901.0 | + | 70.7 |
| (இ) றப்பர் காலணிகள் ... | ,, | 24,276 | 708.9 | 47,217 | 2,151.4 | + | 203.5 |
| (ஈ) றப்பர் ரயர்கள் ... | எண். | 52,038 | 289.4 | 409.000 | 2,090.1 | + | 622.2 |
| (உ) றப்பரிலானை ஏனைய | | | | | | | |
| பொருட்கள் ... | அந்தர் | 1,926 | 337.0 | 24,344 | 581.4 | + | 72.5 |
| (ஊ) உபயோகமற்ற பொருட்கள் . | தொன் | 1,294 | 59.2 | 24,571 | 868.6 | + | 1,367.2 |
| **6. உலோகசார்பற்ற கனிவள உற்பத்திகள்** | | | | | | | |
| (அ) மட்பாண்டப் பொருட்கள் ... | அந்தர் | 328 | 150.9 | 1,195 | 346.8 | + | 129.8 |
| **கூட்டு மொத்தம்** | | | 51,024.5 | | 90,532.0 | + | 77.4 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

* பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தினால் தரப்பட்ட தரவின்படி ஏற்றுமதி செய்யப்பட்ட பெற்ரோலிய உற்பத்திகள் பின்வருமாறு :-

(ஆயிரம் ரூபாய்)

| | 1972 | 1973 |
|---|---|---|
| கப்பல் எரிபொருள் ... ... ... | 58,856.4 | 93,761.8 |
| வானூர்தி ... .. ... | 10,973.5 | 17,067.8 |
| மண்ணெண்ணெய் ... .. ... | 52.3 | 0.9 |
| காசொலின் ... ... ... | 6.3 | — |
| நப்தா ... ... ... ... | 12,391.8 | 19,459.4 |
| எரி பொருள் ... ... ... | 6,422.1 | 4,141.6 |
| மொத்தம் ... ... | 88,702.5 | 134,411.4 |

## இறக்குமதிகள்

சுங்கத்தரவுகளின்படி கடந்த ஐந்தாண்டுகளாக செய்யப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதியில் 1973இல் செய்யப்பட்ட இறக்குமதியின் பெறுமதியே மிக உயர்ந்திருப்பதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 1972இலும் பார்க்க 1973இல் இதன் தொகை ரூ. 6,510 இலட்சமாக விளங்கி, 32 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

இறக்குமதிப் பெறுமதிகளின் அதிகரிப்பே, 1973இல் நிலவிய அதிகரிப்பிற்கு முழுமைக் காரணமாகும். முன்பு கூறியதற்கு அமைய பணவீக்க அழுக்கங்கள் பற்றுக்குறைகள், இலாபங்களை எதிர்பார்த்து வெளிநாடுகளிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்தல் ஆகியன 1973இல் இறக்குமதி விலைகள் என்றுமில்லாதளவு உயர்ந்திருப்பதற்கு காரணமாயிருந்தன. அத்துடன், பன்னாட்டு நாணய நிதி மீளிணைப்பினால் ரூபாயின் பெறுமதி இறக்கமும் மேலும் பாதகமானசூழ்நிலையை உருவாக்கியது. உண்மையில் இறக்குமதி விலைக்குறிகாட்டியின்படி (1967=100) பார்க்கையில், 1973இல் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 32 சதவீதமாகவிருந்தது. மறுபுறம் இறக்குமதி அளவு குறிகாட்டியின்படி (1967=100) பார்க்கையில் 1973இல் இறக்குமதி செய்யப்பட்ட அளவு 10 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

1973இல் ஏற்பட்ட இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு, அவ்வளவு பெரிதாக விளங்கியதனால், முன்பு ஏற்றுமதி விலைகளில் நிலவிய திருந்திய நிலையையே பெருமளவு பாதித்தது. இதன்விளைவாக நாட்டின் வர்த்தக மாற்று விகிதம் (1967=100) ஏறக்குறைய 16 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று 65 சதவீதமாக விளங்கியது.

உணவு ஆணையாளரினாலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினாலும், சுங்கத்திணைக்களத்தின் இறக்குமதித்தரவுகள் சீராக்கப்படுமிடத்து, இறக்குமதிகளின் பெறுமதி 1973இல் ரூ. 5,470 இலட்சத்தால் அதிகரித்து, ரூ. 27,650 இலட்சமாக விளங்கியது. சீராக்கப்பட்ட இத்தரவு கீழுள்ள அட்டவணை 11 (ஓ) 19இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஓ) 19
### சுங்கத் தரவுகள் — சீராக்கப்பட்டவை

| | தொகை பத்து இலட்சம் ரூபாய்களில் | | | |
|---|---|---|---|---|
| | 1972 | மொத்தத்தின் சதவீதப் பங்கு | 1973 | மொத்தத்தின் சதவீதப் பங்கு |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 1,118 | 54.4 | 1,555 | 26.2 |
| அவற்றில் | | | | |
| அ. உணவும் குடிபானமும் ... | 966 | 43.6 | 1,379 | 49 9 |
| (i) அரிசி ... | 142 | 6.4 | 322 | 11.3 |
| (ii) கோதுமை மா ... | 216 | 9.7 | 458 | 16.6 |
| (iii) சீனி ... | 250 | 11.3 | 334 | 12.1 |
| ஆ, புடவைகள் ... | 48 | 2.2 | 55 | 2.0 |
| இ. ஏனைய நுகர்வுப் பொருட்கள் . | 104 | 4.7 | 120 | 4.3 |
| 2. இடைநிலைப் பொருட்கள் ... | 607 | 22.4 | 733 | 26.5 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 438 | 19.7 | 452 | 16.2 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள் ... | 55 | 2.5 | 25 | 0.9 |
| 5. மொத்த இறக்குமதிகள் ... | 2,218 | 100.0 | 2,765 | 100.0 |

மூலம்: இலங்கைச் சுங்கம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், உணவு ஆணையாளர்.

சீராக்கப்பட்ட தரவின்படி மொத்த இறக்குமதிகளில், நுகர்வோர் பொருட்களின் சதவீதப்பங்கு, 1972இல் 50 சதவீதமாகவிருந்து, 1973இல் 56 சதவீதத்திற்கு உயர்ந்துள்ளது. இதன்விளைவாக இடைநிலைப்பொருட்களினதும் முதலீட்டுப்பொருட்களினதும் இணைந்த பங்கு 1972இல் 47 சதவீதமாகவிருந்து 1973இல் 43 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றுள்ளது. 1973இன் இறக்குமதி அமைப்பில், இது ஒரு கவலைதரும் பண்பாகும். இறக்குமதி இயலளவு வீழ்ச்சியுறும் இச்சூழ்நிலையில் முதலீட்டுப் பொருட்களினதும், இடைநிலைப்பொருட்களினதும் இறக்குமதி அளவு வீழ்ச்சியுருது பாதுகாப்பது விரும்பத்தக்கதாகும். எனினும், அண்மைக்காலத்தில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி ஆகக் குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதனால் இந்நிலையைப் பாதுகாப்பது கடினமாகும்.

சுங்கத்தரவுகளின்படி அரிசி, மா இறக்குமதி அளவுகள் முறையே 14 சதவீதத்தாலும், 32 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில், சீனி இறக்குமதி அளவு 13 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. சுங்கத்தினதும் (அங்கீகரிக்கப்பட்ட சுங்கப் பதிவுகளை அடிப்படையாகக்கொண்டவை) உணவு ஆணையாளரினதும் பதிவுகளின்படியான அரிசி, மா, சீனி இறக்குமதித் தரவுகளைக் கீழேயுள்ள அட்டவணை 11 (ஓ) 20 தருகின்றது. பின்வரும் அரிசி, மா, சீனி என்பதன்மீதான குறிப்புக்கள் உணவு ஆணையாளரின் பெருமளவு ஏற்கத்தக்க தரவுகளை அடிப்படையாகக்கொண்டன.

**அரிசி**

அரிசியின் இறக்குமதிப் பெறுமதியிலேற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கும் அதனால் 1973ஆம் ஆண்டில் வெளிநாட்டுச்செலாவணிச் செலவீடு அதிகரித்தமைக்கும் ஒரு தொன் அரிசியின் கொ. க. பெறுமதி விலை ரூ. 408.93ஆல் பெருமளவு அதிகரித்தமையே காரணமாகும். அரிசி இறக்குமதியின் அளவும் 76,000 தொன்களால் அல்லது 22 சதவீதத்தால் அதிகரித்தது. 1973ஆம் ஆண்டில் ஆசியாவிலுள்ள முக்கிய உற்பத்திசெய்கின்ற பகுதிகளின் வழங்கலில் ஏற்பட்ட குறைபாடே இவ்விலை உயர்வுக்குக் காரணமாகும்.

**மா**

1973ஆம் ஆண்டில் மா இறக்குமதியின் பெறுமதியானது, ரூ. 2,420 இலட்சத்தால் அல்லது 112 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது ஒரு தொன்னுக்கான சராசரி கொ. க. விலை ரூ. 587 இலட்சத்தால் அதிகரித்தமையின் பிரதிபலிப்பேயாகும். மேலும், இறக்குமதி செய்யப்பட்ட அளவும் 41,000 தொன்களால் உயர்ந்து காணப்பட்டது. அட்டவணை 11 (ஓ) 21இல் மொத்த இறக்குமதியில் மாவின் இறக்குமதிப் பங்கு 1972ஆம் ஆண்டில் 9 சதவீதத்திலிருந்து 1973ம் ஆண்டில் 17 சதவீதமாக அதிகரித்தமை காட்டப்பட்டுள்ளது.

**சீனி**

ஒரு தொன்னுக்கான சராசரி கொ. க. விலை ரூ. 534இல் அல்லது 50 சதவீதத்தால் அதிகரித்தது மிகவும் உயர்ந்த விலையான ரூ. 1,752ஆக ஒரு தொன்னுக்கு இருந்தமையே 1972ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1973ஆம் ஆண்டில்

## அட்டவணை II (ஓ) 20

### அரிசி, கோதுமை மா, சீனி, என்பனவற்றின் உண்மை இறக்குமதிகளும் சுங்கத் தரவுகளும்

| | உணவு ஆணையாளரின் தரவுகள் | | | | | சுங்கத் தரவுகள் (சுங்கப்பகுதியினரால் பதிவு செய்யப்பட்டபடி உணவு ஆணையாளராலும், ஏனையோராலும் இறக்குமதி செய்யப்பட்டது). | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1971 | 1972 | 1973 | மாற்றம் 1973/72 முழுவதும் | மாற்றம் 1973/72 % | 1971 | 1972 | 1973 | மாற்றம் 1973/72 முழுவதும் | மாற்றம் 1973/72 % |
| **அரிசி** | | | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்களில் ... | 334 | 262 | 338 | + 76 | + 21.9 | 290 | 294 | 335 | + 41 | + 13.9 |
| பெறுமதி: ப.இ. ரூபாய்களில் ... | 188 | 142 | 322 | + 180 | + 126.8 | 195 | 161 | 270 | + 109 | + 67.7 |
| கொ. க. விலை தொன்னொன்றுக்கு ரூபா. ... | 563.11 | 544.25 | 953.18 | +408.93 | + 75.1 | 673.78 | 547.27 | 807.47 | + 260.20 | + 47.5 |
| **கோதுமை மா** | | | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்களில் ... | 330 | 324 | 365 | + 41 | + 12.8 | 318 | 301 | 396 | + 95 | + 31.6 |
| பெறுமதி: ப.இ. ரூபாய்களில் ... | 208 | 216 | 458 | + 242 | +112.0 | 206 | 193 | 453 | + 260 | + 134.7 |
| கொ.க. விலை தொன்னொன்றுக்கு ரூபா. ... | 630.79 | 667.26 | 1.254.20 | +586.94 | + 88.0 | 649.93 | 639.92 | 1.144.14 | + 504.22 | + 78.8 |
| **சீனி** | | | | | | | | | | |
| அளவு; ஆயிரம் தொகைகளில் ... | 283 | 214 | 190 | — 24 | — 10.8 | 287 | 193 | 193 | — 30 | — 13.4 |
| பெறுமதி: ப.இ. ரூபாய்களில் ... | 239 | 250 | 334 | + 84 | + 33.8 | 243 | 321 | 321 | + 73 | + 29.4 |
| கொ.க. விலை தொன்னொன்றுக்கு ரூபா. ... | 844.65 | 1.168.16 | 1.752.16 | +584.00 | + 50.0 | 845.87 | 1.111.55 | 1.663.44 | + 501.89 | + 49.6 |
| **அரிசி, கோதுமை மா, சீனி என்பவற்றின் மொத்தப் பெறுமதி ப. இ. ரூ.** ... | 635 | 608 | 1.114 | — 506 | + 83.2 | 644 | 602 | 1.044 | + 44.2 | + 73.4 |

மூலங்கள்: உணவு ஆணையாளர் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்.

இலங்கைச் சீனி இறக்குமதிப் பெறும்தி ரூ. 840 இலட்சத்தால் அதிகரித்த மைக்கு முற்று முழுதான காரணமாகும். எனினும், இறக்குமதி அளவானது, 24,000 தொன்களால் அல்லது 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டுச் சந்தையில் நிலவிய உயர்ந்த விலைகளே சீனியின் சராசரிக் கொ. க. விலை உயர்வதற்குக் காரணமாகும்.

முக்கிய பாகுபாட்டடிப்படையிலான இறக்குமதிகள் சுங்கத்தரவுகள்

அட்டவணை 11 (ஒ) 21ஆனது சுங்கப் பதிவேடுகளில் தரப்பட்டுள்ளவாறு, முக்கியபாகுபாட்டடிப்படையிலும், பொருட்கள் அல்லது பிரிவுகள் அடிப்படையிலும் இறக்குமதிகளைப் பகுத்துக் காட்டுகிறது.

இறக்குமதிகளின் பெறும்திகள் 1972இல் ரூ. 20640 இலட்சமாக விளங்கி 1973இல் ரூபாய் 2715 இலட்சமாக உயர்ந்தன. நுகர்வோர் பொருட்கள் வகுப்பிலேயே முழுமை அதிகரிப்பு மிக்க உயர்ந்தது. 1972ஆம் ஆண்டில் ரூ. 11,130 இலட்சமாக இருந்து 1973ஆம் ஆண்டில் ரூ. 14,850 இலட்சமாக அதிகரித்திருக்கிற வேளையில், நடைமுறை விலையில் பெறுமதியின் அதிகரிப்பு வீதமானது, இடைநிலைப் பொருட்கள் பிரிவில் மிக உயர்ந்து 65 சதவீதமாக விளங்கியது. மேலும், மூதலீடுப் பொருட்களுக்கான பெறுமதியும் சிறியளவால் அதிகரித்தது. 1972ஆம் ஆண்டு மட்டத்திலும் பார்க்க நுகர்வோர், இடையில் முதலீட்டுப் பொருட்களுக்கான பெறுமதியில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்புகள் முறையே 33 சதவீதம் 3 சதவீதம் ஆக இருந்தன.

நுகர்வுப் பொருட்கள்

1971ஆம் ஆண்டிலும் 1972ஆம் ஆண்டிலும் விலைகள் அதிகரித்த போதிலும், 1970ஆம் ஆண்டு தொடக்கம் பெறுமதியில் வீழ்ச்சி அடைந்துகொண்டுவந்த நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் (1967ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட இறக்குமதி விலைக் குறிகாட்டி 1970ஆம் ஆண்டில் 139 இருந்து 1971இல் 149 ஆகி 1972இல் 171 ஆக) 1973ஆம் ஆண்டில் பெருமளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இதற்கு அரிசி, கோதுமை மா, சீனி போன்ற பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி அதிகரித்தமையே பெருமளவு காரணமாகும். 1973ஆம் ஆண்டில், இவ்வுணவுப் பொருட்களின் உலகச் சந்தை விலைகள் உச்ச மட்டத்திற்கு உயர்ந்தமையால், சராசரி கொ கா. க. விலைகள் கிட்டத்தட்ட முறையே 48 சதவீதத்தினாலும், 79 சதவீதத்தினாலும், 50 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. (சுங்கப் பகுதிகளின்படி) மேலும் இது பின்னிணைப்பு அட்டவணைகளிலும் காட்டப்பட்டுள்ளது. அதில் உள்ளவாறு, நுகர்வுப்பொருட்கள் பிரிவில் உள்ள உணவும் பானங்களும் என்ற உப பிரிவின் விலைக்குறிகாட்டியே பெரும் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. மேலும், 1972ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 1973ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா என்பன முறையே 14 சதவீதத்தாலும், 32 சதவீதத்தாலும் உயர்ந்துள்ளன. அத்துடன் கடந்த 4 ஆண்டுகளின் வருடாந்தச் சராசரியான ரூ. 530 இலட்சம் பெறுமதி கொண்ட பாலும் பாற் பொருட்களினதும் இறக்குமதி 1973ஆம் ஆண்டில் ரூ. 700 இலட்சம் வரை உயர்ந்துள்ளது.

## அட்டவணை II (ஓ) 21

### பண்டங்கள் அல்லது பண்டத் தொகுதிகளின்படியும், முக்கிய வகைகளின்படியுமான இறக்குமதிகள் — 1969 – 1973

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... ... ... | 1,218 | 1,294 | 1,136 | 1,113 | 1,485 | 47.9 | 55.8 | 57.2 | 53.9 | 54.7 |
| இவற்றில் | | | | | | | | | | |
| அ. உணவும், குடிவகையும் ... ... ... | 976 | 1,069 | 918 | 961 | 1,309 | 38.0 | 46.1 | 46.2 | 46.6 | 48.2 |
| (i) அரிசி ... ... ... | 257 | 318 | 195 | 161 | 270 | 10.1 | 13.7 | 9.8 | 7.8 | 9.9 |
| (ii) கோதுமை மா ... ... ... | 255 | 260 | 206 | 193 | 453 | 10.0 | 11.2 | 10.4 | 9.4 | 16.7 |
| (iii) (அ) தூய்மையாக்கப்பட்ட சீனி ... ... | 115 | 170 | 243 | 248 | 321 | 4.5 | 7.3 | 12.2 | 12.0 | 11.8 |
| (ஆ) சீனி, ஏனைய (சர்க்கரை, பனங்கட்டி, கற்கண்டு) ... | ... | 1 | 1 | 1 | ... | ... | ... | 0.1 | ... | ... |
| (iv) பாலும், பாற்பொருட்களும் ... ... | 52 | 55 | 47 | 57 | 70 | 2.0 | 2.4 | 2.4 | 2.8 | 2.6 |
| (v) இறைச்சி, மீன், முட்டைகள் ... ... | 87 | 68 | 72 | 83 | 52 | 3.4 | 2.9 | 3.6 | 4.0 | 1.9 |
| இவற்றில் (அ) கருவாடு (மாசிக் கருவாடு தவிர இருற் கருவாடு உட்பட) ... | 69 | 53 | 52 | 62 | 39 | 2.7 | 2.3 | 2.6 | 3.0 | 1.4 |
| (ஆ) மீன்களும், ஏனையவையும் ... | 17 | 15 | 19 | 20 | 13 | 0.7 | 0.6 | 1.0 | 1.0 | 0.5 |
| (vi) ஏனைய உணவு ... ... ... | 145 | 139 | 96 | 143 | 50 | 5.7 | 6.0 | 4.8 | 6.9 | 1.8 |
| (அ) பயறும், பருப்பு வகைகளும் .. | 78 | 63 | 45 | 98 | 31 | 3.1 | 2.7 | 2.3 | 4.7 | 1.1 |
| (ஆ) வெங்காயம் ... ... | 17 | 29 | 1 | ... | — | 0.7 | 1.2 | 0.1 | ... | — |
| (இ) மிளகாய் ... ... | 26 | 26 | 30 | 24 | 3 | 1.0 | 1.1 | 1.5 | 1.2 | 0.1 |
| (vii) குடிவகைகளும், தயாரிக்கப்பட்ட புகையிலையும் .. | 4 | 3 | 2 | 1 | 1 | 0.2 | 0.1 | 0.1 | .. | ... |
| ஆ. புடவைகள் (உடைகள் உட்பட) ... ... | 122 | 124 | 103 | 48 | 55 | 4.8 | 5.3 | 5.2 | 2.3 | 2.0 |
| இ. ஏனைய நுகர்வுப் பொருட்கள் .. ... | 120 | 101 | 115 | 104 | 120 | 4.7 | 4.3 | 5.8 | 5.0 | 4.4 |
| இவற்றில் (i) மோட்டார் வண்டிகள் ... ... | 13 | 10 | 7 | 11 | 8 | 0.5 | 0.4 | 0.4 | 0.5 | 0.3 |
| (ii) கடிகாரங்களும், மணிக்கூடுகளும்.. ... | ... | ... | ... | . | ... | ... | ... | ... | ... | ... |
| (iii) வானொலிப் பெட்டிகள் ... ... | 1 | 1 | 1 | 2 | 3 | ... | ... | 0.1 | 0.1 | 0.1 |
| (iv) றப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் ... ... | 22 | 11 | 11 | 5 | 10 | 0.9 | 0.5 | 0.6 | 0.2 | 0.4 |
| (v) மருந்துகளும், மருந்துப் பொருட்களும் .. | 32 | 29 | 34 | 41 | 36 | 1.3 | 1.5 | 1.7 | 2.0 | 1.3 |
| 2. நடுத்தரப் பொருட்கள் ... ... ... | 592 | 451 | 388 | 458 | 754 | 23.3 | 19.5 | 19.5 | 22.2 | 27.8 |
| இவற்றில் (i) உரம் .. ... ... | 66 | 81 | 59 | 63 | 111 | 2.6 | 3.5 | 3.0 | 3.1 | 4.1 |
| (ii) பெற்றோலிய உற்பத்திகள் ... ... | 156 | 59 | 26 | 38 | 295 | 6.1 | 2.5 | 1.3 | 1.8 | 10.9 |
| (iii) நிலக்கரி ... ... ... | 4 | 4 | 4 | 1 | 3 | 0.2 | 0.2 | 0.2 | ... | 0.1 |
| (iv) இரசாயனப் பொருட்களும், கலவைகளும் ... | 66 | 56 | 66 | 73 | 107 | 2.6 | 2.4 | 3.3 | 3.5 | 3.9 |
| (v) சாயப் பொருட்களும், தோல் பதனீட்டுப் பொருட்களும், வர்ணமூட்டும் பொருட்களும் ... | 14 | 10 | 11 | 14 | 12 | 0.6 | 0.4 | 0.6 | 0.7 | 0.4 |
| (vi) தேயிலைப் பெட்டிகளும், ஏனைய பெட்டிகளும் ... | 13 | 9 | 20 | 9 | 5 | 0.5 | 0.4 | 1.0 | 0.4 | 0.2 |
| (vii) தாளும், தாள் மட்டைகளும் ... ... | 55 | 45 | 48 | 42 | 40 | 2.2 | 1.9 | 2.4 | 3.1 | 1.5 |
| (viii) நெசவு நூலும், தையல் நூலும் ... .. | 80 | 41 | 40 | 61 | 21 | 3.1 | 1.8 | 2.0 | 3.0 | 0.8 |
| (ix) தயாரிக்கப்படாத புகையிலை ... .. | 6 | 3 | 4 | 1 | 3 | 0.2 | 0.1 | 0.2 | ... | 0.1 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... ... ... | 700 | 546 | 419 | 438 | 452 | 27.5 | 23.5 | 21.1 | 21.2 | 16.6 |
| இவற்றில் (i) கட்டட ஆக்கப் பொருட்கள் ... ... | 99 | 119 | 118 | 121 | 107 | 3.9 | 5.1 | 5.9 | 5.9 | 3.9 |
| இவற்றில் (அ) சீமெந்து .. .. | 14 | 7 | 3 | 2 | 2 | 0.6 | 0.3 | 0.2 | 0.1 | 0.1 |
| (ii) போக்குவரத்துச் சாதனங்கள் ... ... | 213 | 126 | 76 | 107 | 95 | 8.4 | 5.4 | 3.8 | 5.2 | 3.5 |
| (iii) எந்திரங்களும், துணைக்கருவிகளும் ... | 368 | 276 | 200 | 181 | 224 | 14.5 | 11.9 | 10.1 | 8.8 | 8.3 |
| 4. மொத்தம் (விடயங்கள் 1, 2, 3) ... ... ... | 2,510 | 2,292 | 1,943 | 2,009 | 2,690 | 98.7 | 99.0 | 97.8 | 97.3 | 99.1 |
| 5. பகுக்கப்படாத இறக்குமதிகள் .. .. | 33 | 22 | 43 | 55* | 25 | 1.3 | 1.0 | 2.2 | 2.7 | 0.9 |
| 6. எல்லா இறக்குமதிகளினதும் மொத்தம் ... ... | 2,543 | 2,313 | 1,986 | 2,064* | 2,715 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

* திருத்தப்பட்ட எண் தொகைகள்.

மூலம்: இலங்கைச் சுங்கம்.

குறைந்தளவு இறக்குமதி, செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் மீன், இறக்குமதி (கருவாடும் மற்றை யாவையும்) யானது, 1972ஆம் ஆண்டில் ரூ. 620 இலட்சமாக இருந்து 1973ஆம் ஆண்டில் ரூ. 320 இலட்சமாக வீழ்ச்சி யடைந்தது. 'ஏனைய உணவுப்பொருட்கள்' என்ற பிரிவின் இறக்குமதிப் பெறு மதியும் 1972ஆம் ஆண்டில் ரூ. 1,430 இலட்சமாக இருந்து 1973ஆம் ஆண்டில் ரூ. 500 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது. இப்பகுதியில் 1973ஆம் ஆண்டில் கடலை வகைகள் பருப்பு வகைகளின் இறக்குமதிப் பெறுமதிகள் கிட்டத்தட்ட 67 சத வீதத்தாலும் மிளகாய் இறக்குமதிகள் 88 சதவீதத்தாலும் வீழச்சியடைந் துள்ளன.

ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியானது கிட்டத்தட்ட 15 சத வீதத்தால் உயர்ந்துள்ளது. றப்பர் ரயர்களினதும், ரியூப்புக்களினதும் உள்நாட்டு உற்பத்தியானது, 1972ஆம் ஆண்டில் 157,000 ஆக இருத்து 1973ஆம் ஆண்டில் 149,000 ஆக வீழ்ச்சியுற்றமை காரணமாக 1973ஆம் ஆண்டில் ரயர் ரியூப் புக்களினது இறக்குமதிப் பெறுமதியானது முன்னைய ஆண்டிலும் பார்க்க இரண்டு மடங்காகி ரூ. 100 இலட்சமாகியது. (மேலும், 1973ஆம் ஆண்டில் ரயரில் சில ஏற்றுமதிகளும் காணப்பட்டது) மேலும், மோட்டார் வாகன இறக்குமதிப் பெறுமதியானது 1972ஆம் ஆண்டில் ரூ. 110 இலட்சமாக விளங்கி 1973ஆம் ஆண்டில் ரூ 80 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது. மேலும் மருத்து வப் பொருட்களும் ஒட்டிய பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 1972ஆம் ஆண்டில் ரூ. 410 இலட்சமாக இருந்து 1973ஆம் ஆண்டில் ரூ. 360 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது.

## இடை நிலைப் பொருட்கள்

1973ஆம் ஆண்டில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி யானது அதிகரித்தது. இதற்கு, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் பதிவு செய்யப்பட்டதற்கிணங்க, மசகு எண்ணெயின் இறக்குமதிப் பெறுமதியானது 1972 ஆம் ஆண்டில் ரூ. 1,880 இலட்சமாக விளங்கி, 1973ஆம் ஆண்டில் ரூ. 2,660 இலட்சமாக உயர்வுற்றமையே பெருமளவு காரணமாகும்

1973ஆம் ஆண்டில், உரம், இரசாயனப் பொருட்கள், அது சார்ந்த மூலக் கூறுகளின் இறக்குமதி விலைகள் பெருமளவால் உயர்வுற்றது. உரப் பொருள் இறக்குமதியைப் பொறுத்தவரையில், இறக்குமதி செய்யப்பட்ட அள வானது 1972ஆம் ஆண்டில் 40 இலட்சம் அந்தர்களாக விளங்கின, 1973ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 50 இலட்சம் அந்தர்களாக உயர்வடைந்தது பெற் றோலியத்தினை அடிப்படையாகக் கொண்ட சில உள்ளீட்டுப் பொருட்களுக்கு 3973ஆம் ஆண்டில் தட்டுப்பாடு இருந்தமையாலும், உயர்வான விலைகளைக் கொண்டிருந்தமையினாலும், இறக்குமதி செய்யப்பட்ட உரத்தின் சராசரி அலகு விலையானது, 1972ஆம் ஆண்டு மாவட்டத்திலிருந்து 41 சதவீதத்தால் உயர் வடைந்தது. 1973ஆம் ஆண்டில் துணி இறக்குமதிகள் 15 சதவீதத்தால் மாத் திரமே அதிகரித்த போதிலும், நெசவு நூல், மற்றைய நூலின் இறக்குமதிகள் 65 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

1973ஆம் ஆண்டில் இடைநிலைப் பொருட்களின் விலைகள் பெரும்அளவு அதிகரிப்பான 51 சதவீதத்தினைப் பதிவுசெய்தன இதுவே, ஒரு தனிப்பட்ட பிரிவின் இறக்குமதிகளிற் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த விலையாகும்.

## முதலீட்டுப் பொருட்கள்

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதியானது 1972ஆம் ஆண்டில் ரூ. 4,380 இலட்சமாக இருந்து 1973ஆம் ஆண்டில் ரூ. 4,520 இலட்சமாகி எல்லையளவான அதிரிப்பைக் காட்டியது. 1973ஆம் ஆண்டில் இப்பிரிவிற்குள்ளான கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. கட்டடப் பொருட்கள் என்ற உப பிரிவில் உள்ள சீமெந்தின் இறக்குமதிப் பெறுமதியானது, 1972ஆம் ஆண்டிலும் 1973ஆம் ஆண்டிலும் கிட்டத்தட்ட ரூ. 20 இலட்சமாக விளங்கியது. சீமெந்தின் உள்நாட்டு உற்பத்தியானது, 1972ஆம் ஆண்டில் 377,000 தொன்களாக இருந்து 1973ஆம் ஆண்டில் 415,000 தொன்களாக அதிகரித்ததனைத் தொடர்ந்து, இறக்குமதி அளவானது, 1972ஆம் ஆண்டில் 347,000 அந்தர்களாக விளங்க, 1973இல் 214,000 அந்தர்களாகக் குறைக்கப்பட்டது. 1973ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்தின் சராசரி விலை கிட்டத்தட்ட 14 சதவீதத்தால் உயர்வடைந்து 1 அந்தருக்கு ரூ 7.69 சதமாக விளங்கியது இயந்திரங்கள், சாதனங்களின் இறக்குமதிப் பெறுமதியானது, கிட்டத்தட்ட 24 சதவீதத்தால் உயர்வுற்று ரூ. 2,240 இலட்சத்தை அடைந்தது முதலீட்டுப் பொருட்களைப் பொறுத்த வரையில் இறக்குமதி விலைக் குறிகாட்டிகளில் பதிவுசெய்யப்பட்ட விலை அதிகரிப்பானது, 17 சத வீதமாக இருக்கிற அதேவேளையில், மொத்த இறக்குமதி விலைகள் 32 சதவீதத்தால் உயர்வடைந்தன. மேலும், நுகர்வுப் பொருட்கள், இடைத்தரப்பொருட்களுக்கான இறக்குமதி விலைகள் முறையே, 27 சதவீதத்தாலும், 51 சதவீதத்தாலும் அதிகரித்தன.

## எண்ணெய்

பெற்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பினால் எண்ணெய் விலையில் விதிக்கப்பட்ட பெருமளவு உயர்வு கொண்ட விலைகள் உலக நாடுகளின் பொருளாதாரத்தில், குறிப்பாக, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்திற் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். மேலும் எண்ணெய் இறக்குமதி செய்கின்ற அநேக நாடுகளில், எண்ணெய் விலையிலேற்பட்ட உயர்வால் விலைகள் அதிகரித்தல், பொருளாதார மந்தம் சென்மதி இடர்ப்பாடுகள் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையினால் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பீப்பா மசகெண்ணெயின் க. ஏ. பெ. விலையானது 1970 ஆம் ஆண்டில் ஐ. அ. நா. டொலர்கள் 1.04 ஆக இருந்து, 1972 ஆம் ஆண்டில் ஐ. அ. நா. டொலர்கள் 1.90 ஆகவும், 1973 ஆம் ஆண்டு யூனில் ஐ. அ. நா. டொலர்கள் 2.46 ஆகவும் 1973 ஆம் ஆண்டு [1] திசெம்பரில் ஐ. அ. நா. டொலர்கள் 4.40 ஆகவும் உயர்வடைந்தது.

---

1. 1974 சனவரி 1 ஆம் திகதியில் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயின் விலைகள் இரண்டு மடங்காக அதிகரித்தது. உதாரணமாக ஈரான் ஒரு பீப்பா மசகு எண்ணெயின் அனுப்பீா விலையை 11.65 ஆக உயர்த்தியது. லிபியா $ 15.78 ஆக இரண்டு மடங்காக உயர்த்தியது.

1972 ற்கும் 1973 ற்கும் இடையில் மசகெண்ணெயினதும் தூய்மையாக்கப்பட்ட எண்ணெயினதும் இறக்குமதிப் பெறுமதியும் மண்ணெண்ணெயையும் விமான எரிபொருளையும் உள்ளடக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளும் பின்வரும் முறையில் அமைந்துள்ளன.

### அட்டவணை II (ஓ) 22

### பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதிகளின் பெறுமதி

(ப. இ. ரூ.)

| | 1972 | 1973 |
|---|---|---|
| 1. ஏற்றுமதிகள் ... | 18.8 | 23.6 |
| 2. கப்பல், விமான எரிபொருள் ... | 69.9 | 110.8 |
| 3. மொத்தம் (1 + 2) ... | 88.7 | 134.4 |
| 4. எண்ணெய் இறக்குமதிகள்* ... | 186.5 | 273.7 |
| 5. தேறிய (4 – 3) ... | 97.8 | 139.3 |

* சிறிய அளவான சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை உள்ளடக்கும். இது 1272, 1973 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 87 இலட்சமாகவிருந்தது.

**வர்த்தகத்தின் அமைப்பு**

அட்டவணை (ஓ) 23 இல் வர்த்தகக் கூட்டு நாடுகளுடனும், மற்றைய குழுக்களுடனும் இலங்கை நடாத்துகின்ற வர்த்தகத்தின் தன்மை தரப்பட்டுள்ளது. பொதுநல அமைப்பு நாடுகளுக்கு 1973 இல் இலங்கை செய்த ஏற்றுமதிகளின் அளவு கணிசமானளவு அதிகரித்திருக்கையில், இந்நாடுகளிலிருந்து பெற்ற இறக்குமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியுற்றுள்ளன. பொதுநல அமைப்பல்லா நாடுகளுடன் எமக்குள்ள ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளன. ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் இலங்கைக்குள்ள வர்த்தகத் தொடர்பும் இதேயளவில் இருக்கின்றது. ஐரோப்பிய கூட்டற்ற வர்த்தக அமைச்சு நாடுகளுடன் எமக்குள்ள ஏற்றுமதித் தொடர்புகள் கணிசமானளவு அதிகரிக்க, இப்பகுதியிலிருந்து எமக்குக் கிடைக்கும் இறக்குமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியுற்றுள்ளன. ஆசிய தூரகிழக்குப் பொருளாதார ஆணைக்குழு நாடுகளுடன் இலங்கையின் வர்த்தகத் தொடர்பு, 1973 இல் குறிப்பிடத்தக்களவால் விரிவடைந்துள்ளது.

1972 உடன் ஒப்பிடுகையில் பொதுநல அமைப்பு நாடுகளுடனும் ஐரோப்பிய கூட்டற்ற வர்த்தக அமைப்பு நாடுகளுடனும் கிழக்கு ஐரோப்பாவுடனுமான இலங்கையின் வர்த்தக நிலுவை 1973 இல் திருந்தியது. அதேவேளையில் பொதுநல அமைப்பல்லாத நாடுகளுடன் எம் வர்த்தக நிலுவை மாறுபட்ட நிலையில் இருந்தது.

1972 உடன் ஒப்பிடுகையில் 1973 இல் இலங்கைக்கும் முக்கிய வர்த்தக பங்காளருக்குமிடையில் வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. ஐக்கிய இராச்சியத்துடன் எமக்குள்ள ஏற்றுமதி

கணிசமானளவு அதிகரிக்க அங்கிருந்து பெறப்பட்ட இறக்குமதி குறிப்பிடத் தக்களவு வீழ்ச்சியுற்று, உயர்ந்த வர்த்தக மிகையை ஏற்படுத்தியது. ஐ. சோ. ச. கு. உடன் இலங்கை செய்த ஏற்றுமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியுற, அங் கிருந்து பெற்ற இறக்குமதிகள் அதிகரித்தன. *1973* இல் சீனு, பாக்கித்தான், ஐக்கிய அமெரிக்க நாடுகளுடனுன வர்த்தகம் அதிகரிக்க இந்தியாவுடனுன இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன. ஐக்கிய இராச் சியத்துடனும் (ரூ. *651* இலட்சத்தால்) பாக்கித்தானுடனும் (ரூ. *339* இலட்சத் தால்) உள்ள இலங்கையின் வர்த்தக நிலுவை குறிப்பிடத்தக்களவு திருந்தி இருக்கையில் ஐக்கிய அமெரிக்காவுடனும் (ரூ. *479* இலட்சத்தால்) சீனுவுடனும் (ரூ. *349* இலட்சத்தால்) ஐ. சோ. ச. குடியரசுடனும் (ரூ. *253* இலட்சத்தால்) உள்ள இலங்கையின் வர்த்தக நிலுவை வீழ்ச்சியைக் காட்டியுள்ளது.

**அட்டவணை II (ஓ) 23**

**இலங்கையின் பன்னுட்டு வணிகப் பொருள் வர்த்தகம்**
**வர்த்தகப் பிரிவுகள், ஏனைய தொகுதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய வர்த்தகப் பங்காளர் ஆகிய பிரிவுகளின் அடிப்படையில்**

ப. இ. ரூபாய்களில்

| | மொத்த் ஏற்றுமதிகள் க. ஏ. பெ. (அ) | | மொரத்த இறக்குமதிகள் கொ. கா. க. (ஆ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 |
| பொதுநலவமைப்பு நாடுகள் .. | 548.7 | 671.1 | 594.5 | 578.1 | — 45.8 | + 93.0 |
| பொதுநலவமைப்பு அல்லாத நாடுகள் .. | 1,386.2 | 1,831.1 | 1,464.1 | 2,115.4 | — 77.9 | — 284.3 |
| ஐரோப்பிய பொருளாதார சமுகம் ... | 181.1 | 591.5 | 249.2 | 622.0 | — 68.1 | — 30.5 |
| ஐரோப்பிய கட்டில்லா வர்த்தக அமைப்பு ... | 285.9 | 336.1 | 265.7 | 238.3 | + 20.2 | + 97.8 |
| கிழக்கு ஐரோப்பா ... | 145.1 | 194.9 | 81.9 | 101.9 | + 63.2 | + 93.0 |
| ஆ. தூ. கி. பொ. ஆ. பிரதேசம் | | | | | | |
| (அ) அபிவிருத்தி அடையும் | 239.7 | 392.9 | 471.3 | 543.1 | — 231.6 | — 150.2 |
| (ஆ) அபிவிருத்தியடைந்த... | 161.0 | 234.7 | 315.9 | 364.7 | — 154.9 | — 130.0 |
| ஐ. இ. ... | 272.7 | 300.2 | 222.1 | 184.5 | + 50.6 | + 115.7 |
| ஐ. சோ. ச. கு. ... | 64.2 | 63.0 | 22.9 | 47.0 | + 41.3 | + 16.0 |
| சீனு ... | 160.1 | 240.6 | 95.9 | 211.3 | + 64.2 | + 29.3 |
| பாக்கித்தான் ... | 155.0 | 213.9 | 83.9 | 108.9 | + 71.1 | + 105.0 |
| இந்தியா ... | 11.0 | 10.6 | 110.1 | 80.6 | — 99.1 | — 70.0 |
| ஐ. அ. நா. ... | 140.5 | 180.1 | 158.2 | 245.7 | — 17.7 | — 65.6 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

(அ) கப்பற் களஞ்சியங்களையும், கப்பல் எரிபொருட்களையும் தவிர்க்கிறது.
(ஆ) பிரயாணிகள் பொதிகளையும், மீள இறக்குமதிகளையும் உள்ளடக்குகிறது.

**மக்கள் சீனக் குடியரசுடன் வர்த்தகம்**

*1969—1973* காலப் பிரிவில் இலங்கை மக்கள் சீனக் குடியரசுடன் நடாத் திய வர்த்தகத் தரவினை அட்டவணை *11* (ஓ) *24* தர, *1972* இலும் *1973* இலும் செய்யப்பட்ட வர்த்தகப் பொருட்களின் பெறுமதியை அட்டவணை *11* (ஓ) *25* தருகின்றது.

மக்கள் சீனக் குடியரசுடன் இலங்கை செய்த வர்த்தகத்தின் பெறுமதி 1973 இல் விரிவடைந்தது. 1972 உடன் ஒப்பிடுகையில், 1973 இல் சீனாவுடன் செய்த மொத்த வர்த்தகத்தின் பெறுமதி ரூ 1,960 இலட்சத்தால் அல்லது 76.6 சத வீதத்தால் அதிகரித்தது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில், சீனாவுடன் செய்த ஏற்றுமதிகளின் அளவு ரூ 810 இலட்சத்தால் அல்லது 50 சத வீதத்தால் அதிகரிக்க அதே வேளையில், சீனாவில் இருந்து செய்த இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 1,150 இலட்சத்தால் அல்லது 120 சத வீதத்தால் அதிகரித்தது. 1972 இல் ரூ. 640 இலட்சமாக விளங்கிய வாத்தக மிகை 1973 இல் ரூ. 300 இலட்சமாக வீழ்ச்சியுற்றது.

## அட்டவணை II (ஓ) 24

## மக்கள் சீனக் குடியரசுடனான வர்த்தகம் 1969 - 1973

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை பு. இ. ரூ. | வர்த்தக மொத்த விற்பனவு | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த ஏற்று மதியின் சதவீதம் | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த இறக்கு மதியின் சதவீதம் | | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த வர்த்தக விற்பனவின் சதவீதம் |
| 1969 | 240 | 12.5 | 282 | 10.1 | — 42 | 522 | 11.7 |
| 1970 | 252 | 12.4 | 289 | 12.5 | — 37 | 541 | 12.4 |
| 1971 | 181 | 9.4 | 161 | 8.1 | + 20 | 342 | 8.7 |
| 1972 | 160 | 8.0 | 96 | 4.6 | + 64 | 256 | 6.3 |
| 1973 | 241 | 9.2 | 211 | 7.8 | + 30 | 452 | 8.5 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

## அட்டவணை II (ஓ) 25

## மக்கள் சீனக் குடியரசுடனான பண்டவகையான வர்த்தகம் 1972 — 1973

(ப. இ. ரூபாய்களில்)

| | 1972 | 1973 | முழுமையான மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | |
| றப்பர் ... ... | 109.1 | 232.7 | + 123.6 |
| தேங்காயெண்ணெய் ... ... | 49.7 | 2.5 | — 47.2 |
| ஏனையவை ... ... | 1.3 | 5.4 | + 4.1 |
| **மொத்தம்** ... | **160.1** | **240.6** | **+ 80.5** |
| **இறக்குமதிகள்** | | | |
| அரிசி ... ... | 40.0 | 156.0 | + 116.0 |
| புடவை ... ... | 15.9 | 29.6 | + 13.7 |
| செத்தெல் மிளகாய் ... ... | 17.1 | 2.9 | — 14.2 |
| நெசவு நூலும், தையல் நூலும் ... | 0.9 | 0.5 | — 0.4 |
| பயறு வகைகளும், வாசனைச் சரக்குகளும் ... | 3.2 | 2.7 | — 0.5 |
| தேயிலைப்பெட்டிகள் ... .. | 1.2 | 1.6 | + 0.4 |
| ஏனையவை ... .. | 17.6 | 18.0 | + 0.4 |
| **மொத்தம்** ... .. | **95.9** | **211.3** | **+ 115.4** |
| வர்த்தக நிலுவை ... ... | +64.2 | +29.3 | — |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

1973 இல் சீனுவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முதன்மைப் பொருளாக றப்பர் தொடர்ந்தும் விளங்கி, ஏற்றுமதிப் பெறுமதிகள் இரட்டிப்பிற்கு மேலாகப் பெருகி, ரூ. 1,236 இலட்சத்தால் அதிகரித்தது. தேங்காயெண்ணெய் ஏற்றுமதிகள் ரூ. 48,472 இலட்சம் கொண்ட கடும் வீழ்ச்சியைக் காட்டின. அரிசி, புடவைகளின் இறக்குமதிகள் முறையே ரூ. 1,160 இலட்சத்தாலும், ரூ. 137 இலட்சத்தாலும் அதிகரிக்க செத்தல் மிளகாய் இறக்குமதிகள் ரூ. 142 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

### ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகம்

இலங்கை ஐ. சோ. ச. குடியரசுடனும், ஐரோப்பாவுடனும் கடந்த ஐந்தாண்டுகளாகச் செய்த இறக்குமதிகள் ஏற்றுமதிகள் ஆகியவற்றின் தரவுகளை அட்டவணை 11 (ஓ) 26 தர, 1972இலும் 1973இலும் இந்நாடுகளுடன் செய்த வர்த்தகம் பற்றிய விபரங்களை அட்டவணை 11 (ஓ) 27 தருகின்றது.

அட்டவணை II (ஓ) 26

ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகம்* 1969 — 1973

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை | வர்த்தக மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | ப. இ. ரூ. | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த வர்த்தக தொகைகளின் சதவீதம் |
| 1969 | 165 | 8.6 | 251 | 9.9 | — 86 | 416 | 12 0 |
| 1970 | 174 | 8.6 | 185 | 8.0 | — 11 | 359 | 8.2 |
| 1971 | 180 | 9.3 | 151 | 7.6 | + 29 | 331 | 8.4 |
| 1972 | 145 | 7.2 | 82 | 4.0 | + 63 | 227 | 5.6 |
| 1973 | 195 | 7.5 | 102 | 3.8 | + 93 | 297 | 5.6 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

* பல்கேரியா, செக்கோசிலவாக்கியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, கங்கேரி, போலாந்து, ரூமேனியா, யூகோசிலாவியா ஆகியன.

ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனும் செய்த வர்த்தகப் பெறுமதியின் முன்னைய வீழ்ச்சிப்போக்கு 1973இல் முற்றாக மாறி, 1972 உடன் ஒப்பிடுகையில், ரூ. 700 இலட்சத்தால் அல்லது 30.8 சத வீதத்தால் அதிகரித்தது. இதற்கு இந்நாடுகளுடன் செய்த ஏற்றுமதி இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். 1972உடன் ஒப்பிடுகையில் இப்பகுதியுடன் செய்த ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 500 இலட்சத்தால் அல்லது 34 சத வீதத்தால் விரிவடைய இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 200 இலட்சத்தால் அல்லது 24 சத வீதத்தால் அதிகரித்தது.

## அட்டவணை II (ஓ) 27

### ஐ. சோ. ச. குடியரசுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனுமான வர்த்தகத்தின் பெறுமதி (பண்ட அடிப்படையில்)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | பல்கேரியா | | செக்கோ சிலவாக்கியா | | சோ. ச. கு. | | கங்கேரி | | போலந்து | | ரூமேனியா | | யூகோ சிலாவியா | | ஐ.சோ. ச.சா. கு. | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 | 1972 | 1973 |
| (i) மொத்த ஏற்றுமதிகள் | 2.16 | 8.03 | 12.65 | 14.23 | 22.38 | 13.09 | 0.79 | 20.66 | 15.28 | 43.10 | 14.39 | 19.49 | 13.32 | 13.31 | 64.17 | 62.95 | 145.14 | 196.86 |
| அவற்றில் | | | | | | | | | | | | | | | | | | |
| தேயிலை ... | ... | — | 0.25 | ... | 0.24 | ... | ... | 0.39 | 2.26 | — | ... | ... | 1.41 | 0.82 | ... | 8.66 | 4.16 | 9.87 |
| றப்பர் ... | 2.13 | 8.03 | 4.10 | 7.34 | 11.96 | 9.05 | 0.30 | 18.74 | 10.14 | 35.49 | 12.94 | 19.24 | 3.08 | 4.95 | 11.16 | 47.53 | 55.81 | 150.37 |
| தெங்குப் பொருட்கள் ... | — | — | 7.30 | 1.15 | 11.11 | 3.14 | 0.66 | 1.51 | 1.37 | 6.23 | — | 0.02 | 4.13 | 0.19 | 49.10 | — | 74.27 | 12.24 |
| (ii) மொத்த இறக்குமதிகள் | 0.99 | 0.49 | 11.44 | 6.22 | 11.77 | 3.53 | 9.58 | 3.99 | 8.02 | 29.76 | 10.07 | 8.75 | 7.09 | 2.10 | 22.87 | 47.00 | 81.83 | 101.84 |
| அவற்றில் | | | | | | | | | | | | | | | | | | |
| சீனி ... | — | — | 9.13 | — | — | — | — | — | — | 21.47 | — | — | 5.72 | — | — | — | 14.85 | 21.47 |
| இயந்திரங்களும் அவற்றின் பாகங்களும் மற்றவையும் ... | — | — | 0.32 | 0.42 | 0.64 | 0.46 | 0.04 | — | 0.01 | 0.09 | 1.04 | 0.07 | 0.34 | 0.56 | 2.41 | 4.33 | 4.80 | 5.93 |
| புடவைகள் ... | 0.39 | — | 0.86 | 3.47 | — | — | 1.16 | — | 3.41 | 6.69 | 0.88 | — | — | — | 1.55 | — | 8.25 | 10.16 |
| தேயிலைப் பெட்டிகள் ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 4.57 | 3.31 | 4.57 | 3.31 |
| இரும்பும், உருக்கும் அவற்றிலான பொருட்களும் மற்றவையும் ... | — | — | 0.11 | ... | 0.35 | 0.11 | — | — | ... | 0.02 | 0.07 | 0.01 | 2.58 | 0.07 | 3.53 | 17.49 | 6.64 | 17.70 |
| பெற்றோலியப் பொருட்கள் ... | — | — | ... | — | ... | ... | — | — | — | — | — | — | — | 0.12 | — | ... | .. | 0.12 |
| சீமெந்து ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| வர்த்தக நிலுவை ... | + 1.17 | + 7.54 | + 1.21 | + 8.01 | + 10.61 | + 9.56 | − 8.79 | + 16.67 | + 7.26 | + 13.34 | + 4.32 | + 10.74 | + 6.23 | + 11.21 | + 41.30 | + 15.95 | + 63.31 | + 93.02 |

மூலம்: இலங்கைச் சுங்கப் பகுதி.

1973இல் ஐ. சோ. ச. குடியரசுதான் இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராக விளங்கி, இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தப் பெறுமதியில் ரூ. 629 இலட்சத்திற்கு வகை கூறியது. எனினும், சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐ. சோ ச. கு. உடன் செய்த ஏற்றுமதியின் பெறுமதி ரூ. 12 இலட்சத்தால் சுருக்கமடைந்தது இந்நாடுகளில் போலாந்து (ரூ. 430 இலட்சம்), கங்கேரி (ரூ. 210 இலட்சம்), உருமேனியா (ரூ. 200 இலட்சம்), செக்கோசிலவாக்கியா (ரூ. 140 இலட்சம்), யூகோசிலவாக்கியா (ரூ. 130 இலட்சம்) ஆகிய நாடுகள் இலங்கையின் ஏனைய முக்கிய வாங்குனராக விளங்கின.

இந்நாடுகளுக்குச் செய்யப்பட்ட ஏற்றுமதியின் பெறுமதி அதிகரித்தமைக்கு றப்பர், தேயிலை ஆகியவற்றின் ஏற்றுமதிகள் முறையே ரூ. 946 இலட்சத்தாலும் ரூ. 970 இலட்சத்தாலும் அதிகரித்தமையே காரணமாகும். தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ரூ. 620 இலட்சத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

இந்நாடுகளிலிருந்து இலங்கைக்கு செய்யப்பட்ட இறக்குமதிகள் 1972இன் ரூ. 820 இலட்சத்திலிருந்து, 1973இல் ரூ. 1,020 இலட்சமாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. 1972உடன் ஒப்பிடுகையில் ஐ. சோ. ச. குடியரசிலிருந்து பெற்ற இறக்குமதிகள் 1972ஆம் ஆண்டைவிட ரூ. 241 இலட்சத்தால் அதிகரித்து 1973இல் ரூ. 470 இலட்சமாக விளங்கின. சீனி (ரூ. 66 இலட்சத்தால்) இரும்பும் உருக்கும் (ரூ. 110 இலட்சத்தால்), புடவைகள் (ரூ. 20 இலட்சத்தால்) ஆகியவற்றின் இறக்குமதிகள் அதிகரித்தமையே, இவ்விறக்குமதிகளின் விரிவிற்குக் காரணமாக விளங்கியது.

**அரசாங்கத் தனியுரிமையின் கீழான இறக்குமதிகள்**

அரசாங்கத்தால் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தது. அரிசி, மா, சீனி என்பவற்றை உணவு ஆணையாளர் மாத்திரமே இறக்குமதி செய்கையில் மல்லி, வெந்தயம். கருவாடு, மாசிக் கருவாடு, புளிச்சத்து, அப்பச்சோடா, பருப்புவகை, உள்ளி, சவ்வரிசி, பார்லி, பெருஞ்சீரகம், நற்சீரகம், பேரீச்சம்பழம், பழவற்றல், முந்திரிகைவற்றல் போன்ற குறிப்பிட்ட உணவுகளும் ஏனைய விடயங்களும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தினுல் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டன. சில விளையாட்டுப் பொருட்கள், மருத்துவ வெப்பமானிகள், விஞ்ஞானக் கண்ணாடிப் பொருட்கள்போன்ற விஞ்ஞான உபகரணங்களும் கூ. மொ. வி. நிலையத்தால் இறக்குமதி செய்யப்பட்டன. பெருந்தொகையான பலவகைப்பட்ட பொருட்கள், இலங்கை அரசாங்க வர்த்தக (பொது)க்கூட்டுத்தாபனத்தால் இறக்குமதிசெய்யப்பட்டன இவை தேயிலைப் பெட்டிகள், தேயிலைப்பெட்டிச் சட்டங்கள், புகைப்படக் கருவிகள், மின்சார விடயங்கள், (மின்குமிழிகள், இருப்புகள், பற்றிகள், டார்ச்சுக்கள் போன்றவை) தோட்டாக்குண்டுகள், வெடிமருந்துகள். மோட்டார் வாகனங்களுக்கான டயர்கள், டியூப்புகள், அலுவலகக் கருவிகள், நிறுக்கும் இயந்திரங்கள் என்பவற்றை உள்ளடக்கும் இலங்கை அரசாங்க வர்த்தக (புடவை) க் கூட்டுத்தாபனம், தையல்நூல், நெகிழக்கூடிய சித்தைகள், பின்னல்கள், பருத்தி ஆடை, கம்பளி உடுப்புகள் என்பவற்றையும் இலங்கை அரசாங்க வர்த்தக (இழுபொறிக்) கூட்டுத்தாபனம் விவசாய இழுபொறிகள், பொறிகள், இயந்திர பாகங்கள் என்பனவற்றையும் இறக்குமதிசெய்தன.

பெருந்தொகையான கட்டடப்பொருட்கள் கட்டடப் பொருட் கூட்டுத்தாபனத்தாலும், தாள், தாள்மட்டைகள் கிழக்கிலங்கைத் தாள் ஆலைக் கூட்டுத்தாபனத்தாலும், மீன்பிடி வலைகளும், தூண்டில்களும் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தாலும், நெற்குத்தும் இயந்திரப் பாகங்கள் நெற்சந்தைப்படுத்தல் சபையாலும், மிருகங்களுக்கான தீன்களும், சோளமும் எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தாலும், பாலாடை, பால்மா, சத்துப்பால்மா(மோல்ட்டட்)பாற்சபையாலும், அநேக உரங்கள் இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தாலும் இறக்குமதிசெய்யப்பட்டன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மசகு எண்ணெய், விமான எரிபொருள், கலக்கும் பொறிகள், தன்னியக்க, கைத்தொழில் கலக்கும் பொறிகள், பிறேக் எண்ணெய்கள், பராபின் தீக்குச்சி, மெழுகுகள், பெற்றோலியப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிக்குத் தனியுரிமை பெற்றிருந்தது. மருத்துவக் கூட்டுத்தாபனம் மேல்நாட்டு மருந்துகளிலும், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், எரிசோடாவிலும், இலங்கைப்புகையிலைக் கூட்டுத்தாபனம் பீடி இலைகளிலும் தனி இறக்குமதியாளராக விளங்கின.

**சரக்கின் இடப்பெயர்ச்சி**

***துறைமுகங்களில் கையாளப்பட்ட சரக்குகள்***

கொழும்பு, காலி, திருகோணமலை துறைமுகங்களிற் கையாளப்பட்ட சரக்குகளின் மொத்த அளவு 1972இன் 2,619,990 கப்பலேற்றப்பட்ட தொன்களிலிருந்து 2.9 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து, 2,543,283 கப்பலேற்றப்பட்ட தொன்களாக விளங்கியது. காலித் துறைமுகத்தாற் கையாளப்பட்ட சரக்கின் அளவு அதிகரிப்பைக் காட்டுகையில், கொழும்பு திருகோணமலைத் துறைமுகங்களில் கையாளப்பட்ட சரக்கின் அளவு முறையே 3 சத வீதத்தாலும் 5 சத வீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. கொழும்புத் துறைமுகத்தால் 1973இன் ஒவ்வொரு காலாண்டுப்பகுதியிலும் கையாளப்பட்ட தொன்களின் விவரங்கள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பீட்டு அட்டவணை 11 (ஓ) 28இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II (ஓ) 28**

**கொழும்புத் துறைமுகத்திற் கையாளப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதிச் சரக்குகள்**

கப்பலிடல் தொன்கள்

| காலாண்டு | 1972 | 1973 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | | | முழுவதும் | % |
| 1 ஆம் ... | 691,065 | 636,478 | — 54,587 | — 7.9 |
| 2 ஆம் ... | 602,135 | 560,802 | — 41,333 | — 6.9 |
| 3 ஆம் ... | 533,915 | 569,161 | + 35,246 | + 6.6 |
| 4 ஆம் ... | 599,318 | 585,796 | — 13,522 | — 2.3 |
| ஆண்டு ... | **2,426,433** | **2,352,237** | — **74,196** | — **3.1** |

மூலம்: துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனம்.

**கப்பற் கட்டணங்கள்**

கப்பற் கட்டண அதிகரிப்புகள் அதிகமான 'கொன்பரன்ஸ்லைன்களில்' 7½ சத வீதத்திலிருந்து 12½ சத வீதம்வரை வேறுபட்டதால் இலங்கையின் சென்மதி நிலுவை இவ்வாண்டில் மேலும் மோசமடைந்தது. பன்னாட்டு நாணயத் தளம்பல்கள், கப்பல் எரிபொருளின் விலை அதிகரிப்புகள் என்பவற்றுக்கேற்ப செய்யப்பட்ட சீராக்கங்களால், மேலதிகமாகப் புகுத்தப்பட்ட மாற்றங்களே 1973இல் குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது.

(i) இலங்கை / அவுத்திரேலிய / 'கன்பரன்ஸ்':

21-02-73 [1] காப்புவரி நாணய மதிப்பிறக்க மேலதிகக் கட்டணம் 5.5 சத வீதத்திலிருந்து 17.22 சதவீதம்.

1-04-73 [2] பொதுவான கப்பற்கட்டண அதிகரிப்பு 10 சத வீதம்.

24-11-73 [3] 5 சதவீதம்கொண்ட கப்பல் எரிபொருள் மேலதிகக் கட்டணம்.

(ii) இலங்கை / தென்னமெரிக்காவின் மேற்குக் கரையோரச்சேவைகள்:

1-04-73 [2] பொதுக்கப்பற் கட்டணத்தின் 10 சத வீத அதிகரிப்பு

(iii) இலங்கை / ஐ. இராச்சியம், அயர் 'கன்பரன்ஸ்';

29-01-73 லிவர்ப்பூல் துறைமுக நெருக்கடி மேலதிகக் கட்டணம் 15 சதவீதம்.

21-02-73 [1] மதிப்பிறக்க மேலதிகக் கட்டணம் 5 சதவீதத்திலிருந்து 16.66 சதவீதம்.

26-02-73 அவன்மவுத் துறைமுக நெருக்கடி மேலதிகக் கட்டணம் 15 சதவீதம்.

20-03-73 லிவர்ப்பூல் துறைமுக நெருக்கடி மேலதிகக் கட்டணம் 15 சத வீதத்திலிருந்து 20 சதவீதம்.

1-10-73 [2] பொதுக் கப்பற் கட்டண அதிகரிப்பு 12½ சதவீதம்.

29-10-73 அவன்மவுத் துறைமுக நெருக்கடி மேலதிகக் கட்டணம் 15 சத வீதத்திலிருந்து 20 சதவீதம்.

28-11-73 [3] கப்பல் எரிபொருள் மேலதிகக் கட்டணம் 3.54 சதவீதம்.

(iv) இலங்கை 'கொன்டினென்டல் கன்பரன்ஸ்':

1-02-73 [1] மதிப்பிறக்க மேலதிகக் கட்டணம் 5.5 சதவீதத்திலிருந்து 17 22 சதவீதம்.

1-10-73 [2] பொதுவான கப்பற் கட்டண அதிகரிப்பு 12½ சதவீதம்.

28-11-73 கப்பல் எரிபொருள் மேலதிகக் கட்டணம் 3.54 சதவீதம்.

---

1. 13-2-73இல் ஐ. நா. டொலரின் மதிப்பிறக்கத்தின்பேரில் செய்யப்பட்ட அதிகரிப்பு.
2. செலவுகளின் அதிகரிப்பின்பேரில் செய்யப்பட்ட அதிகரிப்பு.
3. எரிபொருள் விலை அதிகரிப்புகளின்பேரில் செய்யப்பட்ட அதிகரிப்பு.

(v) ஐ. இ. / கிழக்கு நோக்கிய 'கன்பரன்ஸ்':

1-10-73 [2] பொதுவான கப்பற் கட்டண அதிகரிப்பு 7½ சத வீதம்

(vi) 'கொன்டினென்டல் ஈஸ்டன் கன்பரன்ஸ்':

1-10-73 [2] பொதுவான கப்பற் கட்டண அதிகரிப்பு 7½ சத வீதம்

(vii) 'கனடியன் சிடி லைன் லிமிட்டெட் – லிவ் கோய் அன் கம்பனி லிமிட்டெட்':

12-02-73 [2] பொதுவான கப்பற் கட்டண அதிகரிப்பு 12½ சத வீதம்

(viii இலங்கை / நியூசிலாந்து 'கன்பரன்ஸ்':

1-03-73 [1] காப்பு வரி நாணய மதிப்பிறக்க மேலதிகப் பணம் 5.3 சத வீதம்
12-73 நாணயச் சீராக்கக் காரணி 5.3 சத வீதத்திலிருந்து 13 சதவீதம்
12-73 [3] கப்பல் எரிபொருள் மேலதிகக் கட்டணம் 5 சத வீதம்

(ix) இலங்கை–அராபியா, பேர்சியகுடா / செங்கடல் 'கன்பரன்ஸ்':

22-02-73 [1] மதிப்பிறக்க மேலதிகக் கட்டணம் 5 சத வீதத்திலிருந்து 15 சத வீதம்.

28-11-73 [3] கப்பல் எரிபொருள் மேலதிகக் கட்டணம் 3. 54 சத வீதம்.

(x) இலங்கை / நீரிணைகள் / சீனு / யப்பான் / உடன்படிக்கை:

1-03-73 [1] நாணய மதிப்பிறக்க மேலதிகக் கட்டணம் 8.57 சத வீதத்திலிருந்து 18.57 சத வீதம்.

14-12-73 [3] கப்பல் எரிபொருள் மேலதிகக் கட்டணம் 5 சதவீதம்.

(xi) இலங்கை / ஐ. அ. நா. 'கன்பரன்ஸ்':

24-05-73 [1] நாணய மதிப்பிறக்க மேலதிகக் கட்டணம் 10 சதவீதம்

15-12-73 [2] அவசரகால கப்பல் எரிபொருள் மேலதிகக்கட்டணம் 5 சதவீதம்.

(xii) இலங்கை தென்னுபிரிக்கா சேவைகள் – வங்கி வழி:

1-12-73 [3] கப்பல் எரிபொருள் மேலதிகக் கட்டணம் தொன் ஒன்றுக்கு £ 1.00.

(xiii) இலங்கை / தென்னமெரிக்கா (ஆற்றுப்படுக்கை) சேவை:

1-12-73 [3] கப்பல் எரிபொருள் மேலதிகப்பணம் தொன் ஒன்றுக்கு £ 0.80.

(xiv) இலங்கை / பாக்கித்தான் சேவை:

| | | |
|---|---|---|
| 15-09-73 [3] | கராச்சித் துறைமுக நெருக்கடி மேலதிக கட்டணம் | 10 சதவீதம் |
| 1-11-73 | ,, | 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் |
| 16-11-73 | ,, | 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் |
| 7-12-73 | ,, | 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் தேயிலைக்கு மட்டும். |

1. 13-2-73இல் ஐ. நா. டொலரின் மதிப்பிறக்கத்தின்பேரில் செய்யப்பட்ட அதிகரிப்பு
2. செலவுகளின் அதிகரிப்பின்பேரில் செய்யப்பட்ட அதிகரிப்பு.
3. எரிபொருள் விலை அதிகரிப்புகளின்பேரில் செய்யப்பட்ட அதிகரிப்பு.

**இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகள்.**

இலங்கை அரசாங்கம் இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகளை வைத்திருக்கும் எல்லா நாடுகளையும் கணக்கில் எடுக்கையில், 1973 திசெம்பர் 31இல் இலங்கை சார்பாக, ரூ. 548 இலட்சங்கொண்ட ஒரு நிலுவை காணப்பட்டது.

1973ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகளை வைத்துள்ள நாடுகளிலிருந்தான வரவுகளின் (பெரும்பாலும் ஏற்றுமதி மூலம்) மொத்தப் பெறுமதிரூ. 5,286 இலட்ச அளவாகவும், இந்நாடுகளுக்குச் செலுத்தவேண்டிய தீர்ப்பனவுகள் (பெரும்பாலும் இறக்குமதிகளுக்கான) ரூ. 5,872 இலட்சமாகவும் விளங்கின. வேறுவிதமாகக் கூறின், 1973இல் இலங்கைக்கான வரவுகளைவிடச் செலுத்துமதியானது, ரூ. 586 இலட்சம் கூடுதலாக விளங்கியதெனலாம்.

மொத்த ஏற்றுமதியில் மரபு ரீதியான ஏற்றுமதிகளின் சதவீதம் அட்டவணை 11 (ஓ) 30 இற் காட்டப்பட்டபடி பின்வருமாறு அமைந்துள்ளது; ஐ. அ. குடியரசுக்குப் பெரும்பாலும் 100 சதவீதம், செக்கோசிலவாக்கியாவிற்கு 96 சதவீதம், கங்கேரியும் ஜே. ச. குடியரசும் 93 சதவீதம், போலாந்திற்கு 87.9 சதவீதம், ரூமேனியாவுக்கு 84.7 சதவீதம், ஐ. சோ. ச. கு. 77 சதவீதம், பல்கேரியாவுக்கு 74 சதவீதம், சீனுவுக்கு 59.7 சதவீதம் ஆகும். சிரியாவிற்கே மிகக் குறைந்த சதவீத மரபு ரீதியான பொருட்களை இலங்கை ஏற்றுமதி செய்தது. (6.5 சதவீதம்). சிரியாவிற்கு ஏற்றுமதியாக்கப்பட்ட மொத்த ஏற்றுமதிப் பெறுமதி 1973இல் 50 இலட்சமாக மட்டுமே விளங்கியது. இந்நாடுகள் யாவற்றையும் கவனத்திலெடுப்பின் மொத்த ஏற்றுமதிகளில் இலங்கையின் மரபு ரீதியான ஏற்றுமதிகளின் பெறுமதி 1973இல் 69.9 சதவீதமாக விளங்கியது.

**அட்டவணை II (ஓ) 29**

**இலங்கையின் இருபுடை ஒப்பந்தங்கள்;**

**1973இன் மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக வழமையான ஏற்றுமதிகள்**

பெறுமதி ரூபாய்களில்

| | வழமையான ஏற்றுமதிகள் | மொத்த ஏற்றுமதி | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக வழமையான ஏற்றுமதிகள் |
|---|---|---|---|
| 1. பல்கோரியா ... | 1,477,817 | 1,998.244 | 74.0 |
| 2. சீனு | 180,340,873 | 302,030,834 | 59.7 |
| 3. செக்கோசிலவாகியா ... | 20,196,404 | 21,047,274 | 96.0 |
| 4. சே. ச. கு. ... | 15,632,509 | 16,764,965 | 93.2 |
| 5. கங்கேரி ... | 14,259,524 | 15,201,678 | 93 8 |
| 6. போலந்து ... | 36,441,210 | 41,475,544 | 87.9 |
| 7. றூமேனியா ... | 9,217,072 | 10,881,345 | 84.7 |
| 8. சிரியா ... | 33.719 | 515,239 | 6.5 |
| 9. கொறியா ... | — | — | — |
| 10. ஐ. அ. கு. ... | 42,316,806 | 42,317,153 | 100.0 |
| 11. ஐ. சோ. ச. கு. ... | 58,827,325 | 76,334,143 | 77.1 |
| 12. யூகோசிலேவியா ... | — | — | — |
| மொத்தம் ... | 369.535,404 | 528.566,419 | 69.9 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

இலங்கையினுற்செய்யப்பட்ட கொடுப்பனவு உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கிணங்க வைத்திருக்கப்படுகின்ற இருபுடைத்தீர்ப்பனவுக் கணக்குகளின் தேறிய கூட்டு மொத்தக் காலாண்டு நிலைகள் கீழுள்ள அட்டவணை 11 (ஓ) 30இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை II (ஓ) 30

இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகள்*

1972 - 73ம் ஆண்டுக் கணக்குகளின் தேறிய கூட்டு மொத்தத்தின் காலாண்டுகளின்படியான நிலை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவிலுள்ள தேறிய நிலை | வரவு | பற்று |
|---|---|---|
| 1972 மாச்சு ... | — | 139.5 |
| யூன் ... | — | 129.6 |
| செத்தெம்பர் ... | — | 121.5 |
| திசெம்பர் ... | — | 120.3 |
| 1973 மாச்சு ... | — | 47.5 |
| யூன் ... | — | 64.0 |
| செத்தெம்பர் ... | — | 75.6 |
| திசெம்பர் ... | — | 54.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* சீனு, கொறியா, சிரியா, ஐ. அ. கு., ஐ. சோ. ச. கு., பல்கேரியா, செக்கோசெலவாகியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, கங்கேரி, போலாந்து, ரூமேனியா, யூகோசிலவாகியா.

வரவு: இலங்கை கொடுக்கவேண்டியது.

பற்று: இலங்கைக்குக் கொடுக்க வேண்டியது.

**வர்த்தக ஒப்பந்தங்கள்**

இலங்கைக்கும் மக்கள் சீனக்குடியரசிற்கும் இடையில் 1972, திசெம்பர் 18ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட ஐந்தாவது ஐந்தாண்டு வர்த்தகக் கொடுப்பனவுகள் உடன்படிக்கை 1.1.1973இல் நடைமுறைக்கு வந்தது. 1973, மாச்சு 1 ஆந்திகதியன்று இலங்கை அரசாங்கத்தின் வர்த்தகப் பணிப்பாளருக்கும், லண்டன் ஜே. எச். றயினர் அன்ட் கொம்பனி லிமிட்டெட்டுக்கும் இடையில் ஒரு சிறப்பு வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது இவ்வுடன்படிக்கையில் வர்த்தகப் பணிப்பாளரும் றயினர் அன்ட் கொம்பனியும் இணைந்து இலங்கைக்கு வருடாவருடம் 20 இலட்சம் ஸ்டேர்லிங் பவுணுக்கு சமமான பெறுமதியுள்ள இறக்குமதிகளையும் ஏற்றுமதிகளையும் செய்வதற்கான ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்வதாகவும், இருவரும் தமக்குள் ஒத்த உடன்பாட்டால் இத்தொகையை அதிகரிக்கலாமெனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் கீழ் எவ்வித வர்த்தக நடவடிக்கைகளும் 1973ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம் பெறவில்லை.

**பரந்த ஐரோப்பிய பொருளாதார சமூகமும் இலங்கையும்**

ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தில் பிரித்தானியா உட்புகுந்ததின் விளைவுகளிலொன்று, பிரித்தானியச் சந்தையில் இலங்கைக்கிருந்த பொதுநல

வமைப்புச் சலுகைகளை இழந்ததாகும். ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பொதுவான வெளிநாட்டுக் காப்பு வரியைப் பிரித்தானியா தழுவிக்கொண்டதும், இலங்கையின் ஏற்றுமதிகள்மீது பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடும்.

ஆபிரிக்க, கரிபியன், பசிபிக் சமுத்திரத்திலுள்ள அபிவிருத்தியடையும் பொது நலவமைப்பு நாடுகளுக்குச் சம தகுதியிலிருந்து விசேட வர்த்தக ஒழுங்குகள்வரை, சொந்த விருப்புரிமை கொடுக்கப்படுகின்றது. பொதுநல அமைப்பிலுள்ள ஆசிய நாடுகளைவிட இந்நாடுகள் பரந்த ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்திற்குத் தம் விருப்பப்படி ஏற்றுமதி செய்யும் வாய்ப்பைப் பெறுவதினுல் பிரித்தானிய சந்தையைப் பெறுவதற்கு இலங்கை ஐ. பொ. ச. அங்கத்துவ நாடுகளுடன் போட்டியிடவேண்டி நேரிடும்.

1974, சனவரி 1 ஆந் திகதியன்று பிரித்தானியாவிற்குச் சேரவேண்டிய காப்புவரி இணைப்பின் முதலாவது கட்டத்திலுள்ள சில விடயங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவேண்டுமென ஐ. பொ. ச. ஆணைக்குழு தமது அமைச்சரவைக்கு ஆலோசனை கூறியது. மீளாய்வு செய்து பொதுப்படையாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் விருப்புரிமைபற்றிய இச்சலுகைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. பொட்டலத்திலடைத்த தேயிலை, தேங்காய்த்துருவல், தேங்காய் எண்ணெய், தயாரிக்கப்படாத புகையிலை, தகரத்தில், அடைக்கப்பட்ட அன்னுசி, சின்னஇருல். காலணி போன்ற விடயங்களைப் பொறுத்தவரை இச்சலுகைகள் 1974, சனவரி 1ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இச்சலுகைகள் காரணமாக, இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளான தேயிலை (இதற்குத் தற்போது தீர்வைகள் நிறுத்தப்பட்டுள்ளது), றப்பர், தேங்காய்த்துருவல், தேங்காய் எண்ணெய் தவிர்ந்த கொப்பரு (வரிவிலக்குள்ளவை) ஆகியவை தற்போது தீர்வையின்றிப் பிரித்தானியா, ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்பவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்படலாம்.

இலங்கையினுல் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய ஏனைய ஏற்றுமதிகள் சில சிறிய ஏற்றுமதிகளேயாகும். இவற்றையே இலங்கை இப்பொழுது ஊக்குவிக்க முயற்சிக்கிறது.

**பண்ட உதவி.**

பதின்மூன்று நாடுகளாலும்,[1] ஒன்பது உதவித்திட்ட அமைப்புகளில்[2] ஆறு அமைப்புகளாலும் வழங்கப்பட்ட மொத்தப் பண்ட உதவி வரவுகள், 1973 காலப்பகுதியில் ரூ. 2,815 இலட்சமாக அமைந்ததுடன், 1972இலும் பார்க்க இது

---

1. நாடுகளினதும் அமைப்புகளினதும் பட்டியலுக்கு அட்டவணை 11 (ஒ) 32ஐப் பார்க்க.
2. ஒன்றிலிருந்து மூன்று வரையுள்ள திட்டங்கள் முற்ருகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ரூ. 667 இலட்சம் குறைவானதாயும் உள்ளது. கடனுதவி வழங்கும் நாடுகள், அமைப்புகள் என்பவற்றிலிருந்து பெறப்படும் உதவியின் விவரங்கள் நுகர்வு, இடைநிலைப் பொருட்கள், என்பன அட்டவணை 11 (ஓ) 32இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II (ஓ) 31**

**பண்ட உதவி ஒழுங்குத் திட்டம் — 1923 இல் வருகைகள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| நாடுகள் அமைப்பு | (1) இடைநிலை முதலீட்டுப் பொருட்கள் | | | | | | மொத்தம் | (1) நுகர்வோர் பொருட்கள் | | மொத்தம் | மொத்தம் (1)உம் (2)உம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | IV | V | VI | VII | VIII | IX | | VIII | IX | | |
| அவுத்திரேலியா ... | — | — | — | — | — | — | — | 12.6 | — | 12.6 | 12.6 |
| கனடா ... | — | — | — | 10.8 | 0.8 | 1.2 | 12.8 | 4.9 | 2.8 | 7.7 | 20.5 |
| டென்மார்க்கு ... | — | 0.7 | — | 12.6 | — | — | 13.3 | — | — | — | 13.3 |
| பிரான்சு ... | — | 6.7 | — | 17.7 | — | 4.9 | 29.3 | 4.4 | — | 4.5 | 33.7 |
| சேர்மன் சனநாயகக் குடியரசு | — | — | — | — | — | — | 0.3 | — | — | — | 0.3 |
| சேர்மன் சமஷ்டிக் குடியரசு .. | — | — | 9.8 | — | 1.3 | — | 11.1 | 3.3 | 12.0 | 15.3 | 26.4 |
| இந்தியா ... | — | 0.9 | — | 10.1 | — | 3.4 | 14.4 | — | — | — | 14.4 |
| இத்தாலி .. | 2.1 | — | — | — | — | — | 2.1 | — | — | — | 2.1 |
| யப்பான் ... | — | — | 0.4 | 57.2 | — | — | 57.6 | — | — | — | 57.6 |
| சுவீடன் ... | — | — | — | — | 4.3 | 10.7 | 15.0 | — | — | — | 15.0 |
| ஐக்கிய இராச்சியம் .. | — | 3.6 | 4.6 | 3.9 | — | 9.0 | 21.1 | — | — | — | 21.1 |
| அ. ஐ. நா. .. | — | — | — | — | — | — | — | 45.9 | — | 45.9 | 45.9 |
| ஐ. சோ. ச. கு. ... | — | — | — | — | — | — | 2.2 | — | — | — | 2.2 |
| ஐ. பொ. ச. ... | — | — | — | — | — | — | — | 8.9 | — | 8.9 | 8.9 |
| பன்னாட்டு முகவர் நிலையங்கள் | — | — | — | — | — | — | — | 4.7 | — | 4.7 | 4.7 |
| உலக உணவுத் திட்டம் .. | — | — | — | — | — | — | — | 2.8 | — | 2.8 | 2,8 |
| **மொத்தம்** ... | 2.1 | 11.9 | 14.8 | 112.3 | 6.4 | 29.2 | 179.2 | 87.5 | 14.8 | 102.3 | 281.5 |

மூலம்: திட்டமிடுதல், வேலைவாய்ப்பு அமைச்சு.

1973இற் பெறப்பட்ட உதவிகளின் முக்கிய பகுதி இடைநிலை, முதலீட்டுப் பொருட்களையும் (ரூ. 1,792 இலட்சம்), மிகுதி (ரூ. 1,023 இலட்சம்) நுகர்வுப் பொருட்களையும் அடக்கியுள்ளது. 1973இன் ஆகக்கூடிய அளவான உதவிப் பெறுகை ஏழாவது திட்ட அமைப்பின்கீழ் (ரூ. 1,123 இலட்சம்) பெறப்பட்டது.

இடைநிலை, முதலீட்டுப்பொருட்கள் தொகுதியின் முக்கிய உதவி இறக்குமதிகள் உரம் (ரூ. 455 இலட்சம்), இயந்திரங்களும் பாகங்களும் (ரூ. 276 இலட்சம்) மோட்டார்ப் பாகங்கள் (ரூ. 152 இலட்சம்) என்பவற்றை உள்ளடக்கும். நுகர்வுப்பொருட்கள் தொகுதியின்கீழ் கோதுமை மாவின் இறக்குமதி உத ரூ. 999 இலட்சமாகும்.

## அட்டவணை II (ஓ) 32

## 1973 இல் உதவி வருகைகள் – பண்டவகையானவை

| பண்டங்கள் | | பெறுமதி (ப. இ. ரூ.) | பங்குகளின் சதவீதம் |
|---|---|---|---|
| **இடைநிலை, முதலீட்டுப் பொருட்கள்** | | | |
| உரம் | ... | 45.5 | 16.2 |
| மோட்டார் உதிரிப்பாகங்கள் | ... | 15.2 | 5.4 |
| இழு பொறிகளும் துணைப் பொருட்களும் | ... | 9.8 | 3.5 |
| கைத்தொழில் மூலப் பொருட்கள் | ... | 6.9 | 2.5 |
| வர்த்தக வாகனங்கள் | .. | 8.9 | 3.2 |
| இயந்திரங்களும் உதிரிப் பாகங்களும் | ... | 27.6 | 9.8 |
| புதினத் தாள் | ... | 7.0 | 2.5 |
| மின்சார உபகரணங்கள் | .. | 5.7 | 2.1 |
| உருக்குத் தகடுகள் | ... | 7.6 | 2.7 |
| அலுமினியத் தகடுகள் | ... | 5.5 | 2.0 |
| உருக்கு உற்பத்திகள் | ... | 3.2 | 1.1 |
| பொறியியற் களஞ்சியம் | ... | 0.7 | 0.2 |
| மீன்பிடி வலைகள் | ... | 1.7 | 0.6 |
| கடல் பொறிகள் | ... | 0.9 | 0.3 |
| புகையிரத இயந்திரங்கள் | ... | 0.2 | |
| சீட்டு இயந்திரங்கள் | ... | 0.2 | ... |
| மரக்கூழ் | ... | 0.7 | 0.2 |
| பேருந்து உருவமைப்பு செய்யும் பொருட்கள் | ... | 0.1 | ... |
| தொலைபண்ணித் தொடர்பு உபகரணங்கள் | ... | 2.5 | 0.9 |
| வானொலிஉபகரணங்கள் | ... | 0.3 | 0.1 |
| குழாய்களும், பொருத்துக்களும் | ... | 3.6 | 1.3 |
| தட்டச்சு இயந்திரங்கள் | ... | 0.2 | ... |
| கல்நார் (அசுபெசுடொசு) | ... | 3.3 | 1.2 |
| நிறுக்கும் இயந்திரங்கள் | ... | 1.0 | 0.4 |
| கிராவுத் தாள் | ... | 11.6 | 4.1 |
| பேருந்து வண்டியின் அடிச்சட்டம் | ... | 3.4 | 1.2 |
| அச்சுத் தாள் | ... | 3.4 | 1.2 |
| ரயர்களும், ரியூப்களும் | ... | 2.5 | 0.9 |
| மொத்தம் | ... | 179.2 | 63.6 |
| **நுகர்வோர் பொருட்கள்** | | | |
| கோதுமை மா | .. | 99.9 | 35.5 |
| தாவர எண்ணெய் | ... | 1.4 | 0.6 |
| கருவாடு | ... | 0.6 | 0.2 |
| சீனி | ... | 0.2 | ... |
| பால் உற்பத்திகள் | ... | 0.2 | .. |
| மொத்தம் | ... | 102.3 | 36.3 |
| கூட்டு மொத்தம் | ... | 281.5 | 100.0 |

மூலம்: திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சு